











விடுதலைப்புலிகள்




குரல்: 134 | தை - மாசி, 2007 | அன்பளிப்பு: 12/=

# மகிந்த அரசின் போர் முயற்சியும் தமிழரது தற்காப்பின் அவசியமும்

**கொடூரமான முற்றுகைப் போர்முறையுடன், கிழக்கு மாகாணத்தில், தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்கும் இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்றுவரும் அதே நேரத்தில் வடக்குப் போர்முனையிலும் – வன்னி மாநிலம் மீதும் – பெரும் முற்றுகைப்போர் நடவடிக் கையைத் தொடக்கச் சிங்களப் படைகள் முன்தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளன.**

மகிந்த ராஜபக்ச முதல் - சரத் பொன்சேகா வரை சிங்களத்தின் அரசியல் - இராணுவத் தலைவர்கள் தமிழருடனான போரை விரிவாக்கித் தீவிரப்படுத்துவதிலேயே குறியாக உள்ளனர்.

தமிழருக்கு எதிராக இனவாதப் போர்க் கூச்சல்தான் இன்று சிங்களத்தின் பிரதான அரசியலாக உள்ளது. ஒரு போர் வெற்றி பற்றிய கற்பனையிலேயே சிங்கள ஊடகங்களும் மிதந்த படியுள்ளன.

வடபுலப் பெரும் போருக்கு முன் னோடியாக அங்கே வான் தாக்குதல்களைச் சிங்களப் படைத்தலைமை தீவிரப்படுத்தியுள்ளது. வடக்கில் உள்ள சிங்களப் படையணிகளின் தலைமைப் பொறுப்புக்களிலும் தீவிர மாற்றங்கள் செய்யப்பட்டு படைகள் போருக்குத் தயார்ப் படுத்தப்படுகின்றது.

தமிழ் மக்களைக் கொலைசெய்து வெறியாட்டம் ஆடிப் புகழ்பெற்ற சிங்களத்தின் இடைநிலைத் தளபதிகளைப் படையணிகளின் தளபதிகளாக சரத் பொன்சேகா நியமித்து வருகின்றார். 57 ஆவது படையணி என்ற பெயரில் புதிய தாக்குதல் படையணியையும் உருவாக்கி யுள்ளனர். இது வவுனியாவில் நிலைகொள்ள வைக்கப்பட்டுள்ளது.

மகிந்தரின் சீன விஜயமும் ஆயுதக் கொள்வனவுடன் இணைத்துப் பேசப்படுகின்றது. சிங்கள அரசிற்கு ஆயுதங்களை இப்போது வழங்கிவரும் நாடுகளில் சீனா முக்கியமானதாகும். பாகிஸ்தான், ஈரான் நாடுகளிலிருந்தும் அரசு ஆயுதத் தளபாடங்களை வாங்கிக் குவித்துவரு கின்றது.

கொழும்பில் மகிந்த அரசின் உறு தித் தன்மையும் இப்போது அதிகரித்துள்ளது. ஐ.தே.கா கட்சியிலிருந்து பிரிந்துவந்த நாடா ளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைப் பலத்தில் மகிந்த அரசு அரசியல் உறுதி பெற் றுள்ளது.

சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் உறுதித்தன்மை தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புப் போரை தீவிரப்படுத்துவதற்குத்தான் பயன்படுத்தப்படுவது சிங்களத்தின் ஒரு வரலாற்று வழமை.

(02 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு
www.eelamview.com

# ஒரு சர்வதேச ஆவணத்தின் பரிதாப நிலை

புலிகள் இயக்கத்திற்கும் சிங்கள அரசிற்கும் இடையில் போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு ஐந்து வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான வகையில் அரசியல் தீர்வு காண்பதுதான் உடன்பாட்டின் முக்கிய நோக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் இந்த வரலாற்று உடன்பாட்டைச் சிங்கள அரசு கசக்கிக் குப்பைக் கூடைக்குள் வீசிவிட்டது. நிரந்தர அரசியல் தீர்வு என்ற அந்த இலட்சியமும் இப்போது பகற்கனவாகிவிட்டது.

கடந்த ஐம்பது வருடகால தமிழ் - சிங்கள இனப்பிரச்சினை வரலாற்றில் தமிழர் தரப்புடன் செய்து கொள்ளப்பட்ட அனைத்து உடன்பாடுகளையும் சிங்கள அரசு கிழித்தெறிந்து அவற்றைக் கேவலப்படுத்தியது என்பது உண்மையே. இந்த உடன்பாடுகள் அனைத்துமே தமிழ் - சிங்களத் தரப்பினருக்கிடையேயான உள்நாட்டு உடன்பாடுகளாகவே இருந்தன.

உள்நாட்டுக்குள் இரு தரப்பாலும் செய்யப்படும் அரசியல் உடன்பாடுகளைச் சிங்கள அரசு மதிக்காமல் விட்டதன் எதிரொலியாகவே தற்போதைய போர்நிறுத்த உடன்பாடு சர்வதேசத்தின் முன்னிலையில் மூன்று தரப்புப் பங்குபெறும் அரசியல் ஆவணமாகப் பரிணமித்திருந்தது.

புலிகளின் குரல்

ஆயினும், சர்வதேசச் சமூகத்தை நேரடிச் சாட்சியாக வைத்துக்கொண்டு வரையப்பட்ட இந்த அரசியல் ஆவணத்தையும் சிங்கள அரசு காலில் போட்டு மிதித்து விட்டது.

சிங்களத்தின் இந்தப் பொறுப்புணர்ச்சியற்ற தன்மையைச் சர்வதேச சமூகமும் வேடிக்கை பார்ப்பது ஆச்சரியமளிப்பதாக உள்ளது.

சர்வதேச ஆவணம் ஒன்றை ஒரு தரப்பு மீறுமிடத்து அந்தத் தரப்பினருக்கு எதிராகச் சர்வதேச சமூகம் திரும்புவதும் சாத்தியமான அனைத்துவகை அழுத்தங்களையும் பிரயோகித்து அந்தத் தரப்பினரை வழிக்குக் கொண்டுவர முயற்சிப்பதும் தற்போது போர்நிறுத்த உடன்பாடு விவகாரத்தில் கடைப்பிடிக்கப்படாமல் போனது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியையும், கவலையையும் அளித்துள்ளது. 'தமிழரின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான மார்க்கம் இராணுவ வழிப்பட்டது' என்பதே சிங்கள அரசின் நிரந்தரக் கொள்கையாக இருந்து வருகின்றது. சிங்கள அரசின் இந்த இராணுவவாத அணுகுமுறை காரணமாகவே அனைத்து அமைதி வழி முயற்சிகளும் தவிடுபொடியாகி வருகின்றன.

'இலங்கையின் இனச்சிக்கலை இராணுவ வழியில் தீர்க்க முடியாது. அரசியல் தீர்வே காணப்படவேண்டும்.' என்று சர்வதேச சமூகம் இடைவிடாது கூறிவருகின்றது.

ஆனால் சிங்கள அரசு தொடர்ந்தும் சர்வதேச அபிப்பிராயங்களுக்குச் செவிசாய்க்காமல் போர்வழியை நாடித் தமிழ் மக்கள் மீது சொல்லொனாத் துன்பங்களைச் சுமத்தி அவர்களை இனப்படுகொலை செய்துவருவதை சர்வதேச சமூகம் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றது.

சிங்கள அரசானது தனது இராணுவ வழி அணுகுமுறைகளை நியாயப்படுத்தச் சர்வதேச பரிமாணம் கொண்ட சில அரசியல் சொற்பதங்களைப் பயன்படுத்தி உலக நாடுகளை ஏமாற்றிவருகின்றது.

"பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" "அரசின் இறைமை மற்றும் நில ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் உரிமை" என்ற வாசகங்களைப் பயன்படுத்திக்கொண்டு தமிழர் மீதான இனக்கொலையைச் சிங்கள அரசு நியாயப்படுத்த முனைகின்றது.

சிங்கள அரசின் இந்தக் கொலைகாரத் தந்திரத்தை நிராகரிக் காமல் சர்வதேச சமூகமும் மௌனமாக இருப்பது சிங்கள அரசிற்கு வசதியாகப் போய்விடும்.

அதனால்தான் உலக நாடுகளின் கண்டனங் களையும் பொருட்படுத்தாமல் தமிழ் மக்கள் மீது போர் அனர்த்தங்களைச் சுமத்தி தமிழின அழிப்பைத் தொடர் கின்றது.

சர்வதேச சமூகத்தின் எச்சரிக்கைகளைக் கரி சனைகளைப் புறந்தள்ளிவிட்டு இனப்படுகொலைகளைத் தொடரும் அரசுகளுக்கு எதிராகச் சர்வதேச சமூகம் வெற்றிகரமான நடவடிக்கைகளை முன்னர் எடுத்திருக் கின்றது.

அதன் விளைவாக தென் சூடான், கொசோவா, மொன்றநீக்ரோ மக்களுக்கு நின்மதியான வாழ்வும் அரசியல் விடுதலையும் கிடைக்க உலக சமூகம் ஏற்பாடுகள் செய்துள்ளது.

அங்கெல்லாம் ஆக்கிரமிப்பு அரசுகளின் இறைமை - நில ஒருமைப்பாடுகள் என்ற கோசங்களைச் சர்வதேச சமூகம் கருத்தில் எடுக்கவில்லை. தனது ஆட்பலத்தில் வசிக்கும் மக்களை இனப்படுகொலை செய்யும் ஒரு அரசிற்கு மேற்குறித்த அரச உரிமைகள் பற்றி குரல் எழுப்ப உரிமை இல்லை என்பதுதான் சர்வதேசத்தின் தார்மீக நிலைப்பாடாக இருக்கின்றது.

இந்தத் தார்மீக நிலைப்பாட்டை இலங்கை விவகாரத்தில் கடைப் பிடிக்கச் சர்வதேச சமூகம் பின்னடிப்பது ஒரு விளங்காத புதிராகவே தமிழ் மக்களுக்கு உள்ளது.

போர்நிறுத்த உடன்பாட்டையும் அப்பட்டமாக மீறி போரைத் தொடுத்து தமிழர் நிலங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டு தமிழ் மக்களையும் அகதிகளாக்கிக்கொண்டு மகிந்த அரசு சமாதானம் பற்றியும் பேசுவது எவ்வளவு அபத்தமாக உள்ளது.

ஒரு இன அழிப்பு அரசின் கைகளில் சிக்கி ஒரு சர்வதேச ஆவணம் கேலிப்பொருளாவதைச் சர்வதேச சமூகம் இன்னும் எவ்வளவு காலத்திற்கு பார்த்துக்கொண்டிருக்க விரும்புகின்றது.

போர்நிறுத்த உடன்பாடு சந்தித்துள்ள பரிதாபநிலை சர்வதேச சமூகத்தின் அரசியல் நேர்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இந்த அரசியல் ஆவணத்தில் நம்பிக்கை வைத்திருந்த தமிழ் மக்களையும் அரசியல் தீர்வு தொடர்பாக அவநம்பிக்கைக்குள் தள்ளியுள்ளது.

சர்வதேச சமூகம் தனது மௌனத்தைக் கலைத்துப் போர் வெறிகொண்டு இன அழிப்புச் செய்யும் சிங்கள அரசை தண்டிக்கும் வகையில் தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்குக் குரல் கொடுக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

---

**(01ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஜே.ஆர் அரசும் சந்திரிக்கா அரசும் இவ்விதமாக தாம்பெற்ற அரசியல் உறுதித் தன்மையைப் போரைத் தீவிரப்படுத்தவே பயன்படுத் தியிருந்தனர். இப்போது மகிந்தரும் அந்த வரலாற்றுத் தடத்திலேயே பயணிக்கின்றார்.

தமிழின அழிப்பு விடயத்தில் உலகின் கண்டனங்களையும் அரசியல் அழுத்தங்களையும் மகிந்த அரசு ஒரு பொருட்டாக மதிப்பதாகத் தெரியவில்லை. வன்னிமீதான ஒரு பெரும் போருக்காக சிங்கள அரசு அனைத்துவகைத் தயார்ப் படுத்தல்களையும் செய்துவருகின்றது என்பதுதான் உண்மையாகும்.

சிங்கள அரசின் இந்தப் பெரும்போரைத் துணிவுடன் எதிர்கொள்வதைத் தவிர தமிழ் மக்களுக்கு மாற்று வழிகள் ஏதுமில்லை.

தமிழரின் படைபல அதிகரிப்பும் கடந்த போர் காலங்களைப்போல் தமிழ் மக்களின் வீரச் செயற்பாடுகளும் சிங்களத்தின் போரை முறியடிக்கப் போதுமானவையாகும்.

அண்மைய மாதங்களில் ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் புலிகள் அணியுடன் இணைந்துள்ளனர். ஆட்பலத்தில் புலிகள் இயக்கம் பெரிய வளர்ச்சியைக் கண்டுவருகின்றது.

"வீட்டுக்கு ஒருவர் நாட்டிற்காக" என்ற போராட்ட கோசம் இன்று தமிழர் படை பலத்திற்கு நம்பிக்கையான அடித்தளமிட்டுவருகின்றது. இந்தப் போராட்ட கோசம் முழுமையடையும் வகையில் ஒவ்வொரு வீடும் ஒரு வீரனை அல்லது வீராங்கனையைக் களம் அனுப்பி இந்த ஆட்பல அதிகரிப்புத் திட்டத்தை முழுமையடையச் செய்விப்பது தமிழரின் வரலாற்றுக் கடமையாகிவிட்டது.

எதிரியின் ஜெயசிக்குறு ஆக்கிரமிப்புத் திட்டத்தைப் புலிகள் இயக்கம் முறியடித்து வெற்றிவாகை சூட உறுதுணையாக இருந்த வன்னி வாழ் மக்களே இனிவரப் போகும் பெரும் போரையும் முறியடிக்கப் புலிகள் இயக்கத்திற்கு ஒத்துழைப்புகள் வழங்கவேண்டும்.

தமிழீழத் தனியரசை அமைக்கும் நில மீட்புக்கான போர் வன்னிப் பெருநிலப்பரப்பை உந்துதளமாகக்கொண்டே இயங்கப்போகின்றது.

வரப்போகும் போர்க் காலத்தையும் அதன் நெருக் கடிகளையும் சவாலாக எதிர் கொண்டு போரை வென்று புதிய வரலாறு படைக்கத் தயாராகுவோம்.



www.eelamview.com

# இராசபக்சரின் இராச்சியம்

- க.வே. பாலகுமாரன் -

ஏலவே எழுதப்பட்டது போல சிங்கள அரசியல் பொதுவரங்கத்தில் நடைபெறும் பெரும் கேளிக்கை நிகழ்ச்சியாகியுள்ளது. அதன் இணையற்ற கேளிக்கை நாயகனாக மகிந்தர். தெற்கின் சாதாரணன் இப்போது சிறிலங்காவின் அசாதாரணன். பெலியத்தையின் பெரும் மகன் இப்போது அரசியல் நயவஞ்சகத்தின் தலைமகன். குள்ளநரி ஜே.ஆரை மிஞ்சி விட்ட பெருநரி. அரசியல் பங்குச் சந்தையில் இப்பொழுது கொடிகட்டிப் பறப்பது வரையறுக்கப்படாத மகிந்தரும் சகோதரரும் என்கிற வணிகக் குழுமமே. எதிலும் பத்து விழுக்காடு தரகுப் பணம் கேட்பதற்கு பசில் ராஜபக்ச என்று பெயர் என்பதே கொழும்புப் பேச்சு. மகிந்தரின் குழுமத்தின் பங்குதாரர்களோ மிக ஆச்சரியகரமானவர்கள். கி.மு, கி.பி என்பது போல மு.தா - பி.தா (முன்பு தாவியோர் - பின்பு தாவிக்கொண்டிருப்பவர்). காட்டிடை மரத்திடை மந்திகள் தாவுவது போல அரசியல்வாதிகள் தாவிக்கொண்டே இருக்கிறார்கள். கடைசித் தாவலின் ஆட்டக்கணிப்பு அறிக்கையிது. சிறிலங்கா சு. கட்சி - 58, எல்.எஸ்.எஸ்.பி - 01, சி.பி. - 02, இ.தொ.கா - 08, ம.ம.மு - 02, எம்.ஈ.பி - 02, பேரியல் - 02, டக்ளஸ் - 01, அதாவுல்லா - 02, ஜா.கெ உறுமய - 09, ஐ.தே.க மு.தா - 06+ பி.தா - 18, மு.காங்கிரஸ் - 06 + 04, மொத்தம் - 121. உலக அதிசயம் இது. எல்லாக்கட்சியும் ஆளும் கட்சிகளாகும் அதிசயம்.

121 பிரதிநிதிகளில் 104 பேருக்கு பதவிகள். (அமைச்சர் 52 - அமைச்சரற்ற அமைச்சர் - 33 - பிரதி அமைச்சர் - 19) தார்மிக அரசியல் மொழியில் கூறினால் எல்லா வகை விழுமியங்களும், சனநாயகப் பண்புகளும், அரசியல் நாகரிகமும் போட்டு மூடப்பட்ட பிணக்கிடங்கே சிங்கள அரசியல் கட்டமைவு. இதற்குள்ளே பேரினவாத வெறிபிடித்த போலித்துறவிகள், பாதாள உலகின் பசாசுகள், ஊழல் மன்னர்கள், வங்குரோத்து அரசியல்வாதிகள் - பேராசைக்காரர்கள் எல்லோரும் மகிந்தரின் கூட்டாளிகளாக, பிணங்களாக நாறுகின்றார்கள். இதனை எவ்விதம் அழைப்பது? அமெரிக்க அநீதிக்கெதிராக அமெரிக்காவில் இருந்துகொண்டே இடைவிடாது குரல் எழுப்பும் அறிஞரும் பண்பாளருமான நோம் சொம்ஸ்கி கூறுகின்றார்.

**“இம் முதலாளியக் கட்சிகளெல்லாம் உண்மையிலேயே வெவ்வேறானவை அல்ல. ஒரே கட்சியின் இரு கிளைகளே. இங்கு**

**அறியாமையே பலம்**
**அமைதியே போர்**
**அடிமைத்தனமே சனநாயகம்”**

மகிந்தரின் ஆட்சிக்குப் பொருத்தமான வரையறுப்பு. இப்போதெழும் கேள்வியென்னவென்றால் இத்தகைய அசாதாரண அரசியல் மாற்றம் ஏற்படுத்தப்போகும் விளைவுகள் எவ்வாறிருக்கும் என்பதுதான். நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலம் பெற்றுள்ள நிலையில், மகிந்தர் இனி என்ன செய்யப்போகின்றார்?. இலங்கையின் சிக்கல்களுக்கு அவர் வழங்கப்போகும் தீர்வென்ன? பிணிகளுக்கு மருந்தென்ன?தரும ஆசுப்பத்திரிபோல மாறிவிட்ட சிறிலங்காவின் நவீன ஓடலியாகியுள்ள மகிந்தர் வழங்கும் மருந்துக்கலவை எவ்வாறிருக்குமென நாம் ஊகிக்க முடியும். அபாயகரமான நச்சுக்கலவையிது. பேரினவாதம், இராணுவவாதம், இரண்டகம் கலந்த கலவை. இவற்றினால் உடனடியாக எற்படும் மிகப் பாதக விளைவு இலங்கையின் சனநாயகக் கட்டமைப்பின் மீதான அதிர்ச்சிகரமான தாக்கங்கள் தான். சனநாயம் என்பதன் அர்த்தமே பொறுப்பும் தகுதியும் வாய்ந்த எதிர்க்கட்சியிலேதான் உள்ளது என்பார்கள். ஆளும் கட்சியின் தவறுகளை ஆக்கபூர்வமாகச் சுட்டிக்காட்டி, அவை எல்லை மீறாது கண்காணித்து முடியாதுவிடத்து அடுத்த அரசாங்கத்தை அமைக்க ஆயத்தமாக இருத்தல். 13 நாடாளுமன்றங்கள், 16 எதிர்க்கட்சித் தலைவர், (சிலபேர் பலமுறை) 59 சுதந்திர தினங்கள். இன்றைய நிலையில் மிகப் பரிதாபகரமான, பலவீனமான அரசியல் முன்னெடுப்பு நிறைந்த எதிர்க்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சியுமாக பாரம்பரிய பலம்மிக்க ஐ.தே.க. காட்சி தருகின்றது. தனது லாயத்தைவிட்டு குதிரைகள் வேகமாக ஓடுவதை முகவாயைத் தடவியவாறே பார்த்திருக்கும் ரணில் நிரந்தரமாக எதிர்க்கட்சி வரிசையா என்கிற கேள்வி சிங்களத்தில் எழுகின்றது.

இதேவேளை பாரம்பரிய எதிர்க்கட்சி பலவீனமடைய அதை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த 38 பிரதிநிதிகளைக் கொண்ட ஜே.வி.பிக்கோ அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. ஏனெனில் அவர்கள் விரும்பிய பெரு வாய்ப்புக் கிட்டுகின்றது. ஆனால் அவர்கள் முழுமையாக ஆயத்தமாகாத நிலையில் பெரிதும் எதிர்பார்க்காத வேளையில் வருகின்றது. மகிந்தரை இனிமேல் நிழல் திரையாக, பகடையாகப் பயன்படுத்த முடியாமல் போகும் வேளையில் அவர் பலவீனம் அடைவதற்குப் பதிலாக பலத்தோடு ஜே.வி.பிக்கே சவால் விடும் நிலையில் - எக்குத் தப்பான நேரத்தில் இவ்வாய்ப்பு வந்துள்ளது. எனவே பலம்மிக்க எதிர்க்கட்சியாகி அடுத்த அரசை அமைக்கும் ஆளும் கட்சியாக தனித்து தேர்தலில் நின்று வெல்லும் வல்லமையை ஜே.வி.பி பெற்றுள்ளதா என்பது கேள்விக்குறியே. அவர்களது ஒழுங்கான கட்டமைப்பு, தொழிற்சங்க மாணவர் பலம், தீவிர பரப்புரை யுத்திகள் கவனத்தில் கொள்ளப்பட்டாலும் மகிந்தரின் நரித்தனம் அடக்குமுறைக்கு எதிராக, (அதாவது தமிழ் மக்களை ஒடுக்கப் பயன்படுத்துமாறு ஜே.வி.பி கோரிய அதே அடக்குமுறைகள்) ஜே.வி.பி தாக்குப்பிடிக்குமா? காலம் சொல்லவேண்டிய பதில் இது. ஆனால் எம் மக்கள் ஒன்றை உறுதியாகச் சொல்லுவார்கள். இன ஒடுக்குமுறை, இன மேலாதிக்க நிலைப்பாட்டிலிருந்து கொண்டு முன்னைய இரு தடவைகளிலும் விட்ட அதே தவறுகளை விட்டவண்ணம் மக்கள் நலனை முன்னிலைப்படுத்தும் முற்போக்கான அரசாங்கத்தை அமைக்கப் போவதாக ஜே.வி.பியினர் கூறுவது காணல் நீரே. இவை எவ்வாறிருப்பினும் தன்னை நிலைப்படுத்த மேலும் காலம் கோரவோ தீர்வுகளைப் பின்தள்ளிப் போடவோ மகிந்தரால் இனி முடியாதென்பது தெளிவு. இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் அவர் கொடுத்திருக்கும் உறுதிமொழி இதையே சுட்டுகின்றது. எனினும் மகிந்தர் முன்னால் மூன்று தெரிவுகள் உள்ளன. எல்லாவற்றையும் திசை திருப்பும் ஏமாற்றுத்தன யுத்திகளைத் தொடர்ந்தும் கையாண்டு எல்லா காதிலும் பூ சுத்துவதா? (அரைகுறைத் தீர்வு, பேச்சுவார்த்தை - காலம் இழுத்தடிப்பு) அல்லது புலிகள் மேல் பழியைப் போட்டு பேச்சுக்கு வரவழைக்கவே போரெனக்கூறி பெரும்போரைத் தொடுப்பதா? அல்லது உண்மையாகவே நீதியானதொரு அரசியல் தீர்வை முன்வைப்பதா? இறுதித் தெரிவைச் செய்ய ஜே.வி.பியும், ஜாதிக கெல உறுமயவும் விடாதென்பதற்கு அப்பால் மகிந்தரின் சிங்கள மனமும் விடாதென்பதே இமாலய உண்மை. எவை எப்படியிருப்பினும் அரசியல் தீர்வைக் காணவே கட்சித்தாவலை ஏற்கிறேன், புலிகளைப் பேச்சுக்கழைக்கவே போர் செய்கின்றேன் என தொடர்ந்தும் அவர் கூறும் பசப்புகளுக்கு அப்பால், இவ் யானை அளவு பாரிய அமைச்சரவை எனும் பழுவைத் தொடர்ந்து சிங்களத்தால் தாங்கமுடியாது, இதனை நிருவகிக்க முடியாதென்பது ஒருபுறம். மறுபுறமோ போட்டி, பொறாமை, உட்பூசல், பகைமை நிரம்பிய ஒரு கைதேர்ந்த கூட்டத்தை ஒரு மூட்டைக்குள் கட்டி எவ்வளவு காலம் வைத்திருப்பது? இப் பாவச்சுமையை இறக்க அவர் பொதுத்தேர்தலுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை என கொழும்பு ஆய்வாளர் பலரும் கருதுகின்றார்கள். இவ்வாறு மகிந்தரின் அரசியல் சித்து விளையாட்டுக்களைத் **தந்திரோபாய அடிப்படையில் வெற்றியும் மூலோபாயத்தில் படுதோல்வியுமென** வரலாறு விரைவில் வகைப்படுத்தும்.

இதேவேளை சிங்களவர்கள் திகைப்போடும், சர்வதேசம் வியப்போடும் பார்த்து நிற்க எம் மக்களோ கண்ணீரும், செந்நீரும் சிந்தி எப்போதும் போலவே எல்லாவற்றையும் தாங்கியும் தாக்குப்பிடித்தும் அடுத்து வரும் நாட்களின் அனைத்து விளைவுகளுக்கும் முகம் கொடுக்க ஆயத்தமாகின்றார்கள். இவ்விடத்தில் மிக முக்கிய பாடமொன்றை எம் மக்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். வரலாற்றின் துலக்கமான உண்மைகளைத் தூசுதட்டிக் காண்பிக்கின்றார்கள். பிறர்க்கு துயரத்தையும் தண்டனையையும் வழங்குபவர்கள் தமக்கு எத்தகைய துயரமும் தண்டமும் காத்திருப்பதை அறியார் என்கிற வராலாற்றின் முதுமொழியைச் சிங்களத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் சுட்டும் தகுதி எம் மக்களுக்கேயுரியது. **இப்போது துலக்கமாகும் பேருண்மை என்ன?** சிங்களத்தில் உலகத்தாரால் உயர்வாகப் பேணப்படும் சொல்லொன்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அது கடைநிலை மதிப்பைத்தன்னும் இங்கு பெறவில்லை. அதுதான் **ஒப்பந்தம், உடன்பாடு, பௌறொன்று, சந்தாயை, எம்ஒயு, எகிரிமென்ட்** என பலவாக பல மொழிகளில் அழைக்கப்படும் சொல். சிங்கள அரசியல் அகராதியில் இல்லாத சொல்.

இத்தனை காலமும் தமிழ் மக்களோடும் பின் இந்தியத் தரப்போடும் பின் சர்வதேச முகதாவோடு செய்த உடன்பாடுகளைக் கிழித்தெறிந்து திமிராடிய சிங்களம் இறுதியாக சிங்களவர் சிங்களவரோடு செய்த உடன்பாடுகளையே கிழித்தெறியத் தொடங்கிவிட்டது. இங்குள்ள நகைப்பு என்னவென்றால் மகிந்தரோடு இணைய முற்பட்ட கட்சிகள் தங்களோடு ஒரு புரிந்துணர்வு உடன்பாட்டினை செய்யுமாறு கோரியபோது மகிந்தர் ஒரேயடியாக மறுத்துவிட்டமை கவனிக்கத்தக்கது. கடந்த சனவரி 28ம் திகதியன்று கண்கொள்ளாக் காட்சியொன்று கொழும்பில் நடந்தேறியது. செய்தியாளர் முன்னிலையில் ஐ.தே கட்சி தவிசாளர் ருக்மன் கடந்த வருடம் ஒக்டோபர் 12ம் திகதி செய்யப்பட்ட இருகட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வுப் பத்திரத்தைக் கிழித்தெறிந்தார். இக்காட்சியை 1958ம் ஆண்டு ஏப்பிரல் 09ம் திகதி அலரி மாளிகையின் முன் குந்தியிருந்து ஆர்ப்பாட்டம் செய்த பிக்குகள் முன் பண்டாரநாயக்கா பண்டா - செல்வா உடன்பாட்டினைக் கிழித்தெறிந்த காட்சியோடு எம் மக்கள் தொடர்புபடுத்துகின்றார்கள். இங்குள்ள மிகச் சுவையான விடயம் போர்நிறுத்த உடன்பாட்டினைக் கிழித்தெறியக் கோரியும் நோர்வேயை வெளியேற்றக் கோரியும் 2004ம் ஆண்டு சந்தாயை என்கிற பெயரில் மகிந்தவோடு ஜே.வி.பியினர் செய்த உடன்பாட்டினை மகிந்தர் கிழித்தெறிந்த விதம் தான். ஆகவே இதிலிருந்து பெறும் நீதி என்ன? பேசுவதே மிகக் கடினம். அவ்வாறு பேசி உடன்பாட்டிற்கு வந்தாலும் உடன்பாட்டைப் பேணுவதே அதைவிட மிகக் கடினமாயின் முடிவுதான் என்ன? ஜே.வி.பியினருடனான மகிந்தரின் உடன்பாட்டிற்கு முக்கிய காரணமாக இருந்த மங்களவிற்கு நடந்தவற்றை நாங்கள் இப்போதும் காண்கின்றோம்.



வரலாற்றின் சில பக்கங்கள் இப்போது புரட்டப்படுகின்றன. லண்டன் ரைம்ஸ் சனவரி 27, 1986 ஜே.ஆர் சொல்லுகிறார். “நான் டெல்லியைப் பற்றியோ, லண்டனைப் பற்றியோ வேறெந்த நாட்டைப்பற்றியோ கணக்கில் எடுக்கமாட்டேன். எனது இராணுவம் நன்கு பயிற்றப்பட்டு நன்றாக ஆயுதமயமாக்கப்பட்டுள்ளது. ஒரு இராணுவப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே சரி. நான் இப்போரை வென்றுகொண்டிருக்கிறேன். எனக்கு வெற்றியே முக்கியம் வேறெதுவும் அல்ல.” 1990 சனவரி 18 ரஞ்சன் சொல்கின்றார். “புலியைத் தேடியழிக்கப் புறப்பட்டுவிட்டேன். எதையும் அரைகுறையாகச் செய்து எனக்குப் பழக்கமில்லை. நான் பிரபாகரனுக்கு விடுகின்றேன் சவால். அவர் எனது தலையை எடுக்கவிரும்புகிறார். நான் அவரது தலையை எடுப்பேன்” 1997 டிசம்பர் 14 ரத்வத்தை சொல்கிறார் “நான் பிரபாகரனோடு கை குலுக்குவேன். எப்போது? அவர் தோற்றபின், நான் வென்றபின். அப்போது நாம் உலக இராணுவங்களுக்கு கரந்தடிப் போர்முறை பற்றி ஒன்றிரண்டு விடயங்களைக் கற்பிப்போம்.” இப்போது இறுதியாக மகிந்தர். வாய்கள் வேறு வார்த்தைகள் ஒன்று.

அன்பாளனும் பண்பாளனும் நாட்டுப்பற்றாளனுமான சு.வி. சொல்லிச் சென்றுள்ளார்.

இன்றைய இரவை அவனிடம் இழந்தோம்
இனிவரும் பகலும் எமதென்பதில்லை
எங்கள் வீதியை அவனிடம் இழந்த பின்
எங்கள் முன்றிலும் எமதென்பதில்லை - எனவே
எங்கள் வீதியை எமக்கென மீட்போம்
எங்கள் முன்றிலை நிச்சயம் செய்வோம். ●

**மகிந்தர் இனி என்ன செய்யப்போகின்றார்?. இலங்கையின் சிக்கல்களுக்கு அவர் வழங்கப்போகும் தீர்வென்ன? பிணிகளுக்கு மருந்தென்ன? தருமாசுப்பத்திரிபோல மாறிவிட்ட சிறிலங்காவின் நவீன ஓடலியாகியுள்ள மகிந்தர் வழங்கும் மருந்துக்கலவை எவ்வாறிருக்குமென நாம் ஊகிக்க முடியும். அபாயகரமான நச்சுக்கலவையிது.**



www.eelamview.com

# யுத்தத்தை நோக்கி




ஐந்து வருடத்தின் முன் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நோர்வேயின் அனுசரணையோடு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னான காலத்தில், சர்வதேச அரசியல் நிலைமைகளின்படி இத்தீவில் மீண்டும் ஒரு முழு அளவிலான யுத்தம் வெடிக்க வாய்ப்பில்லை என்பதே அரசியல் ஆய்வாளர்களின் மிகத் திண்மையான கருத்து நிலைப்பாடாக இருந்துவந்தது. ஆயினும் இன்று சர்வதேச நிலைமைகளில் மாற்றம் ஏதும் நிகளாதபோதும் யுத்தம் வந்துவிட்டது.

சர்வதேச வர்த்தக அரசியல் நிலைமைகளின் நலன் பொருட்டு இலங்கைத் தீவை யுத்தமற்ற ஸ்த்திரமான அரசியல் நிலவும் பூமியாகப் பேண வேண்டும் என்ற ஒரு தேவை சர்வதேச சமூகத்திற்கு சில வருடங்களின் முன்பே மேலெழுந்துவிட்டது. கொங்கொங் நாடு சீனாவிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தேவை அதிகம் முக்கியத்துவத்தைப் பெற்றது.

2001 செப்ரெம்பரை தொடர்ந்து மேற்கு மயப்பட்ட சர்வதேசச் சமூகம் தன் அரசியலுக்கு முட்டுக்கட்டையாக இருந்த பல உலக விடயங்களைத் தமக்குச் சார்பாகக் கையாளக்கூடிய புறநிலையை படைத்தன. இதனால் சர்வதேச அரசியல் திருப்பம் கண்டது. இவ்வாறு உருவாகிய புதிய சர்வதேச அரசியல் நிலைமைகளின் கீழ், அப்போது இலங்கைத் தீவில் நிகழ்ந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகள் வலுச் சமநிலையை அடைந்து விட்டிருந்த சூழலில் இலங்கைத் தீவை சமரச முயற்சியின் மூலம் யுத்தமற்ற பூமியாக்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. இதற்கு விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் இணங்கிக் கொண்டமை தோற்றம்கொண்ட புதிய புறநிலையை மேலும் வலுப்படுத்தியது.

மேற்சொன்ன அடிப்படையின் பொருட்டு உருவாகிய புதிய யுத்தநிறுத்தச் சூழலிலிருந்து எத்தரப்பாயினும் யுத்தத்திற்குச் செல்ல சர்வதேசச் சமூகம் அனுமதிக்கப் போவதில்லை என்ற கருத்து நிலை பெற்றது. கூடவே, திருப்பம் கண்ட சர்வதேச நிலைமைகளின் கீழ் யுத்தத்திற்குச் செல்லாமற் தடுக்கும் அல்லது யுத்தத்திற்குச் செல்லும் தரப்பை தண்டிக்கும் வல்லாண்மையை சர்வதேசச் சமூகம் கொண்டும் இருந்தது. இதன் பிரகாரம் யுத்தத்திற்கு திரும்பவியலாத

**- பிரபு புத்திரன் -**

ஒரு சர்வதேசச் சூழல் விரும்பியோ விரும்பாமலோ புற நிலை யதார்த்தத்தின்படி கட்டமைந்திருந்தது.

இப்பொழுது நாட்டில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கிழித்தெறியப்படவில்லையேயாயினும் யுத்தம் வந்துவிட்டமை மிகவும் வெளிப்படையானது. யுத்தத்தைத் தடுக்கும் அல்லது யுத்தத்தை வலிந்து வெளிப்படையாகத் தொடங்கிய அரசாங்கத்தைத் தண்டிக்கும் வல்லாண்மை சர்வதேச சமூகத்திடம் இருந்தும் அதனை அது பிரயோகிக்கவில்லை. ஆய்வுகளைப் பொய்ப்பித்த இந் நிலைமை ஏற்பட்டது எவ்வாறு?

ஏற்கனவே தொடங்கிய சமாதானம் தோல்வி கண்டுவிட்டமை தான் மெய்யான யதார்த்தம். பேச்சு மேசையில் நெகிழ்ந்து கொடுக்கத் தயாரில்லாத அரசதரப்பின் அணுகுமுறைதான் இதற்குக் காரணம் என்பது பலவிடயங்களில் வெளிப்பட்டது. இது பகிரங்கமாக ஒப்புக் கொள்ளப்படாவிட்டாலும் சர்வதேசச் சமூகத்தால் விளங்கப்பட்ட ஒன்று தான். இதற்கு இடைக்காலத் தன்னாட்சி அலகையோ, சுனாமி நிவாரணக் கட்டமைப்பையோ, துணை இராணுவக் குழுக்களையாவது கட்டுப்படுத்திய உயிரச்சுறுத்தலற்ற சூழலையோ வளங்காமல் சமாதானம் மேற்கொண்டு நகர்வதென்பது நடக்கக்கூடிய கரியமல்ல என்பது சர்வதேசச் சமூகத்தால் விளங்கப்படாமலில்லை.

ஆனால் இதற்கு சமாதானத் தோல்விக்கு உள்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம்தான் காரணம் என்ற மேம்போக்கான பார்வையுண்டு. ஆட்சி மாற்றத்தால் தங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக தங்கள் வசதிக்காக இத்தகைய வாதத்தை சில சக்திகள் முன்வைக்கின்றன.

> **‘தெற்கில் உருவாகிய இந்த மனப்பாங்கின் பின்னணியில்தான் மகிந்த சிந்தனை வெற்றிகண்டது. அவ்வரில்லாமல் மகிந்த வென்றதனாற்றான் இந் நிலைமை தெற்கில் உருவாகியதென்பது தவறானது. இந்த நிலைமை உருவாகுவதற்கு சர்வதேச சமூகம் தன் அரசியல் நடவடிக்கைகளினால் அரசாங்கத்தின் பக்கம் சார்ந்துள்ளதான தோற்றப்பாட்டைக் காட்டியமை முக்கிய காரணம் எனலாம்.’**

ஆனால் உண்மை எதுவெனில், மூன்று வருட சமாதானகாலத்தில் அகப் புற அரசியல் நிலைமைகளால் சிங்கள மக்களுக்குச் சாதகமாக வலுச்சமநிலை மாறிவிட்டது என்ற ஒரு மனப்பாங்கு ஆழமாகத் தெற்கில் உருவாகியமை தான் சிங்கள அரசு நெகிழ்வைக் கடைப் பிடிக்காமைக்கான மிக அடிப்படையான காரணம். சமாதான காலத்தில் விடுதலைப்புலிகள் அக நிலைமைகளாலும், சுனாமி அனர்த்தத்தாலும் பலவீனமடைந்து விட்டார்கள் என்றும் 'புலிகளுக்கு எதிரான சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னல்' என்ற ரணிலின் பிரச்சாரத்தின் விளைவாக புலிகளை சீண்டி யுத்தத்தைத் தொடங்கவைத்து சர்வதேசச் சமூகத்தைக் கொண்டு புலிகளைத் தண்டிக்க வாய்ப்பிருக்கின்றது என்றும் ஒரு வலுவான அரசியல் அவா சிங்கள மக்களிடம் தெற்கில் உருவாகியது. இதனால், சிங்கள இனத்துவ மனப்பாங்கு மேலெழுந்து சமாதானத்தை முன்னெடுப்பது தேசவிரோதம் என்ற நிலையை தோற்றுவித்தது. இத்தகைய நிலைகளால் ஆட்சியாளர்கள் இதற்குச் செவிசாய்க்க வேண்டியிருப்பதாக தம்மை நியாயப்படுத்தியும் கொண்டனர். ஆனால் இத்தகைய நிலையைத் தொற்றுவித்த சூத்திரதாரிகளே அவர்கள்தான். மேலும் இந்த நிலையை மாற்றியமைக்க அவர்கள் தம் பங்கிற்கு எந்தவொரு முயற்சியைத்தானும் எடுத்திருக்கவில்லை

தெற்கில் உருவாகிய இந்த மனப்பாங்கின் பின்னணியில்தான் மகிந்த சிந்தனை வெற்றிகண்டது. அவ்வாரில்லாமல் மகிந்த வென்றதனாற்றான் இந் நிலைமை தெற்கில் உருவாகியதென்பது தவறானது.

இந்த நிலைமை உருவாகுவதற்கு சர்வதேசச் சமூகம் தன் அரசியல் நடவடிக்கைகளினால் அரசாங்கத்தின் பக்கம் சார்ந்துள்ளதான தோற்றப் பாட்டைக் காட்டியமை முக்கிய காரணம் எனலாம். இதற்கு வொசிங்டன் மாநாடு, புலிகள் மீதான கனடிய, ஐரோப்பியத் தடை போன்ற இன்னபிறவற்றைக் கூறலாம்.

இவற்றின் விளைவால் அரசாங்கம் யுத்தத்தில் இறங்கியது. அதைத் தடுக்கவோ தண்டிக்கவோ சர்வதேசச் சமூகம் தன் சக்தியைப் பிரயோகிக்க விரும்பவில்லை. ஆனால் சமாதானத்திலிருந்து தம் கால்களை விடுவிக்கவுமில்லை. புலிகள் தோற்கும் நிலையில் இப்பொழுது உள்ளனர் என்ற சிங்கள அபிப்பிராயத்திற்கு சரி, பிழை காணாமல் சமரசத்தை சாத்தியப்படுத்த முடியாது. யுத்தத்தின் பயனாய் வலுச் சமநிலையில் புதிய நிலைமைகள் நிரூபிக்கப்படாமல் தோல்வியடைந்த சமாதானத்திற்கு உயிரூட்ட முடியாதென்பதை அவர்கள் விளங்கிக் கொண்டதன் குறிகாட்டியாகவே இதனைக் கொள்ளமுடியும். ஆக சர்வதேச அரசியற் புறநிலை யுத்தத்தை அனுமதித்து அதன் புதிய விளைவுக்காக காத்திருக்கின்றது.

இந்த யுத்தம் படைவலுவில் உருவாக்கப் போகும் புதிய விளைவே தமிழர் தலைவிதியின் நிர்ணயம் என்பதே அரசியல் மெய்மையின் வெளிப்படையாக இருக்கின்றது. இதனாற்றான் எல்லாரும் எல்லாமும் யுத்தத்திற்காக என்ற கோசம் இங்கு தீவிரம் பெறுவது தவிர்க்கவியலாது இருக்கின்றது. ▲

# 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையும் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கமும்



பிரேமதாசா அரசுடனான பேச்சுவார்த்தை முறிவடைந்து 1990 யூனில் மீண்டும் போர் வெடித்த போது 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வசிக்கத்தொடங்கினார். அன்றிலிருந்து சிறிநீரக மாற்றுச் சிகிச்சைக்காகக் கடல்வழி மூலம் பாலா அண்ணை வெளிநாடு செல்லும் வரை அவர் தமிழீழத்திலேயே வசித்தார்.

பாலா அண்ணை தாயகத்தில் வசித்த சுமார் 10 ஆண்டு காலம் முழுவதும் தனது பல்வேறு வேலைகளுக்கு மத்திமிலும் எமது இயக்கத்தின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையின் வழிகாட்டியாக இருந்து பல்வேறு வழிகளில் உதவினார்.


விடுதலைப்புலிகள்
தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட அத்திவாரம்
விடுதலைப்புலிகள்
விடுதலைப்புலிகள்
போராட்டம் தொடரும்

விடுதலைப்புலிகள் பத்திரிகை சிறப்பான வகையிலும், அரசியல் மற்றும் இராணுவ விடயங்களைத் தாக்கமிகு வகையிலும் எடுத்துச் சொல்வதற்கு எமது ஏட்டின் வாயிலாக கருத்துப்பரப்புரை செய்த காலப்பகுதியில் பாலா அண்ணையின் ஆலோசனைகளும், உதவிகளும் பத்திரிகையின் வளர்ச்சிக்கும் – வெற்றிக்கும் உறுதுணை புரிந்தன.

போரோ! சமாதானமோ! எதுவாக இருந்தாலும் அந்த அந்தக் காலப் பகுதியில் – அந்தந்த விடயங்களுக்கு ஏற்ப தலைவரின் கருத்தை – விளக்கங்களை எமக்குத் தெளிவுபடுத்தி இயக்கத்தின் நிலைப்பாடுகளை எமது பத்திரிகை வாயிலாக வெளிக்கொணர்வதில் பாலா அண்ணை பெரும்பங்கு வகித்தார்.

பத்திரிகை வெளியீட்டு அனுபவத்திலும் – எழுத்துப் பணிகளிலும் ஈடுபட்ட அனுபவம் குறைந்த போராளிகளாகிய எங்களுக்கு அந்தக் காலத்தில் 'இதழியல்' தொடர்பான அறிவூட்டல்களையும் – கருத்துப்பரப்புரை தொடர்பான எழுத்து நுட்பங்களையும் சொல்லிக்கொடுத்து பாலா அண்ணை எங்களை வழிப்படுத்திவந்தார்.

1984ம் ஆண்டு தமிழ் நாட்டில் இருந்து 'விடுதலைப்புலிகள்' இதழை தலைவர் ஆரம்பித்துவைத்திருந்தார். தமிழ்நாட்டில் இருந்து பன்னிரு இதழ்கள் வரை 'விடுதலைப்புலிகள்' ஏடு வெளியிடப்பட்டிருந்தது. அன்றைய காலகட்டத்திலும் பத்திரிகையின் மேற்பார்வையாளராக பாலா அண்ணாவையே தலைவர் நியமித்திருந்தார்.

போராட்டத்தின் ஆரம்ப நிலையான அன்றைய காலகட்டத்தில் 'விடுதலைப்புலிகள்' ஏட்டின் மூலம் உலக விடுதலைப் போராட்டங்கள் பற்றி – போராட்டத் தலைவர்கள் – அவர்களின் கோட்பாடுகள் பற்றி பாலா அண்ணை எழுதி வெளியிட்ட கட்டுரைகள் போராளிகள் மத்தியிலும் – மக்கள் மத்தியிலும் நன்கு பிரபல்யமாகியிருந்தன. தமிழ்நாட்டின் வசதிக் கேற்ப அப்போது வெளிவந்த அந்தப் பன்னிரு இதழ்களும் நவீன அச்சு இயந்திரத்தின் உதவியுடன் அழகுற வெளிவந்திருந்தன.

1986ம் ஆண்டின் பிற்பகுதியில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ்நாட்டை விட்டகன்று தாயகம் வந்து போராட்டத்தை நேரடியாக வழிநடாத்தத் தொடங்கியபோது தமிழ்நாட்டில் 'விடுதலைப்புலிகள்' ஏடு அச்சாவது நிறுத்தப்பட்டது. பின்னர் நடந்த இந்திய – புலிகள் போர்க்காலத்திலும் பத்திரிகை வெளிவரவில்லை.



இந்தியப் படையின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து 1990 பெப்ரவரி மாதம் 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையை மீண்டும் ஆரம்பிக்குமாறு தலைவர் ஆணையிட்டிருந்தார். எமது இயக்கத்தின் கொள்கைப் பரப்பு ஏடாகவும் – அதேசமயம் எமது இனத்திற்கும் போர் அறிவை வழங்கி – போர்ப்பண்பூட்டும் வேலையையும் 'விடுதலைப்புலிகள்' பத்திரிகை செய்யவேண்டும் என்றும் தலைவர் பணித்திருந்தார்.

பதின்மூன்றாவது இதழிலிருந்து 'விடுதலைப்புலிகள்' ஏடு தலைவரின் எண்ணத்தைச் சுமந்தவாறு, அதன் கருத்துப் பரப்புரைப் பணியைச் சிறப்புறச் செய்துவருகின்றது.

பத்திரிகைக்கு ஆலோசனைகளை வழங்குவதுடன் மட்டும் பாலா அண்ணையின் கடமை முடியவில்லை. தேவை ஏற்படும் போதெல்லாம் தானே இயக்க நிலைப்பாடுகளைக் கட்டுரைகளாக வரைந்து 'விடுதலைப்புலிகள்' பத்திரிகைக்கு மெருகூட்டிவந்தார்.

குறிப்பாக, பேச்சுவார்த்தைக் காலங்களில் தனது நேரடி அனுபவங்களூடாகப் பேச்சு மேசையில் என்ன விவாதிக்கப்பட்டது. அந்தப் பேச்சுக்களின் விளைவுகள் என்ன! என்ற விபரங்களை விளக்கக் கட்டுரைகளாக எழுதி 'விடுதலைப் புலிகள்' ஏட்டிற்குத் தருவார்.

அதுமட்டுமல்ல, தலைவர் முன்னெடுக்கும் சமூக வேலைத் திட்டங்கள் மற்றும் நிர்வாக இயந்திரங்கள் தொடர்பான கோட்பாட்டு விளக்கங்களைத் தலைவரின் சிந்தனைக்கு ஏற்ப எழுதி 'விடுதலைப் புலிகள்' ஏட்டின் வாயிலாக வெளியிட்டுப் பத்திரிகைக்கு ஒரு கருத்துக்கனதியைக் கொடுத்தார்.

பெண் விடுதலையும் – புலிகளும், மதமும் – புலிகளும், சாதீயமும் – புலிகளும்... என்ற தலைப்புக்களில் எமது விடுதலை இயக்கத்தின் கொள்கை நிலைப்பாடுகளை விளக்கிப் பாலா அண்ணை எழுதிய விளக்க உரைகள் பல 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையில் வெளிவந்திருந்தன. அவை மக்களிடம் நல்ல வரவேற்பையும் பெற்றிருந்தன.

எழுத்து என்பது, அதுவும் தேச விடுதலைக்கு உரம் சேர்க்கும் எழுத்து என்பது வெறும் சொற்கூட்டங்களாக அல்லாமல் மக்களின் இதயத்தை ஊடுருவித் தாக்கத்தை விளைவிக்கும் வகையில் சிறப்பாக இருக்கவேண்டும் என்பதில் பாலா அண்ணை உறுதியாக இருப்பார். அதனால், எழுதும்போது கருத்துக்களைச் சுருக்கமாகவும் – அதேவேளை தெளிவாகவும் எழுதவேண்டும் என்று போதிப்பார்.

பாலா அண்ணையின் வழிகாட்டலில் 'விடுதலைப்புலிகள்' பத்திரிகை மிக தரமாகவே வெளிவந்தது. இனிமேலும் அவரது நினைவுகளைத் தாங்கியவாறு 'விடுதலைப்புலிகள்' ஏடு வெளிவரும்.



**எல்லாளன்**



www.eelamview.com

# இனவாதம்

## உட்கட்சி வெளிக்கட்சிப் போட்டிகளூடன் குரூர வடிவம் பெறப்போகின்றது. நாசகாரம் தத்துவமுலாம் பூசுகின்றது.

**"இறைமை"**
**"தேசிய பாதுகாப்பு"**
**"ஒற்றையாட்சி"**
**"பயங்கரவாதம் வேறு, இனப்பிரச்சினை வேறு"**
**"இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு"**

என இவை ஐந்தையும் ராஜபக்ஷ அரசாங்கம் நேரம் தவறாது மந்திர வாக்கியங்களால் தினமும் உச்சாடனம் செய்துவருகின்றது. இதிலுள்ள வேடிக்கை என்னவெனில் முதல் உள்ள நான்கும் ஐந்தாவதற்கு எதிரானவை. இந்த ஐந்து அம்சங்களையும் இவை பற்றிய அரசியல் நடைமுறைகளையும் நாமிங்கு விஞ்ஞானபூர்வமாகப் பரிசீலிக்க வேண்டும்.

இறைமை என்பதை அரசிற்குரியதாயும் அதைச் சிங்களவற்கே உரிய தனியுடமைச் சொத்தாயுமே ராஜபக்ஷ அரசாங்கமும் சிங்களப் புத்திஜீவிகளும் சிங்கள அரசியல்வாதிகளும் கருதுகின்றனர். தெளிவாகச் சொன்னால் சிங்கள ஆதிக்கத்தைத் தான் அவர்கள் இறைமை என்று அழைக்கின்றனர்.

இறைமை மக்களுடையது. தேசிய இனரீதியாக எடுத்தால் அது தேசிய இனங்களுடையது. தமிழ் மக்களது இறைமை சிங்கள மக்களது இறைமையிலிருந்து பிறக்கமுடியாது. தமிழ் மக்களது இறைமையை சிங்கள மக்களது ஆணையைப் பெற்ற ராஜபக்ஷ அரசாங்கத்தால் மீறமுடியாது.

இங்கு கவனிக்கவேண்டிய விடயம் என்னவெனில் இறைமை என்ற பதம் அரசியல் ஏட்டில் அங்கீகாரமுள்ள ஒருபதம். அதேவேளை இனமேலாதிக்கம் அங்கீகாரமுள்ள பதமல்ல. ஆதலால் அவர்கள் தங்களது சிங்கள இன மேலாதிக்கத்திற்கு இறைமை என்ற ஒரு தங்கமுலாம் பூசுகிறார்கள்.

அடுத்து "தேசிய பாதுகாப்பு" என்ற விடயத்தை எடுத்துக்கொள்வோம். "தேசிய பாதுகாப்பு" என்பதும் உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பதம்தான். இங்கு தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை மீறுவதையும், தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறை புரிவதையும், தமிழ் மக்களது தாயகத்தை வெட்டிச் சின்னாபின்னப்படுத்துவதையும், தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடும் இராணுவ, பொலிஸ் அட்டூழியங்களையும் இவர்கள் "தேசிய பாதுகாப்பு" என அழைக்கின்றனர். சிங்கள அரசியலில் "தேசிய பாதுகாப்பு" என்ற பதத்தின் அர்த்தம் தமிழின அழிப்பு என்பதுதான். இன அழிப்பிற்கான ஓர் இராணுவக் கோட்பாடாக அவர்கள் இந்த "தேசிய

**- சாரணன் -**

பாதுகாப்பு"என்பதைப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறு இன அழிப்பைப் பிரகடனப்படுத்திவிட்டு இனப்பிரச்சினைக்கு அரசு இராணுவத்தீர்வை நாடாது; அது அரசியற் தீர்வைத்தான் மேற்கொள்ளும் என்று சிறுபிள்ளைத்தனமாகக் கூச்சலிடுகிறார்கள்.

"மக்கள் வேறு", "புலிகள் வேறு" என்று சொல்லிக் கொண்டு புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை என்றும், மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அரசியல் அதிகாரப்பகிர்வுத் தீர்வு என்றும் ஒரு சோடனையைக் காட்டி தமது இராணுவ அட்டூழியங்களை நியாயப்படுத்து கின்றார்கள். பதவிக்கு வந்து ஓராண்டைத் தாண்டிய பின்புங்கூட அரசியற்தீர்வு விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் ராஜபக்ஷ அரசாங்கம் செய்ததாயில்லை. மறுவளமாக அது தீர்விற்கு எதிரான கோட்பாடுகளைத்தான் முன்வைத்துள்ளது.

ஒற்றையாட்சி அரச இயந்திர அமைப்புத்தான் இனப்பிரச்சினையின் இயங்குசக்தி. இத்தகைய ஒடுக்குமுறை நிறைந்த ஒற்றையாட்சிக்கு எதிராகத்தான் தமிழ்பேசும் மக்கள் நீண்டகாலமாய் அதுவும் ஆயுதம் தரிக்காது போராடி வந்தனர். அப்போராட்டங்களுக்குச் செவிசாய்க்காது சிங்கள ஆட்சியாளர்கள் இராணுவமுனையில் தமிழ் பேசும் மக்களை ஒடுக்கிவந்ததன் விளைவேதான் ஆயுதப் போராட்டமாகும். இங்கு சிங்கள ஆட்சியாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க முன்வராது பிரச்சினைக்கு எதிரான போராட்டத்தைப் பிரச்சினை என சித்தரிக்கின்றார்கள். ஆதலால் போராட்டம் தீர்விற்கானதே தவிர பிரச்சினை போராட்டமல்ல. போராட்டத்தை தாம் உருவாக்கிய இன ஒடுக்குமுறைப் பிரச்சினையிலிருந்து தனிமைப்படுத்திவிட்டு, போராட்டமே பிரச்சினை என்று முத்திரை குத்தும் பதமாகவே இலங்கையின் பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல; அது "பயங்கரவாதப் பிரச்சினையே" என்று புதுவேதம் ஓதுகிறார்கள்.

தலைகீழாகப் புரட்டிவிடப்பட்டிருக்கும் அரசியல் விஞ்ஞானப் பதப் பிரயோகங்களைத்தான் நாமிங்கு தலைமேலாக நிறுத்தியுள்ளோம்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் வேடதாரித்தனங்களை அதன் ஏனைய அரசியல் நடைமுறைக்கூடாக மேற்படி விடயங்களுடன் செயல்பூர்வமாகத் தொடர்புபடுத்தி ஆராயவேண்டியது இன்னொரு முக்கிய அம்சமாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியும், அதற்கான அரசியல் வாழ்வுரிமைகள் பற்றியும் பேசிவரும் ராஜபக்ஷ எத்தகைய அரசியல் வழிமுறைகளைத் தனது அரசியல் வாழ்வில் பின்பற்றி வருகிறார் என்பதை எடைபோடல் இங்கு அவசியமாகும்.

முதலில் ஜே.வி.பியுடன் ராஜபக்ஷ ஓர் ஒப்பந்தத்திற்கு வந்திருந்தார். அவ்வொப்பந்தத்தின் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியினரது முழு ஆதரவையும் பெற்று வாக்குப் பெட்டியை நிரப்பினார். அந்த ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்துதான் அங்கம் வகித்த சந்திரிகா



அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திட்டிருந்த சுனாமிக் கட்டமைப்பிற்கான ஒப்பந்தத்தை எவ்வித நாகரிகமுமின்றிக் கிழித்தெறிந்தார். இவ்வாறு அந்த மிகவும் மனிதாபிமானப் பணிக்குரிய ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவதிற் தேர்ச்சி பெற்ற அந்தக் கை, தனது அரசியற் கன்னித்தன்மையைத் தான் பதவிக்கு வந்த அந்தக் கன்னிமைக் காலத்திலேயே கிழித்தெறிந்த அந்தக் கை, பின்பு தன்னை அரவணைத்த ஜே.வி.பியினுடன் செய்திருந்த அரசியற் சாகச ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவதில் அதற்கு தயக்கமிருக்கமுடியாது போனது.

அதாவது ராஜபக்ஷவுடனான ஜே.வி.பியின் கூட்டு என்பது, யூ.என்.பிக்கு எதிரான கூட்டு என்பதுதான் அதன் முதன்நிலை அர்த்தம். ஆதலால் யூ.என்.பியுடன் கூட்டுச் சேர்வது என்பது, திரு. ரணில் விக்கிரமசிங்கவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தமை என்பது ஜே.வி.பியின் நோக்கு நிலையில் நின்று பார்க்கையில் ஜே.வி.பியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறும் செயல்தான். அதேவேளை ஜே.வி.பியினரால் ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்டுக்கள் என்று பெரிதும் வர்ணிக்கப்பட்ட மிலிந்த மொறகொட, கருஜெயசூரிய, ஜீ.எல்.பீரிஸ் போன்ற யூ.என்.பியினரை தமது அரசாங்கத்துடன் இணைத்துக்கொண்டமையானது ஜே.வி.பிக்கு இழைக்கப்பட்ட நேரடித் துரோகம் என்றே ஜே.வி.பி கூறுகின்றது. இப்படித் தன்னைத் தலையில் தூக்கிவைத்த ஜே.வி.பிக்கு ராஜபக்ஷ பச்சைத் "துரோகம்" செய்தார் என்பதுடன் ராஜபக்ஷவின் ஏமாற்று வித்தையை விளக்கவல்ல ஒரு முக்கிய தொடக்கமும் ஆகும்.

அடுத்து ரணிலுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மாறாக ராஜபக்ஷ 18 யூ.என்.பியினரை பதவி கொடுத்துத் தன்பக்கம் இழுத்துக்கொண்டார். ரணிலுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கட்சி மாறல், தாவல் பற்றி எதுவும் சொல்லப்பட்டிருக்கவில்லை என்று ராஜபக்ஷ சிறுபிள்ளைப் பாடம் கூறுகிறார். புரிந்துணர்வு என்பது பேனா மையிலிருந்து பிறக்கும் வெறும் எழுத்தல்ல. அது செயல்பூர்வமான இதயங்களைத் தொட்டெழுதும் பண்பாட்டர்த்தம் கொண்டது, ஒரு ஜனாதிபதியாக இருப்பவர், அதுவும் ஜனாதிபதித் தேர்தலில் தன்னுடன் போட்டியிட்டு மிகவும் சொற்ப வாக்குகளால் மட்டுமே தோல்வி அடைந்திருந்த முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரும், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான ஒருவருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தையே மீறுகிறார் என்றால் அத்தகைய ஒருவர் கூறும் அரசியற் தீர்வென்பது, அதிகாரப்பகிர்வென்பது ஒரு சிறிதும் நம்பிக்கைக்குரியதாய் இருக்கமுடியாது.

எனவே ஒப்பந்தங்கள், புரிந்துணர்வுகள், சமரசத் தீர்வுகள், சமாதானம் என்று ராஜபக்ஷ கூறக்கூடிய எந்தவொரு வழிமுறையும் கொப்புப் பாய்வதற்கான ஒரு பதுங்கலே தவிர அது ஒரு கொள்கை இருப்பல்ல.

அடுத்து தனது சொந்தக் கட்சிக்குள் குடும்ப ஆதிக்கப்போட்டி ஏற்பட்டபோது மங்கள சமரவீர அவரது வலக்கரமாய் இருந்தார். அவரைப் பயன்படுத்தி ஜனாதிபதி வேட்பாளருக்கான ரிக்கற்றை தனது கைக்கு எடுத்துக்கொண்டார். அத்துடன் அவரைப் பயன்படுத்திக் கட்சிக்குள் உள்ளோரைத் தன்பக்கம் வென்றெடுத்தும் கொண்டார். சு.க வைச் சேர்ந்த பலரை ராஜபக்ஷ பக்கம் சாயவைத்ததில் மங்கள சமரவீரவிற்குப் பெரும் பங்குண்டு. மங்கள சமரவீரதான் தனது அரசாங்கத்தில் பிரதமர் என்ற தோற்றத்தையும் நம்பிக்கையையும் கொடுத்திருந்தார். ஆனால் அவர் தேர்தலில் வெற்றி பெற்றதும் தனது சொந்தச் சகோதரர் களையும் தனது நெருங்கிய குடும்ப உறவினர்களையும்தான்

> **சிங்களத் தலைவர்கள் பதவிக்கு அடிபதிக்கும் முதல்படியும் சரண்புகும் இறுதிக் குகையும் இனவாதம்தான்**

அதிகாரமுள்ள இடங்களில் அமர்த்தினார். மங்கள சமரவீரவைப் பிரதமராக்குவதென்பது தனது சகோதரர்களின் அதிகாரங்களுக்கும் இருப்பிற்கும் குந்தகமானது என்பது அவரின் நிலைப்பாடு அந்த வகையிற் பார்த்தால் ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றியின் முதலாவது வெட்டுக்கடா ஆடாய் மங்கள சமரவீர காணப்பட்டார். இதனை இராசதந்திரம் என்று அழைப்பது அரசியல் அநாகரிகம். இது, இந்த முதல் உதாரணம் அரசியலில் நிர்வாணமான ஓர் ஏமாற்று, இந்த முதலாவது புள்ளியிலிருந்துதான் இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு பற்றிய ராஜபக்ஷவின் கதாப்பிரசங்க உரைக்கு நாம் விளக்க உரையை ஆரம்பிக்க வேண்டும். தனது அரசியல் அதி காரத்தைப் பேணவல்ல, தனது குடும்ப ஆதிக்கத்தைத் தக்கவைக்கவல்ல அரசியல் மையம்தான் ராஜபக்ஷவின் அரசியல் இலட்சியமாகும். கட்சிக்குள் பிரச்சினை ஏற்பட்ட போது கட்சிக்குள்ளேயே தன்னுடன் கூட்டுச் சேர்ந்து போர்க்கொடி பிடித்த மங்கள சமரவீர, தன்னுடன் கூட்டுச் சேர்ந்த இன்னொரு கட்சியான ஜே.வி.பி, தன்னுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட யூ.என்.பி இவற்றையெல்லாம் தனது ஏமாற்று வித்தைகளால் பகைத்து நம்பகத்தன்மையற்ற தலைவனாகக் காட்சி அளிக்கும் ராஜபக்ஷ தற்போது கட்சிக்குள்ளேயும், கூட்டுக் கட்சியோடும், எதிர்க்கட்சியோடும் மோதுண்ணும் நிலைக்கு வந்துள்ளமையால் திசைதிருப்பு அரசியலை இனவாதப் பக்கம் திருப்ப முடியுமே தவிர தீர்வின் பக்கமல்ல.



www.eelamview.com

# போரும் – பேச்சும் மகிந்தரின் சதிவழி

சு.ரவி

மகிந்த அரசு போருக்கும் அறைகூவல் விடுக்கின்றது. அதேசமயம் தீர்வுத் திட்டம் வெளியிடப்போவதாகவும் அறிவிப்புச் செய்கின்றது.

புரிந்துணர்வு உடன்பாட்டை நிராகரித்ததாக அறிவிக்காமல் தமிழ்மக்கள் மீது போர் தொடுத்து – நிலம் விழுங்கி – மக்களை அழித்து – உடன்பாட்டை கிழித்தெறிந்துள்ளது.

இதேசமயம் சமாதான வழிமுறையில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகள் செய்வதுபோலவும் மகிந்த அரசு அறிவிப்புக்களைச் செய்தவண்ணமுள்ளது.

மகிந்தரின் போர் நடவடிக்கையை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கும் சர்வதேச சமூகமும் வெற்றுக் கண்டணங்களைத் தவிர வேறெதுவும் உருப்படியாகச் செய்யவில்லை.

ஆனால், மகிந்தர் அறிவிக்கும் சமாதானம் – தீர்வுத்திட்டம் என்ற வெற்றுப் பிரகடனங்களுக்கு அவை முக்கியத்துவம் கொடுத்துவருகின்றன.

புரிந்துணர்வு உடன்பாட்டை முறித்துக்கொண்டு மகிந்த அரசு போர் செய்யப்போகின்றது என்ற உண்மைநிலை எழுந்தபோது,

சமாதானத்திற்கும் – சர்வதேசத்திற்கும் முடிச்சுப்போட்டு மகிந்த அரசுக்கு சர்வதேச சமூகம் எச்சரிக்கைகளை விட்டிருந்தது. வோசிங்டன் மாநாடு – டோக்கியோ பிரகடனம் உட்பட எல்லாவற்றிலுமே சமாதானத்தையும் உதவி நிதியையும் இணைத்தே சர்வதேச சமூகம் கருத்து வெளியிட்டிருந்தது.

ஆனால், இப்போது அது தனது முன்னைய வாக்குறுதிகள் – எச்சரிக்கைகள் அனைத்தையும் கைவிட்டு விட்டது போலுள்ளது. 4.5 பில்லியன் டொலர் கடன் உதவியை சிறிலங்கா அரசுக்கு வழங்கவேண்டும் என்ற மகிந்த அரசின் கோரிக்கையை உலக வங்கி ஏற்று விட்டது என்று சிங்கள அரசு குதூகலிக்கின்றது.

உதவி நிதி வழங்கல் பற்றிய செய்தி வெளியில் வந்து சமாதானப் பிரியர்களை அதிருப்திக்குள்ளாக்கியவுடன், அதைத் தணிக்கும் வகையில் சர்வதேச சமூகம் மழுப்பிப் பேசுகின்றது.

நிதி உதவிக்கோரிக்கையை சிங்கள அரசு முன் வைத்தது. அதை உலக வங்கி கொடுத்து விட்டதாகக் கருதக் கூடாது என்று உலக வங்கி தரப்பில் அறிவிப்பு வெளியிட்டது.

இணைத்தலைமை நாடுகளின் எச்சரிக்கையையும் மீறி மகிந்த அரசு தமிழர்கள் மீது போர் தொடுத்து – பெரும் அழிவுகளை, அவலங்களை ஏற்படுத்திவருகின்ற இந்த நேரத்தில் சிங்கள அரசின் நிதி உதவிக்கோரிக்கையை உலகவங்கி ஏற்றுக் கொண்டுள்ளதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

குறித்த அந்த நிதி உதவிக் கூட்டத்தில் மகிந்த அரசின் போர்முனைப்பிற்குத் தண்டனை கொடுக்கும் வகையில் உலகவங்கி பகிரங்கமாகச் செயற் பட்டிருக்கவேண்டும் என்பதே சமாதானப் பிரியர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.



போர் என்றால் முழுமையாகவும் தீர்வுத்திட்டம் என்றால் அரைகுறையாகவும் செயற்படுத்துவதுதான் சிங்கள அரசின் வழமையாகும் இந்த விடயத்தைப் பொறுத்தவகையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா – சந்திரிகா அம்மையார் – மகிந்த ராஜபக்ஷ என்று எந்த வித்தியாசமும் இல்லை. அனைத்து சிங்கள ஆட்சியாளர்களினதும் அரசியல் மனநிலை அதுதான்.

ஆனால், மகிந்தரின் போர் வெறியை – சர்வதேச சமூகத்தை மதிக்காத ஆணவப்போக்கை மேலும் தட்டிக்கொடுத்து – அவரை உற்சாகப்படுத்துவது போலவே உலக வங்கி செயற்பட்டுள்ளது.

உலக வங்கி உட்பட சிங்கள அரசுக்கு உதவி வழங்கும் நாடுகள் முன்னரும் இவ்வாறுதான் நீதிக்கும் – தர்மத்திற்கும் புறம்பாக நடந்துகொண்டு தமிழ் மக்களை ஏமாற்றத்திற்கும் – விரக்திக்கும் உள்ளாக்கி உள்ளனர். அந்த வரலாறே இப்போதும் தொடர்கின்றது போலுள்ளது.

முன்னர் சிங்கள அரசுக்கு நிதி உதவிகளை வாரி வழங்கிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது செயற்பாட்டை நியாப்படுத்த புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக – அமைதி வழியில் இனப்பிரச்சினையைத் தீர்க்கவிரும்பாத கடும்போக்குவாதிகளாகக் காட்டிவிட்டு சிங்களத்திற்கு நிதி உதவிகளைச் செய்துவந்தார்கள்.

ஆனால், கடந்த ஐந்துவருட சமாதான காலத்தில் சர்வதேசத்தின் முன்னிலையிலேயே புலிகள் அமைப்பு அரசியல் ரீதியாகத் தன்னை நிரூபித்துக்காட்டியிருந்தது.

பேச்சு மூலம் தீர்வுகான புலிகள் இயக்கம் முழுமையாகப் பாடுபட்டது – சர்வதேச சமூகம் வெளிப்படையாகப் பாராட்டும் அளவிற்குப் பேச்சுக்களில் விட்டுக் கொடுப்புக்களும் – பொறுமைகளும் காத்தது. மறுபுறத்தில் சிங்களஅரசு சர்வதேச சமூகத்தைத் தூக்கியெறிந்து ஆணவப்போக்குடன் நடந்துகொண்டது. செய்யப்பட்ட உடன்பாடுகளையே அமுல்படுத்த மறுத்து முரண்டு பிடித்தது. அதனால், சர்வதேசத்தின் கண்டனங்களுக்கும் – வெறுப்பிற்கும் உள்ளாகி இராஜதந்திர ரீதியாக முடக்கப்பட்டும் கிடந்தது.

புலிகள் மீது சிங்கள அரசு நீண்டகாலமாகச் சுமத்திவரும் குற்றச் சாட்டுக்களான 'கடும்போக்கு' - 'போர் வெறி' –'அமைதி வழியில் நம்பிக்கையின்மை' – போன்ற அனைத்துவகைக் குற்றச்சாட்டுக்களும் சிங்கள அரசிற்கே பொருந்தும் என்று சர்வதேச ஊடகங்களே ஒப்புக்கொண்டிருந்தன.

உண்மை நிலை இவ்வாறிருக்க, சர்வதேச சமூகமே இந்த அரசியல் யதார்த்தத்தைப் புறந் தள்ளிவிட்டு போர்வெறி கொண்ட சிங்கள அரசிற்கு பெருந்தொகை உதவி நிதியை அளிக்க முயற்சிப்பது தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக் கியுள்ளது.

சிங்களத்தின் போர் இயந்திரத்தை இயக்கத் தேவையான நிதிவளத்தை சிங்கள அரசு கொண்டிருக்கவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. நிதி உதவிகள் – அபிவிருத்தி உதவிகள் என்ற பெயர்களில் சர்வதேச நாடுகள் வழங்கும் உதவி நிதிகளை சிங்கள அரசு போர் செய்ய பயன்படுத்துகின்றது என்பதே உண்மையாகும்.

இந்த உண்மை சர்வதேச சமூகத்திற்கும் நன்கு தெரியும்.

அதனால் தான் சமாதான முயற்சிகளுக்கும் – உதவி நிதி வழங்கல்களுக்கும் இடையே பிரிக்கமுடியாத முடிச்சைப் போட்டு சமாதான காலத்தில், செயற்பட்டிருந்தது.

தான் போட்ட முடிச்சைத் திடீரெனத் தானே அவிழ்த்துவிட்டு சிங்கள அரசின் போர்முனைப்பை ஆதரிக்கும் வகையில் சர்வதேச சமூகம் நடக்க முயல்வதேன்! என்ற கேள்வி இன்று பலமாக எழுப்பப் படுகின்றது.

சம்பூரில் – வாகரையில் சிங்களப்படைகள் நிகழ்த்திய மனித அவலத்தை உலக நாடுகள் எல்லாமே கண்டித் திருந்தன. ஐ.நா சபையிடமிருந்து சிங்கள அரசுக்குக் கண்டனம் வரும் அளவுக்கு சிங்களப்படைகள் அங்கெல்லாம் மனித அவலங்களை விதைத்தன. இப்போது, மேலும் நிலங்களை ஆக்கிரமிக்க சிங்களப்படைகள் முன்முயற்சித் தாக்குதல்களில் ஈடுபட்டபடியுள்ளன.

போர்வெறி கக்கி சிங்களத் தலைவர்கள் உரைகளை நிகழ்த்தி வருகின்றனர். தமிழர்களைப் பட்டினிபோட்டு – தண்டித்து வருகின்றனர்.

இலங்கைத் தீவில் இரத்தம் சிந்தும் போர் தொடரவேண்டுமா! அல்லது ஆக்கபூர்வமான வகையில் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமா! என்பது சர்வதேச சமூகத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது.

சிங்கள அரசின் போர் முனைப்பைக் கண்டும் காணாதது போலவும் விட்டு விட்டு சர்வதேச நாடுகள் இருக்க முற்படுமானால் சமாதான முயற்சிகளும் எட்டாக்கனியாகவே மாறிவரும் ஆபத்தும் உள்ளது.

போர் என்றால் முழுமையாகவும் தீர்வுத்திட்டம் என்றால் அரைகுறையாகவும் செயற்படுத்துவதுதான் சிங்களஅரசின் வழமையாகும். இந்த விடயத்தைப் பொறுத்தவகையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா – சந்திரிகா அம்மையார் – மகிந்த ராஜபக்ஷ என்று எந்த வித்தியாசமும் இல்லை. அனைத்து சிங்கள ஆட்சியாளர்களினதும் அரசியல் மனநிலை அதுதான்.

சமாதானத்தைக் கொண்டுவர இருந்த பொன்னான வாய்ப்பை சர்வதேச சமூகம் முன்னர் கைநழுவவிட்டுவிட்டது என்பதே உண்மையாகும். சிங்கள அரசுக்கு செயல் ரீதியான எச்சரிக்கைகளைக் கொடுக்காமல் கண் துடைப்புக்காக வெறும் கண்டனங்களை வெளியிட்டிருந்தது. ஆனால் சிங்கள அரசு அவற்றைக் கருத்தில் எடுக்காமல் இப்போது பெரும் போரைத் தொடுத்துள்ளது.

இந்த நிலையில் சிங்களத்தின் போர்வெறிக்குத் தீனிபோடுவதுபோல சர்வதேச நிதி உதவிகள் அதற்கு வழங்கப்படக்கூடாது என்பதே தமிழர்களின் விருப்பமாகும்.

மகிந்தரின் போர்முனைப்பு அதிகரிப்பதும் தணிவதும் சர்வதேச சமூகத்தின் நிதி உதவி வழங்கலில்தான் தங்கியுள்ளது.



www.eelamview.com

# தமிழீழப் பிரசவமும் — சர்வதேச சமூகப் பிரவேசமும்

**சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும் போராட்டத்தில் குதித்தோம்.**

**(-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்)**

உலகில் நாடு என்ற அமைப்பு இருக்கும் வரை புதிய நாடுகள் தோன்றிக்கொண்டிருக்கும். மனித வரலாற்றிற்கு முடிவில்லை. நாடுகளின் எண்ணிக்கையும் அவற்றின் எல்லைக்கோடுகளும் நிரந்தரமல்ல. இது பண்பாட்டை மேன்மைப்படுத்தும் யுகம். இன, மொழி, வாழ்விட அடையாளங்களை முதன்மைப்படுத்தும் காலம். ஒரே மொழி பேசும் இனம் தனது வாழ்விடத்தை நாடாக மாற்றத் துணிவது வரலாற்றின் நியதி. புதிய நாடுகள் பல்லின நாடுகளில் இருந்து தோன்றுகின்றன. பெரும் நிலப்பரப்புக்களைக் கொண்ட சாம்ராஜ்யங்கள் நாடுகளாக உடையும்போது இன, மத, மொழி அடிப்படையிலான பொது அடையாளங்கள் உடைவின் அடிப்படை அம்சங்களாக அமைகின்றன. பண்பாட்டு முரண்பாடுகள் பிரிவினைக்கு வித்திடுகின்றன. எண்ணிக்கையில் கூடிய இனம் தன்னையே நாடாக எண்ணிச் செயற்படும்போது விரிசல் ஏற்படுகின்றது. ஓரங்கட்டப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கு முறைக்கு உட்படும் எண்ணிக்கையில் குறைந்த இனம் தன்னாட்சிக்காகவும், தனிநாட்டிற்காகவும் போரிடும் தேவை ஏற்படுகின்றது. போராட்டம் வெற்றி பெறும்போது தனி நாடு பிறக்கின்றது.





மனித வரலாறு தொடங்கிய நாட்தொட்டு இன்றுவரை போர் என்பது மக்கள் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. விளையாட்டு அணிகள் போல் இரு இராணுவங்கள் மோதுகையில் மக்கள் பார்வையாளர்களாக இருப்பார்கள் என்பது உண்மைக்குப் புறம்பான செய்தி. போர்க்களத்தில் இருந்து எவராலும் முற்றாக விலகி வாழ முடியாது. அதோடு போர் மக்களைப் பாதிக்காமல் விடாது. சொத்தழிவு, உயிரழிவு, இடப்பெயர்வு என்பது முற்காலத்திற்கும் பொதுவான நிகழ்ச்சி. ஐரோப்பாவின் 17, 18ம் நூற்றாண்டுகளில் போர் என்பது சீருடை தரித்த நன்கு அடையாளம் காணக்கூடிய இரு இராணுவங்களின் மோதல் என்ற சித்தாந்தம் வலுப்பெற்றிருந்தது. பிரெஞ்சுப் புரட்சியோடு அது கைவிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரெஞ்சுக் குடிமகனும் புரட்சிகர இராணுவத்தின் பங்காளனாகக் கருதப்பட்டான். அவனுடைய பங்களிப்பு தேசப்பற்றின் வெளிப்பாடாகவும், குடியுரிமைக் கடமையாகவும் தீர்மானிக்கப்பட்டன. நெப்போலியன் 1892 - 1815 காலப்பகுதியில் நடத்திய கண்டம் தழுவிய போரில் மக்கள் பங்களிப்பு உச்சம் அடைந்தது.

நெப்போலியனுக்கு எதிராகப் போரிட்ட ருஷ்யன் ஜெனரல் வொன் குளோஸ்விற்ஸ் தனது போர் பற்றிய நூலில் (ON WAR :VON CLAUSEWITZ) இரு நாடுகள் போரிடும்போது அந்த நாடுகளின் மக்கள் அனைவரும் வாழ்வா சாவா என்று மூர்க்கத்தனமாகப் போரிடவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (1832) இராணுவங்கள் மாத்திரம் மோதுவதே போர் என்ற பழைய கருத்தை நிராகரித்தவரும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து மக்கள் போரில் பங்கேற்கவேண்டும் என்று முதன் முதலாக கூறியவரும் அவர்தான். ஐரோப்பியப் போரியல் சிந்தனையில் ஒரு வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தியவர் வொன் குளோஸ்விற்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

வழமையான சிந்தனைப்படி ஒரு சிறிய இராணுவ அணி போருக்கு வரலாம் என்று 1793ல் எதிர்பார்க்கப்பட்டது. அதுவரை ஒருவர் சிந்தனைக்கும் உட்படாததொரு பிரமாண்டமான இராணுவம் களத்திற்கு வந்தது. திடீரென்று போர் ஒரு மக்கள் விவகாரமாக மாறிவிட்டது. 30 மில்லியன் மக்களைக் கொண்ட நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் தனது குடியுரிமையைச் செலுத்த முன்வந்தான். முழுத்தேசமும் தனது எடைமுழுவதையும் ஒன்றாகக் குவித்தது. இவ்வாறு தனது நூலில் வொன் குளோஸ்விற்ஸ் மிகவும் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார். (ON WAR : PUBLISHED BY HARMONDSWORTH 1971 P.384) நெப்போலியன் காலத்து மக்கள் போர்முறைக்கு வொன் குளோஸ்விற்ஸ் சித்தாந்த வடிவம் கொடுத்திருக்கிறார். அது இதன்மேல் இடம்பெறுகின்றது.

வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவில் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் தொடர்ச்சியான மோதல்நிலை நிலவுகின்றது. இத்தீவின் வரலாறு இரு இனங்களின் மோதல் என்று சொல்லும் அளவிற்கு அது காணப்படுகின்றது. இதற்கான விளக்கம் பலவாறு கூறப்படுகின்றது. பெரும்பான்மை இனமாக இருந்தாலும் அழிக்கப்பட்டுவிடுவோமோ அல்லது நாமாகவே அழிந்துவிடுவோமோ என்ற சிறு இனத்திற்குரிய அச்சம் சிங்களவர்களுக்கு இருக்கிறது என்கிறார் சிறிலங்காவுக்கான முன்னால் அமெரிக்கத் தூதுவர் ஹோவாட் றிகின்ஸ். (HOWARD WRIGGINS) பண்பாட்டு அடிப்படையில் இருசாராரும் பெருமளவில் வேறுபடுகின்றனர். ஒன்றிணைந்து செயற்படும் வாய்ப்புக்கள் அரிது. பரஸ்பர சந்தேகங்கள் முற்றி விட்டன. ஒரேநாட்டின் இரு இனங்கள் பிளவுபட்டிருப்பதை புவித்தட்டில் ஏற்பட்ட வெடிப்பிற்கு நிகர். (FAULT LINES) என்கிறார் பேராசிரியர் சாமுவல் ஹன்ரிங்ரன் (THE CLASH OF CIVILIZATIONS AND THE REMAKING OF WORLD ORDER : SAMUEL P.HUNTINGTON. PENGUIN BOOKS 1997) FAULT LINE CONF LICTS எனப்படும் புவித்தகட்டு வெடிப்புப்போன்ற பண்பாட்டு முரண்பாடுகள் இருவிதமாக உருவாகின்றன என்கிறார் இவ்வாசிரியர். முதலாவதாக வெவ்வேறு பண்பாட்டு விழுமியங்களைக்கொண்ட இரு அயல் நாடுகளுக்கிடையில். இரண்டாவதாக ஒரேநாட்டு எல்லைக்குள் வாழும் இரு வேறுபட்ட பண்பாடுகளுக்கிடையில். இன்றைய உலகில் நடக்கும் பெரும்பாலான மோதல்கள் மேற்கூறிய இரு வகையை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்கிறார் ஹன்ரிங்ரன்.

பனிப்போருக்குப் பிந்திய காலத்தில் கருத்தியல் போர் பின்தள்ளப்பட்டுள்ளது. பண்பாட்டு அடிப்படையிலான போர் முன்நிலைக்கு வந்துள்ளது. பண்பாடு ஒன்றிணைக்கும் பாலமாகவும் அதே சமயத்தில் வேறுபடுத்தும் அதல பாதாளமாகவும் இடம் பெறுகின்றது. ஒரே பண்பாட்டைக் கொண்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் இறுக்கமான பிணைப்பையும் பாசத்தையும் தமக்கிடையில் வளர்த்துக் கொள்கின்றனர். வேறுபட்ட பண்பாட்டிற்குரியவர்கள் ஒருவரை ஒருவர் எதிரியாகக் கருதும் நிலையும் இப்போது தோன்றியுள்ளது. ஒரு சிங்களப் பிரதமர் தமிழ் போராளிகளை "விசர் நாய்கள்" என்றும் அவர்கள் "சுட்டுக்கொல்லப்பட வேண்டும்" என்று கூறியதற்கு அடிமனதிலும் நுனிநாக்கிலும் ஊறிவிட்ட பண்பாட்டு விசம் தான் காரணம். ராஜிவ்காந்தியின் சடுதி மறைவிற்குப் பின் புதுடில்லி ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப்போருக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. ஆனால் "50 மில்லியன் தென்னிந்திய வாழ் தமிழர்களின் ஆதரவையும் உதவியையும் அதனால் நிறுத்த முடியவில்லை." என்றார் மேற்கூறிய ஆசிரியர். (பக்கம் 275)

> **பலம் தான் உலக அரசியலை நிர்ணயிக்கின்றது. எமது பலத்தின் மூலம் விடுதலையை வென்றெடுப்போமாயின் சர்வதேச சமூகம் எமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுத்தேயாகவேண்டும். அதுவரை அவர்கள் முட்டுக்கட்டைகளைப் போட்டபடி இருப்பார்கள்.**

ஈழத்தமிழர்களின் உரிமைப்போர் காந்திய முறையில் சாத்வீகப் போராக ஆரம்பித்தது. இந்தியப் பண்பாட்டில் தாம் ஒரு உறுப்பினர் என்று அப்போதைய ஈழத்தமிழ் தலைவர்கள் நினைத்தார்கள். இதனால் சாத்வீகப் போருக்கு தலைமை தாங்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் "ஈழத்து காந்தி" என்று அழைக்கப்பட்டார். காந்தியின் அகிம்சையையும் ஒத்துழையாமையையும் சட்டமறுப்பையும் தந்தை செல்வா என்று அழைக்கப்பட்டவர் முன்னெடுத்தார். இந்த முயற்சியில் அவர் கண்டது முழுத்தோல்வி மாத்திரமே. எனினும் மக்கள் மத்தியில் ஒரு விழிப்பை ஏற்படுத்தினார் என்பதை மறுக்க இயலாது. வேறுபட்ட பண்பாட்டைக் கொண்ட சிங்கள அரசினால் காந்தியத்தின் சிறப்பை உணர முடியவில்லை. ஆயுத முனையில் அடக்குமுறையில் ஈழத்தமிழர்களின் உரிமைக் கோரிக்கையை நசுக்க முற்பட்டார்கள். அதன் விளைவு இன்றைய போராக வெடித்துள்ளது.

காந்தியத்தின் தோல்வி தமிழீழத்தில் புதிய வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தியது. 70களில் தோன்றிய அரச அடக்குமுறையும் (STATE REPRESSION) அதற்கு எதிரான ஈழத்தமிழர்களின் ஆயுத எதிர்ப்பு முறையும் (ARMED RESISTANCE) சரித்திர நியதியாக அமைகின்றன. ஆரம்ப கட்டத்தில் ஈழத்தமிழர்களின் ஆயுத எதிர்ப்பு இளைய தலைமுறையினர் சிலரால் முன்னெடுக்கப்பட்டது. இதை வெகுஜன இயக்கமாக விபரிக்கமுடியாது. வொன் குளோஸ்விற்சின் ஒட்டுமொத்த மக்கள் யுத்தம் (TOTAL WAR) என்ற கோட்பாடும் இதற்குப் பொருந்தாது. "ஒழுக்கம், கட்டுப்பாடு, கொள்கைத் திட்டம் ஆகியவை கொண்ட ஒரு புரட்சிகர அமைப்பினால்" ஆரம்பகட்டத்தில் தமிழ் இளைஞர்களின் வன்முறைப் போராட்டம் நெறிப்படுத்தப்படவில்லை. (இரண்டு தசாப்தங்களும் புலிகளும் : கலாநிதி அன்ரன் பாலசிங்கம், முத்தமிழ் விழா மலர் 1991 பக்கங்கள் 139 - 155) எனினும் அரச ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசமும் புரட்சிகரப் போர்க்குணமும் இவர்களிடம் மிகுதியாகக் காணப்பட்டன.

இவர்களில் ஒருவராகத் தோன்றிய தமிழீழத் தேசியத் தலைவர் திரு பிரபாகரன் அவர்கள் 1972 நடுப்பகுதியில் தனித்தியங்கும் தனது தீர்மானத்தை நிறைவேற்றினார். 1980களிலும் அதன் பின்பு தமிழீழத்தினதும் சிங்கள தேசத்தினதும் தலைவிதியை அவர் மாற்றியமைத்தார். லங்கா கார்டியன் என்ற செய்திச் சஞ்சிகையின் ஆசிரியர் மேர்வின் டீ. சில்வா பிரபாகரன் பற்றி, ஒரு முக்கிய தசாப்தத்தின் வரலாற்று நாயகன் என்று குறிப்பிடுகின்றார். "இது எனது தனிப்பட்ட மானசீக மதிப்பீடு அல்ல இலங்கைத் தீவை அதிரவைத்த பூகம்ப நிகழ்வுகளின் அடிப்படையில் பார்க்கும்போது இது தவிர்க்கமுடியாத வரலாற்றின் தீர்ப்பு" என்கிறார் மேர்வின் டீ. சில்வா. தொடங்கிய நாட்தொட்டே தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு "வளைந்துகொடாமை, இலட்சிய உறுதி, தனித்துவமான போக்கு" என்பவற்றைக் கடைப்பிடிக்கின்றது. தமிழீழம் என்ற தனிநாடு தவிர்ந்த பிறிதொரு தீர்விற்கும் இடமில்லை என்ற நிலைப்பாட்டில் புலிகள் உறுதியாக நிற்கின்றனர்.

இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு நடத்தும் தனி நாட்டிற்கான போர் உலகின் கவனத்தில் முதலிடம் பெற்றுள்ளது. போர்த்திறனிலும், இலட்சிய உறுதியிலும் தியாக சிந்தனையிலும் புலிகள் இணையற்று விளங்குகின்றனர். எமது விடுதலைப்போர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உந்து சத்தியாக அமைகின்றது. இன்றுள்ள விடுதலைப் போராட்ட அமைப்புக்களில் பாரிய விடுவிக்கப்பட்ட பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் ஒரேயொரு அமைப்பு விடுதலைப்புலிகள் மாத்திரமே. தான் வகுத்த கொள்கைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் விதத்தில் ஒரு நேர்த்தியான ஆட்சி முறையை புலிகள் அமைத்துள்ளனர். தனியான நீதித்துறை, பாதுகாப்புத்துறை, நிர்வாகத்துறை, பொருளாதாரத் துறை, போன்றவற்றை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிறுவியுள்ளனர். சக்திவாய்ந்த கடற்படையைக் கொண்ட உலகின் ஒரேயொரு அங்கீகாரம் பெறாத அரசமைப்பு என்ற சிறப்பு புலிகளுக்கு உண்டு.


இன்றைய உலக ஒழுங்கில் சர்வதேச சமூகத்தின் அங்கீகாரம் அவசியம் தேவைப்படுகின்றது. தமிழீழத்திற்கு உலகநாடுகளின் அங்கீகாரம் இல்லாவிட்டால் பாரிய எதிர் விளைவுகள் ஏற்படும். மேம்பாட்டு நிதி உதவிகள் கிடைப்பது கடினம். தமிழீழத்தின் வர்த்தக மற்றும் கொடுக்கல் வாங்கற் செயற்பாடுகள் முடக்கம் அடையும். சர்வதேச சமூகம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் விடுதலைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது மாத்திரமல்ல விடுதலைக்கு ஊக்குவிப்பும் வழங்கியுள்ளது. அங்கீகாரம் தேசிய நலனின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

சர்வதேச சமூகம் (INTERNATIONAL COMMUNITY) என்ற சொற்றொடர் 17ம் நூற்றாண்டு தொடக்கம் பாவனையில் உள்ளது. 1648ம் ஆண்டில் ஐரோப்பியாவில்

⇨

30 வருடகாலம் நடைபெற்ற மதப்போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு வெஸ்பாலியா அமைதி உடன்படிக்கை (PEACE OF WESTPHALIA) நிறைவேற்றப்பட்டது. கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து மதத்தினருக்கு இடையிலான போரின் முடிவாக இருந்தாலும் இந்த உடன்படிக்கைக்குப் பின் நன்கு வரையறை செய்யப்பட்ட எல்லைகள் அரசு, மக்கள் என்பன உள்ள நாடுகள் சட்டரீதியாகத் தோற்றம் பெற்றன. வெஸ்பாலியா அமைதி உடன்படிக்கை கத்தோலிக்க நகரான மியூன்ஸ்ரறிலும் (MUE NSTER) புரட்டஸ்தாந்து நகரமான ஒக்ஸ்னாபுறுக்கிலும் (OSNABRUECK) கைச்சாத்திடப்பட்டன. இவை கூட்டாக வெஸ்பாலியா அமைதி உடன்படிக்கை என்று அழைக்கப்படுகின்றது.

சர்வதேச சமூகம் என்ற கூட்டமைப்பு பரிணாம வளர்ச்சியில் வெஸ்ற;பாலியா அமைதி உடன்படிக்கை ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகின்றது. இந்த உடன்படிக்கையின் பெறுபேறுகள் சர்வதேச சமூக வளர்ச்சியில் பாரியளவு பங்களிப்புச் செய்தன. முதலாவதாக புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவிய ஐரோப்பிய நாடுகளுக்கு




சர்வதேச அங்கீகாரம் வழங்கப்பட்டது. கத்தோலிக்க மதபீடத்திற்கு உட்படாத நாடுகள் தோன்ற வாய்ப்பளிக்கப்பட்டது. 300 வரையிலான கத்தோலிக்க மதபீட ஆட்சிக்குட்பட்ட சிறிய நாடுகள் தனித்தியங்கும் வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டன. அவர்கள் பிற நாடுகளோடு ஒப்பந்தம் செய்வதற்கும் போருக்குச் செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டன. ஆனால் கத்தோலிக்க மதபீடத்திற்கு எதிராகப் போரிட முடியாது என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. மூன்றாவதாக ஐரோப்பிய வலுவாதிக்கம் (POWER)பிரான்சு, சுவீடன், நெதர்லாந்து ஆகியவற்றுக்கிடையில் பங்கீடு செய்யப்பட்டது. சுவிர்சலாந்து ஒரு நடுநிலை நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சுருக்கமாகக் கூறுவதாயின் கத்தோலிக்க மதபீடம் போன்றதொரு பிறசக்தியின் ஆதிக்கத்திற்கு உட்படாத இறைமை நாடுகளின் பிறப்பு வெஸ்பாலியா அமைதி உடன்படிக்கை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சர்வதேச சமூகம் என்றால் இறைமை பெற்ற ஐரோப்பிய நாடுகள் என்ற ஆதிநிலை மாறி இன்று இறைமை பெற்ற அனைத்துலக நாடுகள் என்ற நிலை தோன்றியுள்ளது. என்றாலும் இது உண்மைநிலை அல்ல. முதலாம் உலக நாடுகள் அதாவது தொழில்வளம், பொருளாதாரபலம், இராணுவப்பலம் பொருந்திய அமெரிக்கா, மேற்குலக நாடுகள், ஜப்பான் ஆகியவைதான் சர்வதேச சமூகம் என்ற அந்தஸ்தைத் தமக்குத் தாமே சூட்டியுள்ளன. சர்வதேச சமூகம் என்ற சொற்றொடர் இப்படியான ஆதிக்க சக்திகளைத்தான் குறிப்பிட உதவுகின்றன. தமிழீழம் போன்ற புதிய நாட்டின் தோற்றத்திற்கு இவர்களுடைய அனுமதி நிச்சயம் அவசியமில்லை. பலம் தான் உலக அரசியலை நிர்ணயிக்கின்றது. எமது பலத்தின் மூலம் விடுதலையை வென்றெடுப்போமாயின் சர்வதேச சமூகம் எமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுத்தேயாகவேண்டும். அதுவரை அவர்கள் முட்டுக்கட்டைகளைப் போட்டபடி இருப்பார்கள்.

அங்கீகாரம் என்பது சர்வதேச சமூகத்தின் உறுப்பு நாடாக ஏற்றுக்கொள்வதைக் குறிப்பிடும். அங்கீகாரத்தை இராசதந்திர மொழியில் றெக்கொக்நிசன் (RECOGNITION) என்பார்கள். ஒரு நாடு புதிதாக உருப்பெற்ற நாட்டை இருவிதத்தில் அங்கீகரிக்க முடியும். சர்வதேச நியமங்களுக்கு அமைவாக புதிய நாட்டுடன் இராசதந்திர மற்றும் அரசியல் தொடர்புகளை ஏற்படுத்தல். சர்வதேச சமூகத்தின் உறுப்பு நாடாக வருவதற்கு வேண்டிய தகுதி புதிய நாட்டிற்கு இருப்பதைத் தனது பார்வையில் ஏற்றுக்கொள்ளல். எல்லா நாடுகளும் இப்படி அங்கீகாரம் வழங்கும் நாட்டைப்போல் புதிய நாட்டை அங்கீகரிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடுகிடையாது. ஆனால் தனியொரு நாடு வழங்கும் அங்கீகாரம் பிறநாடுகளை அவ்வாறு தூண்டுவதற்கு உகந்த பயனுள்ள நடவடிக்கையாக அமையும். நடைமுறையில் சர்வசேத சமூகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் ஒட்டுமொத்தமாக அங்கீகாரம் வழங்கியதாக வரலாறு இல்லை. ஒருசில நாடுகள் இராசதந்திர தூதுவர்கள் பரிமாற்றம், உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் செய்வது மூலம் அங்கீகாரச் செயற்பாட்டைத் தொடக்கிவைக்கின்றனர். பிறிதொரு தொகுதி நாடுகள் புதிய நாட்டுடன் தொடர்பை ஏற்படுத்தாமல் விலகி நிற்கும் வாய்ப்பு நிறைய உண்டு. அதே சமயத்தில் அங்கீகாரம் வழங்காத அல்லது மறுக்கும் நாடுகள் புதிய நாடு மீது தாக்குதல் நடத்துவதையோ பிற எதிர் நடவடிக்கை எடுப்பதையோ சர்வதேச ஒழுங்குமுறை தடைசெய்கின்றது, என்றாலும் அத்து மீறல்கள் நடக்கின்றன அல்லது தூண்டிவிடப்படுகின்றன.

புதிய நாடு உதயமாகிவிட்டதா என்ற சந்தேகத்தை கூட சில நாடுகள் சர்வதேச மட்டத்தில் எழுப்பலாம். எதற்கும் எதிர்வு கூறல் கடினம்.

ஒரு இறைமை நாட்டிற்குள் ஆயுதபலத்தின் மூலம் விடுதலை அமைப்பு இன ஒடுக்குமுறை அரசிற்கு எதிராகப் போரிட்டு அதில் பெற்ற வெற்றி காரணமாக பாரிய அரசியல் இராணுவத்தளத்தை ஏற்படுத்த முடியுமானால் அது நிற்சயம் சர்வதேச சமூகத்தின் கவனத்தைப் பெற்றே தீரும். அத்தோடு தனக்கென ஒரு ஆள்புலத்தை ஏற்படுத்திய விடுதலை அமைப்பும் தனக்குரிய சர்வதேச அந்தஸ்தைக் கோரியே தீரும். இப்படியான ஆள்புலம் ஏற்பட்ட நாட்டின் அரசு குறிப்பிட்ட விடுதலை அமைப்பிற்குரிய அங்கீகாரத்தை வளங்கப்போவதில்லை. கிளர்ச்சியாளர்கள், பயங்கரவாதிகள், கிருமினல்கள் போன்ற தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களை அந்த அரசு பயன்படுத்திக் கொண்டிருக்கும். சர்வதேச சமூகம் என்று தம்மை அழைக்கும் நாடுகள் தமது தேசிய நலத்திற்கு உகந்த நிலைப்பாட்டை இந்த விவகாரம் தொடர்பாக எடுப்பார்கள். விடுதலை அமைப்பிற்குரிய அங்கீகாரத்தை வழங்குவார்கள். அல்லது தாமும் மேற்கூறிய அரசைப்போன்ற வார்த்தைப் பிரயோகங்களைச் செய்யக்கூடும். சுருங்கிவரும் உலகில் எப்பிரச்சினையாக இருந்தாலும் அது உலகின் பொதுப் பிரச்சினை என்ற நிலைப்பாடு சர்வதேச சமூகத்தில் நிலவுகிறது. விடுதலை அமைப்புகளுக்கு சர்வதேச சமூகம் அங்கீகாரம் வழங்குமாயின் அது தனிநாட்டு பிறப்பின் முதற்படியாக இடம்பெறும் சாத்தியம் ஏற்படும். புதிய நாடுகளின் தோற்றம் சம்பந்தமான நிலையான கொள்கை சர்வதேச சமூகத்திடம் இல்லை. தமது தேசிய நலனிற்குப் பொருத்தமான இடத்தில் புதிய நாட்டின் தோற்றத்திற்கு அனுசரணை வழங்குவார்கள். தேசிய நலனிற்கு இலாபம் இல்லையென்றால் வழங்க மாட்டார்கள். ஆனால் நிலைமை கட்டுமீறிச்செல்லுமானால் மாற்று உபாயங்களைக் கையாள்வார்கள். இறுதிக்கட்டமாக தவிர்க்க முடியாத கட்டம் தோன்றுமாயின் அங்கீகாரத்தை வழங்கிவிடுவார்கள்.

புதிய நாடுகளின் தோற்றம் சம்பந்தமான நிலையான கொள்கை சர்வதேச சமூகத்திடம் இல்லை. தமது தேசிய நலனிற்குப் பொருத்தமான இடத்தில் புதிய நாட்டின் தோற்றத்திற்கு அனுசரணை வழங்குவார்கள். தேசிய நலனிற்கு இலாபம் இல்லையென்றால் வழங்க மாட்டார்கள். ஆனால் நிலைமை கட்டுமீறிச் செல்லுமானால் மாற்று உபாயங்களைக் கையால்வார்கள். இறுதிக்கட்டமாக தவிர்க்க முடியாத கட்டம் தோன்றுமாயின் அங்கீகாரத்தை வழங்கிவிடுவார்கள்.

விடுதலை இயக்கத்திற்கு ஆள்புல தளம் அதிமுக்கியம் என்பதை இவ்விடத்தில் வலியுறுத்தவேண்டிய அவசியம் இல்லை. அதைப் பறிப்பதற்கு அரசும், அதற்கு ஆதரவான உலக நாடுகளும் இராணுவ ரீதியாகக் கடும் முயற்சி எடுப்பதற்கு இதுதான் காரணம். அத்தோடு சம்பந்தப்பட்ட விடுதலை இயக்கத்திற்கு இராசதந்திர அழுத்தம் கொடுத்து பேச்சுமேசைக்குக் கொண்டுசெல்வதும் அதைப் பலவீனப்படுத்தும் நோக்கில் தான். ஒரு விடுதலை இயக்கம் முன்வைக்கும் விடுதலைக் கோரிக்கையின் நியாயப்பாடு ஒடுக்குமுறைக்கு எதிரான அதனுடைய வெற்றிகரமான போராட்டம், அது நிறுவிய தளம் என்பனவோடு அது வேண்டிநிற்கும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையிலும் சம அளவில் தங்கியுள்ளது. அதாவது அதனுடைய தனிநாட்டுக் குறிக்கோளை சுயநிர்ணயக் கோரிக்கை மூலம் எட்டமுடியும் என்று அது நம்புகிறது. இக்கோரிக்கையின் வலுவீச்சை சர்வதேச சமூகம் குறைப்பதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு அச்சம் தான் காரணம். அதாவது சுயநிர்ணய அடிப்படையில் புதிய நாடுகள் பரவலாகத் தோன்றும்போது தலைமை நாடுகளின் அதிகாரங்கள் குறைவடையும் என்ற அச்சம். அரசியலின் அடிப்படை புவியியல் என்பார்கள். பிறக்கவிருக்கும் தமிழீழத்தைப் பொறுத்தளவில் இது மிகப் பெரிய உண்மை. பெரும் நிலப்பரப்பைக் கொண்ட இந்தியாவின் பக்கலில் நாம் அமைந்துள்ளோம். இதை மாற்ற எம்மால் இயலாது. ஆசியாவின் மையப்பகுதியில் இந்தியத் தரைப்பரப்பு அமைந்துள்ளது. மத்திய கிழக்கையும் கிழக்காசியாவையும் இணைக்கும் பெரும் கடற்பாதைகளின் மையப்பகுதியில் இந்தியா இருக்கிறது. இந்தியாவின் தென்பகுதியில் 22 கடல் மைல் தொலைவில் சிறிலங்கா இருக்கிறது. சிறிலங்கா விவகாரங்கள் இந்தியாவைப் பாதிக்கின்றன. வாசு தாய்வ் குடும்பகம் என்ற வடமொழிச் சுலோகத்தை தாரக மந்திரமாக இந்தியா கொண்டுள்ளது. உலகம் ஒரே குடும்பம் என்று பொருள். நடைமுறையில் வேறுபாடுகள் உண்டு. அயல்நாட்டு உறவுகளை புவியியலும் வரலாறும் தீர்மானிக்கின்றன. புவியியல் காரணிகளைக் கணக்கில் எடுப்பவன் யதார்த்தவாதி. புவியியல் காரணிகளுக்கு அப்பால் செல்லத் துணிவில்லாதவன் அதன் கைதி. புவியியல் காரணிகளை கணக்கில் எடுக்காதவன் மூடன் என்றும் சொல்வார்கள். இவை எமக்கு வழிகாட்டிகளாக அமையலாம். சிறிலங்காவைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இலக்குடன் நெடுகாலமாக இந்தியா செயற்படுகின்றது. இலங்கையின் கிழக்கு எல்லை இந்தியாவின் தெற்கு எல்லையின் ஒரு பகுதி என்பது இந்தியக் கொள்கை வகுப்பாளர் நிலைப்பாடு.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தோற்றம் புதிய சக்திமையத்தை இப்பிராந்தியத்தில் உருவாக்கியுள்ளது. சிங்கள தேசத்தையும் தமிழீழத்தையும் சமாளிக்க வேண்டிய தேவை இந்தியாவிற்கு எழுந்துள்ளது. உலகின் மிகப்பலம் வாய்ந்த பொருளாதார வல்லரசுகளில் ஒன்றான இந்தியா படிப்படியாக சிறிலங்காப் பொருளாதாரத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதில் வெற்றிகண்டுள்ளது. திருகோணமலைத் துறைமுகத்தையும் அதைச் சூழவுள்ள பகுதியையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதில் அது ஓரளவு வெற்றிகண்டுள்ளது. திருகோணமலைப் பிராந்தியத்தில் ஒரு பொருளாதார வலையத்தை இந்தியத் தலைமையில் கட்டியெழுப்பும் இலக்கு இந்தியாவிற்கு உண்டு. சிங்கள அரசு ஒத்துழைப்பு வழங்கினாலும் தமிழீழப் பிராந்தியத்தில் திருகோணமலை இருப்பதால் இந்தியாவின் நோக்கம் முற்றாக நிறைவேற வாய்ப்பில்லை. சில அரசியல் ஆய்வாளர்கள் கணிப்பீட்டில் தமிழீழம் என்ற நாடு இந்தியாவிற்கு ஒரு நிரந்தர தலையிடியாக இருக்கும். தமிழீழம் நேசக்கரம் நீட்டினாலும் அதைச் சந்தேகக் கண்ணோடுதான் இந்தியா எதிர்கொள்ளும். சீனாவிற்கு ஒரு தாய்வான், இந்தியாவிற்கு ஒரு தமிழீழமாக அமையலாம் என்று அதே ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். மத்திய கிழக்கில் ஒரு இஸ்ரேல் தோன்ற அனுமதித்ததால் அரபு நாடுகள் நிம்மதி இழந்துள்ளன. அதைப்போன்ற தவறை மீண்டும் தெற்கு ஆசியாவில் செய்யலாமா என்றும் கேட்கிறார்கள். இந்தியா தனது ஒட்டுக்குழுவான ஈ.என்.டி.எல்.எப் அமைப்பை புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்திற்கு அனுப்பியுள்ளது. பேராசிரியர் ஹன்ரிங்ரன் சுட்டிக்காட்டியது போல் இந்தியாவின் கையை 50 மில்லியன் தென்னிந்தியத் தமிழர்கள் கட்டிப்போட்டிருக்கிறார்கள். ஒரு யதார்த்தவாதியான ஏ.ஜே வின்சன் தனது சிறிலங்கா உடைவு என்ற நூலில் “பிரிவினை ஏற்படும்போது அது இந்தியாவின் அனுமதியோடு அல்ல, ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனத்தின் அடிப்படையில் அமையும்” என்றுள்ளார்.

புவித்தகட்டு வெடிப்புப்போன்ற சிறிலங்காவின் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான பிளவை ஒட்டுவேலைச் சமரசங்களால் தீர்த்துவைக்க முடியாது. இந்தியா முன்னின்று போர் நடத்தினாலும் இத்தீவு இரண்டாவதைத் தடுக்க இயலாது. மனத்தளவில் இருபகுதியினரும் பிரிந்து நெடுங்காலமாகி விட்டது. இனி நிலத்தைப் பங்குபோடும் வேலை எஞ்சியுள்ளது. சர்வதேச சமூகம் சிறிலங்கா மீது வைத்திருந்த நம்பிக்கையைப் படிப்படியாக இழந்துவருகின்றது. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத நாடு, ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் போன்றவற்றை உதாசீனம் செய்யும் நாடு என்ற அபகீர்த்தி சிறிலங்காவுக்கு ஏற்பட்டுள்ளது. 1987, 2002 ஆகிய ஆண்டுகளில் செய்யப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களை சிறிலங்கா மிக அண்மையில் செயலிழக்கச் செய்துள்ளது. எந்த ஒப்பந்தத்திலும் நான் கைச்சாத்திடுவேன். அதிலிருந்து நழுவும் மார்க்கத்தை நான் அறிவேன் என்று சொன்ன கிட்லரைப்போல் சிறிலங்கா ஆட்சியாளர்கள் நடக்கின்றார்கள். தமக்கிடையில் செய்த ஒப்பந்தத்தைக் கூட ஒரு கண்சிமிட்டும் நேரத்தில் கிழித்து வீசும் சிங்களத் தலைமையை யார்தான் நம்புவார்கள்?

கலாநிதி க. சோமாஸ்கந்தன்

வெஸ்ற;பாலியா அமைதி உடன்படிக்கை நாட்தொட்டு தனி மனிதர்கள் உரிமை பற்றிய கரிசனை சர்வதேச சமூகத்தினர் மத்தியில் நிலவுகிறது. வெஸ்ற;பாலியா உடன்படிக்கையின் முதற்கட்டமான 1648-1915 காலப்பகுதியில் மனித உரிமைகள் பெரியளவில் பேணப்படவில்லை என்பது உண்மையே. இரண்டாம் கட்டமான 1915-1945 காலப்பகுதியில் மனித உரிமைகள் பற்றிய கரிசனை சிறிதளவேனும் இருக்கவில்லை. அதன்பின் வெஸ்றப்பாலியா உடன்படிக்கை மூலம் தோன்றிய நாடுகளின் இறைமையை உதாசீனம் செய்யும் அளவுக்கு மனித உரிமைகள் விவகாரம் தலைதூக்கியுள்ளது. இப்படியான சூழலில் மனித உரிமைகளை மதியாத படுமோசமான நாடு என்று தன்னைச் சிறிலங்கா வெளிப்படுத்துகிறது. இந்த நடத்தைக்குரிய விலையைச் சிறிலங்கா கொடுக்கத்தான் போகிறது.

தமிழீழம் ஒரு சிறிய நாடாகத்தான் அமையும், அதனால் தாக்குப் பிடிக்கமுடியாது என்பவர்கள் கவனத்திற்கு; மூன்றாம் உலக நாடுகளில் இருபத்தைந்து வரையிலானவை தமிழீழ நிலப்பரப்பிலும் பார்க்கச் சிறியதைக் கொண்டுள்ளன என்ற உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றோம். உதாரணம்: தமிழீழம் 16,500 சதுர கீ.மீ. மாலைதீவு 298 சதுர கீ.மீ. இன்னும் பல பிரிந்துபோவதற்கு சாதகமாகச் சில பத்திரிகைகள் எழுதியுள்ளன. 1983ஆகஸ்து 04ஆம் திகதி வாஷிங்ரன் போஸ்ற் பத்திரிகை “ஒன்றாக வாழ்வது கடினம் என்றால் தமிழர்களுக்கு வடக்கில் தனிநாடு உருவாக்கினால் என்ன? ஐநாவின் பெரும்பாலான உறுப்பு நாடுகளின் உரிமை போன்று அவர்களுக்கும் உரிமை உண்டு” என்றுள்ளது. பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியரான டாக்டர் சுமணசிறி லயனகே 2001 ஒக்ரோபர் 03 ஐலன்ற் பத்திரிகையில் ‘மாற்றுத் தீர்வாகப் பிரிவினை’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். “பிரிவினை பல நடைமுறை, அரசியல், சமூகப் பிரச்சினைகளை உருவாக்கலாம். எல்லாச் சமூகங்களின் தேவையையும் நலனையும் கணக்கில் எடுத்து அவற்றைத் தீர்க்கலாம்” என்ற கருத்தை அதில் தெரிவித்துள்ளார். பிரிவினை சிங்கள - தமிழ் இனங்களுக்குச் சிறந்த எதிர்காலத்தையும் சமத்துவ அடிப்படையில் நட்புறவையும் ஏற்படுத்தும் என்பது பேராசிரியரின் கருத்து. தொடர்ந்து போராடுவோம், வெற்றி நிச்சயம்.


www.eelamview.com

# அல்லைப்பிட்டி குருதியில் குளித்த பூமி

**11.08.2006 – வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணி.**

முகமாலையிலும், அதனை அண்டிய இடங்களிலும் உள்ள சிறிலங்கா இராணுவ முன்னரங்கக் காவலரண் பகுதிகளில் இருந்து இராணுவம் வன்னிப்பகுதியை நோக்கி வலிந்தவொரு தாக்குதலைத் தொடுத்தது. ஏற்கனவே அங்கு நிலைகொண்டுள்ள படையினருடன் மேலதிக படையினரையும் இணைத்து, இப்பகுதிக்கு நகர்த்தி, வழமையான பாணியில் இத் தாக்குதலை இராணுவம் ஆரம்பித்து, வழிநடாத்திக்கொண்டிருந்த போது வலிந்தெடுத்த களமுனைக்கு எத்தனையோ மைல்களுக்கு அப்பால், எங்கோ ஒரு மூலையில் இருக்கும் அல்லைப்பிட்டிக் குக்கிராமத்தினை ஆக்கிரமித்திருக்கும் கடற்படையினரும் தம்பாட்டிற்கு வன்னிப்பகுதியை நோக்கி எறிகணைகளை கண்டபடி ஏவிய வண்ணம் இருந்தனர்.

நேரஞ்செல்ல மண்கும்பான், மண்டைதீவு தெற்குக் கடற்கரையோரங்களில் தளம் அமைத்திருக்கும் கடற்படையினரும் தீவீரமாக வன்னிப்பகுதியை நோக்கி எறிகணைகளை ஏவத்தொடங்கினர். இந்நேரம் கடற்பகுதியிலிருந்தும் குண்டுச்சத்தங்கள் கேட்கத்தொடங்கின.

இவ்வேளை யாழ் இராணுவ கட்டளை அதிகாரியினால் பிறப்பிக்கப்பட்ட யாழ் குடா நாடு திட்டமிட்டு சாதுரியமாக விரிக்கப்பட்ட இச் சதி வலையினால் அசாதாரண வேளைகளில் ஒருபகுதி மக்கள் மறுபகுதியினருக்கு இத்தகைய செய்திகளை தெரிவிதுக் கொள்ளவோ, பாதுகாப்புக் கருதி வெளியேறவோ முடியாமல் தனிமைப்படுத்தப்பட்டனர். இக் காரணத்தினால் விடுதலைப்புலிகளின் அன்றைய வேண்டுகோளை அறிந்தவர்கள் கூட அதை மறுபகுதியினருக்குத் தெரிவிக்க முடியாதவர்களாய் இருந்தனர். தொலைபேசிகள் கூட துண்டிக்கப்பட்டிருந்தன. இதனால் பெரும்பான்மையோர் அறிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் போனது.


ஆயினும் ஏவப்படும் செல் வீச்சுக்கு அஞ்சி அவ்விடத்தை விட்டு தாமாகவே விலகிக்கொள்ள ஆலயச் சூழலைக் கண்காணிக்கின்ற காவல்துறையினரும், ஊருக்குள் கண்ட இடமெல்லாம் பதுங்கி நிற்கின்ற படையினரும் தடையாய் இருந்தனர். அத்தோடு அந்நேரம் மண்கும்பான் பகுதியிலுள்ள கடற்படையினர் தீவிர செல் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணம் இருந்தமையால் மேற்கு நோக்கி அப்பகுதிக்கு செல்வதும் உயிராபத்து என மக்கள் கருதிக்கொண்டார்கள்: இதனால் ஆலயத்தினையும் தமது வாழ்விடங்களையும் விட்டு வெளியேற முடியாமல் மக்கள் வழமை போல அங்கேய தங்கி விட்டனர் ஏக்கமும்,பீதியும் கொடுமையாக அவர்களைக் கலக்கி அடித்துக்கொண்டிருந்தன.

அன்றைய நாள் இரவு மெல்ல மெல்ல நகர்ந்து நடுநிசியைத் தாண்டிக் கொண்டிருந்தது. இதுவரை நேரமும் கேட்டுவந்த ஒருபக்கத் தாக்குதலின் செல் வீச்சுச் சத்தங்களுக்கு மாறுபாடாக இருசாரார் மோதிக்கொள்ளும் வேறுவகையான குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்பதை இனம் பிரித்து உணரக்கூடியதாக இருந்தது. இதனால் விடுதலைப்புலிகள் இங்கே தரையிறங்கி விட்டார்கள் என்பதை அநேகர் உறுதியாக உணர்ந்து கொண்டார்கள். நாளைய பொழுதில் படையினர் வீடுகளுக்குள் புகுந்து எம்மைக் கண்டபடி சுட்டுக்கொல்வார்கள் இன்றைய இரவு விடியாமலே இருந்தால் என்ன, என்று ஏங்கிய மனங்களில் புது வகையான ஒரு தெம்பு பிறந்து கொண்டது.

இப்போது மண்டைதீவு தெற்கு கடற்கரைப்பகுதியிலிருந்தும் பரஸ்பரம் வெடிச்சத்தங்கள் கேட்கத்தொடங்கின. அல்லைப்பிட்டிக்கு வடகிழக்கே பண்ணைக் கடலுக்கு அப்பாலிருந்து ஏவப்பட்ட எறிகனைகள் மண்கும்பான் பகுதியில் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின. அப்பகுதி விடுதலைப் புலிகளின் வசமாகி வருகின்றது என்பதற்கான அறிகுறியும் மெல்ல மெல்ல புலனாகிக் கொண்டு வந்தது.

**12.08.2006 – சனிக்கிழமை**

மக்கள் மனங்களை இருள் கவ்வியிருக்க பொழுதோ வழமைபோலப் புலர்ந்து கொண்டது. இராணுவப் பிரசன்னத்தைப் பார்த்து விடிந்ததும் ஊரைவிட்டு எப்படியாவது வெளியேறிவிடவேண்டும் என்றிருந்த மக்களுக்கு யாழ். கட்டளை அதிகாரியினால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் முட்டுக்கட்டையானது. உக்கிரமான தழுவிய ஊரடங்குச் சட்டத்தினை அரச வானொலி அறிவித்துக்கொண்டிருக்க, விடுதலைப்புலிகள் தங்கள் வானொலி மூலம் தென்மராட்சி உட்பட யாழ் நகரை அண்டிய சில கடற்கரைப்பகுதி மக்களையும் மண்டைதீவு, அல்லைப்பிட்டிக் கிராம மக்களையும் இராணுவ முகாம்களிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் விரைவாக விலகிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு விநயமாகவும், அவசரமாகவும் அடிக்கடி வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருந்தனர்.



இவ்வானொலி ஒலிபரப்பை இராணுவ பிரசன்னம் சற்றுக் குறைவான பகுதியில் வசிப்பவர்களாலேயே கேட்கமுடிந்தது. இதற்கமைய எங்கே போவது? எப்படிப் போவது? போன்ற சஞ்சலமான வினாக்கள் மக்கள் ஒவ்வொருவரையும் கேட்டுப் பிய்த்துக்கொண்டிருந்தன. மூன்று பக்கமும் கடல்களால் சூழப்பட்ட மிகவும் ஒடுங்கிய நிலப்பரப்பை அமைவாகக் கொண்ட அல்லைப்பிட்டிக் கிராமத்தின் கடற்கரையோரங்களில் கடற்படை குந்தியிருக்கின்றது. தரையாக உள்ள ஒரேயொரு பக்கத்தில் இருபத்து நான்கு மணி நேரமும் வீதிக் காவலில் கடற்படை ஈடுபட்டிருக்கின்றது. போதாக்குறைக்கு இரவு நேரங்களில் படையினர் பற்றைக் காடுகள், பனங்கூடல்களுக்குள் பதுங்கி இருப்பார்கள். இந்நிலையில் எப்படி வெளியேறுவது? பொறிக்குள் அகப்பட்டவர்களாய் அக்கிராம மக்கள் ஏக்கமும் பயமும் குடிகொள்ள செய்வதறியாது பிரமையிலிருந்தனர்

இவ்வருடம் 'மே' மாதம் குஞ்சு குழந்தைகள் உட்பட ஒன்பது பேரைக் கடற்படையினர் சுட்டுக்கொன்ற சம்பவத்தின் பின் இரவு நேரத்தை ஊரிலுள்ள சென் பிலிப்புநேரியார் தேவாலயத்தில் கழித்து வந்த இக்கிராமத்தின் பெரும்பாலானோர்; அன்றைய பொழுதையும் வழமைபோல அங்கேயே கழிப்பதற்கு குழுமியிருந்தனர். இவர்கள் அதிகரித்த இராணுவ பிரசன்னத்தினால் விடுதலைப்புலிகளின் வானொலி ஒலிபரப்பை நீண்ட நாட்களாக செவிமடுக்க முடியாத நிலையிலுள்ளவர்கள். 'மே' மாதப் படுகொலையின் பின்னர் கடற்படை மக்களுக்குத் தாம் பாதுகாப்பு அளிப்பதாக மாயங்காட்டி, கபட நோக்கில் மிகச் சிறிய இவ்வூரைப் பலதுண்டுகளாக்கி ஒவ்வொன்றையும் சுற்றி இராணுவ வேலியை ஏற்கனவே அமைத்திருந்தது.

**நாங்கள் நினைத்த அந்தக் கொடூரம் நிகழத் தொடங்கியது. ஆட்லறிக் குண்டுகள் எங்கெல்லாமோ இருந்து எங்களைத் தேடி வந்துகொண்டிருந்தன. போதாக் குறைக்கு இடையிடையே கடலில் இருந்தும் பீரங்கித் தாக்குதல்கள், அத்தோடு பல்குழல் பீரங்கியும் முழுங்கத் தொடங்கி இடைவிடாது றொக்கெட்டுகளைத் தள்ளிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு குண்டு வெடிப்புக்கும் இடையே ஒரு கைநொடிப்பொழுது கால அவகாசம்கூட இருக்கவில்லை. ஒரே கணத்தில் பல குண்டுகள் வெடித்தன. குண்டு எங்கே விழுந்தது எனக் கேட்காமல் குண்டு எங்கே விழவில்லை எனக் கேட்கும் அளவிற்கு அங்கிங்கென்னாதபடி எங்கும் விழுந்தது.**

வெடிச்சத்தங்களும், குண்டுவீச்சுக்களும் மக்களை உன்மத்தம் பிடிக்கவைத்தன. எங்குமே போகமுடியாதநிலை. இதனால் இராப்பொழுதைக் கழிக்க மக்கள் எங்கெங்கு முடங்கினாரோ அங்கேயே பகற்பொழுதையும் கழிக்கமுயன்றனர்.

நேரம் செல்லச்செல்ல மோதல் உக்கிரமடையத் தொடங்கியது. வீதிகள், குடிமனைகள், ஆலயங்கள், பாடசாலைகள் என்று பரவலாக எங்கும் நின்ற படையினர் திடீரென அவ்விடங்களை விட்டு விலகிக் களமுனையைநோக்கிச் சென்றதும் எறிகணைகள் எங்களை நெருங்கி வந்துகொண்டிருந்தன. மரணத்திற்கும் எமக்கும் உள்ள இடைவெளி வரவரக் குறுகி வருவது தெரிந்தது. நாங்கள் பீதியால் விழிபிதுங்கினோம்.

இந்நேரம் அல்லைப்பிட்டி சென்பிலிப்புநேரியார் தேவாலயத்திற்கு நூற்றுக் கணக்கான படையினர் வேகமாக வந்து சேர்ந்தனர். "உங்களை யாழ். அனுப்புகின்றோம் வாருங்கள்" என்று ஆலயத்தில் இருந்தவர்களை அவசரமாக அழைத்தனர். எப்படியாவது இவ்விடத்தை விட்டு தப்பிப் போய்விட வேண்டும் என்றிருந்த மக்கள் முண்டியடித்துக்கொண்டு அவர்களோடு புறப்பட்டனர். மக்களை அல்லைப்பிட்டிச் சந்திவரை அழைத்து வந்த கடற்படையினர் பாதுகாப்பாகத் தாம் படைமுகாமிற்குள் புகுந்துகொண்டதும் அவர்களை வந்தவழியே போகுமாறு எச்சரித்துத் திருப்பி அனுப்பினர். மக்கள் திரும்பவும் ஆலயத்திற்கு வந்து அரைமணிநேரம் ஆவதற்குள் அவர்களை மீண்டும் அங்கே வந்த படையினரில் இன்னொரு பகுதியினர் வலுக்கட்டாயமாக அழைத்துக்கொண்டுபோய் திருப்பி அனுப்பினர். இவ்வாறு இன்னும் ஒரு தடவையும் நடந்தது. அகோர வெய்யிலில் தண்ணீர் தாகம், பசிக்களை, மரண பயம் கொண்ட அப்பாவி மக்களை படையினர் மூன்று தடவைகள் மனிதக்கேடயங்களாகப் பாவித்துக் கொண்டார்கள். பச்சிளம் பாலகரைக்கூட ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்த அல்லைப்பிட்டி தெற்குக் கடற்படையினரே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் களமுனையை விட்டுத் தப்புவதற்கு பகுதி பகுதியாக வந்து இந்த நாசகார உத்தியைக் கையாண்டவர்கள்.

இலங்கை ஒரு "சோசலிச ஜனநாயக நாடு" (சும்மா பெயரளவுக்குச் சொன்னாலும் எவ்வளவு வலுவான இனிய சொல்) அதன் ஜனநாயகத்தையும், இறைமையையும் கட்டிக் காக்கப் புறப்பட்ட "தேசிய வீரர்கள்" →

(பகிடி என்பது வேறுவிடையம்) தங்கள் உயிரைத் தக்கவைப்பதற்காக கேவலம் "தமது சொந்த மக்களெனக் கூறிக்கொள்பவர்களையே" (போலி என்பதை விட்டுவிடுவோம்) கேடையங்களாக்கிய இலட்சனம் உலகின் வேறு எந்த மூலையிலுமே நிகழ்ந்திருக்க மாட்டாது.

நேரம் மதியமாகிவிட்டது. இதுவரை நேரம் சற்றுத் தொலைவில் இருந்து கேட்ட துப்பாக்கிச் சத்தங்கள் இப்போது கடற்படைத் தளத்தை அண்டிய பகுதிகளில் இருந்து ஆக்கிரோசமாகக் கேட்கத் தொடங்கின. ஊடே குண்டு வெடிப்புக்களும் கிரனைற் வீச்சுக்களும் கேட்டவண்ணமிருந்தன. சில நிமிடங்களில் இச்சத்தங்கள் எங்களை நெருங்கின. துப்பாக்கிச் சன்னங்கள் நாளாபுறம் இருந்தும் பாய்ந்து வந்தன. குண்டுவெடிமுழங்க, வேட்டு மழை கொட்டு கொட்டு என்று கொட்டியது. எங்கள் ஊர்மனை போர்முனையானது. நாங்கள் கையில் துப்பாக்கியில்லாமல் களத்தில் நின்றோம்.

அச்சமயம் நூற்றுக்கணக்கான படையினர் விடுதலைப் புலிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஓடிவந்தார்கள். எந்த இலக்குமின்றி கண்டபடி சுட்டுத் தள்ளிக்கொண்டு தலை தெறிக்க அல்லைப் பிட்டிச் சந்தியிலுள்ள தளத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார்கள். என்னை மறந்து நின்று பார்த்தேன். உடம்பு புல்லரித்தது. நான் காண்பது கனவா? நிஜமா? அந்தக் கணத்தில் நான் நானாகவே இல்லை.

அல்லைப்பிட்டி தெற்குக் கடற்படைத் தளத்தில் எஞ்சி நின்ற கடற்படையினர் விடுதலைப் புலிகளின் வீரத்திற்கு முன்னே எதிர்நிற்க முடியாமல் ஓடிய ஓட்டமே அது. அந்த ஓட்டம் போர் தந்திரோபாயத்தின்படி சிலவேளைகளில் புத்திசாதுரியமாகக் களமுனையைவிட்டு விலகும் பின்வாங்கல் நடவடிக்கையல்ல. எதிரியைத் திட்டமிட்டு சண்டைக் கிழுத்து, ஈற்றில் எதிர்நிற்கமுடியாமல், மூக்குடைபட்டு, சாவுக்கஞ்சி ஓடிய ஓட்டமே அது. நாடு பற்றி எரியும் போது அதை மூடிமறைக்க கொழும் பில் 'சர்க்' ஓட்டப்போட்டி ஆரம்பமாகவிருந்த ஓரிரு

**இத்தனை அட்டூழியங்களையும் நேரில்கண்டவரும், அனுபவித்தவருமான வண பிதா ஜிம் பிறவுன் அடிகளார் நடந்தேறிய படுகொலைகளின் உண்மை நிலையினை உலகிற்கு அம்பலமாக்கிவிடக்கூடிய ஒரேயொரு ஆவனமாக இருந்தமையால் இக் கொடூரங்கள் நிகழ்ந்து ஒரு கிழமைக்குள் அவர் மர்மமாக மறைக்கப்பட்டார்.**

நாட்களுக்கு முன், இங்கு படையினருக்கான சாவு ஓட்டப்போட்டி ஆரம்பித்திருந்தது. அதுவும் தடல்புடலாகத்தான். இதுவும் தடல்புடலாகத்தான்.

ஓடிய படையினர் அல்லைப்பிட்டிச் சந்தியிலுள்ள படைமுகாமை அடைந்தபின்னர் ஊர் பயங்கர நிசப்தமானது. கோரப் புயலடித்து ஓய்ந்தமாதிரி. ஆனால் மக்கள் மனங்களோ அமைதி கொள்ளவில்லை. அடிவாங்கியவன் பழிவாங்குவதற்கு குடிமனைகள் மீது கண்டபடி செல் அடிப்பான். ஊரைவிட்டுத் தெற்குப்புறமாய் நகர்ந்து மேற்கே போனாலும் மண்கும்பானிலும் இதே நிலைதான். இதுவரை வெடித்த எறிகணைகளில் கணிசமானவை மண்கும்பானில்தான் வெடித்தன. மேற்கே சாட்டியிலுள்ள படையினர் வேலணைப் பக்கமும் போகவிடமாட்டார்கள். போதாக்குறைக்கு ஊரடங்குச் சட்டம். எங்குமே நாங்கள் போகமுடியாது. எப்படியும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியவர்களே. இதை உணர்ந்த சிலர் வீடுகளில் பதுங்குகுழிகளை வெட்டினார்கள். கணிசமானோர் வீடுகளிலும், அதிகமானோர் தேவாலயத்திலும், பாடசாலையிலும் தங்கியிருந்தார்கள்.

## அருள்

மாலை 4.00 மணியளவில் மீண்டும் ஆட்லறிகள் எறிகணைகளைக் கக்கத் தொடங்கின. ஒவ்வொருவரும் அந்தந்த இடங்களிலேயே குப்புறப் படுத்துக் கொண்டனர். வீடுகள் அதிர்ந்தன, நிலம் அதிர்ந்தது, விளைநிலங்களும், பயன்தரும் மரங்களும் குண்டுச் சிதறல்களால் சேதமாகிக் கொண்டிருந்தன. அந்தி சாயும் வேளை இந்நிலை தொடர்ந்தது. அதன் பின்னர் இரவு பதினொரு மணிவரை ஆங்காங்கே சில எறிகணைகள் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. படையினரை விரட்டியடித்தபின் விடுதலைப் புலிகள் தாம் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்தும் படையினர் மீது நடாத்துவதைத் தவிர்த்துக் கொண்டனர். இராணுவமும் கடுமையான எறிகணை வீச்சை நிறுத்தியிருந்தது. எங்களுக்கு எல்லமே சூனியமாக இருந்தது இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக சிங்களப் படையின் காடைத்தனம் பற்றிய பூரணமான பட்டறிவுள்ள நாங்கள் அவர்கள் அமைதியாய் இருப்பதுபற்றி விபரிதமாக ஆச்சரியப்பட்டோம்.

வெள்ளி பின்னிரவு தரையிறங்கிய விடுதலைப் புலிகள் சனி நண்பகலுக்குள் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் தெற்கு கடற்படைத் தளங்களை முற்றாக அழித்து நிர்மூலமாக்கி அப்பகுதிகளைக் குறிப்பிட்ட பல மணித்தியாளங்கள் வரை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பின்னர் அன்று முன்னிரவே வன்னி திரும்பி விட்டனர். அது வரை நேரமும் இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்குள் வந்துவிட்டோம் என்ற மனோநிலையில் இருந்த எங்களுக்கு விடுதலைப் புலிகள் வன்னி திரும்பியது பலத்த ஏக்கமாக இருந்தது. மீண்டும் இராணுவத்தின் பிடிக்குள் நாம் சிக்கப்போவதை நினைத்துப் பீதியால் துடித்துக்கொண்டிருந்தோம்.

இதுவரை நேரமும் இராணுவம் வாழாதிருப்பது தொடர்பாக ஏற்கனவே நாம் விபரீதமாக ஆச்சரியப்பட்டோமல்லவா? அந்த ஆச்சரியம் தப்பானதாக இருக்கவில்லை. நாங்கள் நினைத்த அந்தக் கொடூரம் நிகழத் தொடங்கியது. ஆட்லறிக் குண்டுகள் எங்கெல்லாமோ இருந்து எங்களைத் தேடி வந்துகொண்டிருந்தன. போதாக் குறைக்கு இடையிடையே கடலில் இருந்தும் பீரங்கித் தாக்குதல்கள், அத்தோடு பல்குழல் பீரங்கியும் முழங்கத் தொடங்கி இடைவிடாது றொக்கெட்டுகளைத் தள்ளிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு குண்டு வெடிப்புக்கும் இடையே ஒரு கைநொடிப்பொழுது கால அவகாசம்கூட இருக்கவில்லை. ஒரே கணத்தில் பல குண்டுகள் வெடித்தன. குண்டு எங்கே விழுந்தது எனக் கேட்காமல் குண்டு எங்கே விழவில்லை எனக்



கேட்கும் அளவிற்கு அங்கிங்கென்னாதபடி எங்கும் விழுந்தது அருகே விழுந்ததும் முன்னே ஓடினோம். முன்னே விழுந்ததும் பின்னே ஓடினோம். அங்கும் விழுந்தது கோடை மழைக்காய் எங்களுக்குக் குண்டுமழை பொழிந்தது. ஓரிரு மணித்தியாளங்கள் அல்ல ஒன்றரை நாட்கள் வரை.

சின்னஞ்சிறிய இச் சிற்றூரை அழிப்பதற்கு இத்தனை நேரமாய் ஏவியகுண்டுகள் முப்பதிற்கும் மேற்பட்ட அப்பாவிகளைக் கொன்றும் நூற்றுக்கும் மேற்பட்டவர்களைக் காயப்படுத்தியும் இனவாதிகளின் கோரப்பசிக்குத் தீனி போட்டிருந்தன. சென் பிலிப்புநேரியார் தேவாலயத்தில் மட்டும் பதினெட்டுப் பேர் இரையானார்கள். எழுபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். ஆலயத்தில் மக்கள் தஞ்சமடைந்திருந்தபோது அங்கு வீழ்ந்த றொக்கெற் குண்டுகளே இவ் அப்பாவிகளின் உயிர்களைக் காவுகொண்டும் காயப்படுத்தியும் இருந்தன. பச்சிளம் குழந்தைகள், பள்ளி மாணவர்கள் உட்பட பலரைக்கொன்ற இக் குரூரத்தில் கைமுறிந்த நான்குமாதச் சிசு ஒன்றும், நான்கு வயது நிரம்பாத நிலையில் படுகாயமடைந்த சகோதரிகள் மூவரும் இன்றும் தமது தாய் தந்தையரை ஊரில் பறி கொடுத்துவிட்டு அவர்களின் உடலங்கள் மீட்கப்படாமல் உப்பிப்பருக்க இவர்கள் ஆதரவற்றுத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். குஞ்சு குழந்தை உட்பட குடும்பமாகக் காயப்பட்டவர்கள். அங்கவீனர்கள் ஆனவர்களே இங்கு அனேகர்.

சென் பிலிப்புநேரியார் தேவாலயத்தில் குண்டுகள் விழுந்தபோது மயிரிழையில் உயிர்தப்பி பின்னர் அல்லைப்பிட்டியிற் காணாமல்போன வணபிதா ஜிம் பிறவுன் அடிகளாராலும் யாழ் மேலதிக நீதியாளராலும் பெருமுயற்சி எடுக்கப்பட்டதன் விளைவாக காயப்பட்டவர்களையும் ஆலயத்தில் படுகொலையானவர்கள் பதினெட்டுப் பேரின் சடலங்களையுமே காலதாமதமாகவேனும் மீட்க முடிந்தது. ஏனைய சடலங்களை மீட்க கடற்படை தடையாய் இருந்தது. நீதியாளரின் பணிப்பின் பேரில் சிங்கள பொலிசார் இதற்கான பொறுப்பை ஏற்றும் அதனை நிறைவேற்றவில்லை. மீண்டும் நீதியாளர் எடுத்த முயற்சியினால் அவர் முன்னிலையில் ஏழு சடலங்கள் இருபத்திரண்டு நாட்களின் பின் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டு அவ்விடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டன. ஏனையவை இதுவரை மீட்கப் படவோ, அடக்கம் செய்யப்படவோ இல்லை. யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அல்லைப்பிட்டியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தனது வீட்டில் ஆறு சடலங்கள் இதுவரை மீட்கப் படாமல் இருப்பதாகக் கூறினார். அவரைப் போல் காயமடைந்து சிகிச்சைபெறும் பெண்மணி ஒருவர் தனது வீட்டில்

> **"மானிட நேயம் கொண்ட உலக சமுதாயமே!**
> **வாழ்வின்மீது தாகம் கொண்ட**
> **எம் உடன் பிறப்புக்கள் நாள்தோறும்**
> **மரணத்தின் வாயிலில் நின்று துடிப்பதையும்,**
> **ஈற்றில் இந்த இதயங்களின் உயிர்த் துடிப்பு**
> **அடங்கிப் போவதையும் ஒருகணம்**
> **உன் கூர்மதியினால் உணர்ந்து பாரேன்."**

செல் விழுந்ததால் மயிரிழையில் தப்பி ஓடிப்போய் இன்னோர் வீட்டில் பதுங்கியிருந்த போது அங்கே செல் விழுந்ததினால் இறந்த நான்கு பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்படவில்லை என்றார். இதேபோல் இன்னும் இரு சடலங்கள் மீட்கப் படாமல் இருப்பதை அறிந்தேன். அறியாதது இன்னும் எத்தனையோ?

சென் பிலிப்புநேரியார் தேவாலயத்தில் இறந்த, காயப்பட்ட மக்கள் மத்தியில் இறுதி நேரம் இருந்த சகோதரியொருவர் தான் நேரில் கண்டதைத் தெரிவிக்கையில், எனது வீட்டு வளவினுள் சனிக் கிழமை பகல் செல் விழுந்தது அதில் ஒருவர் காயப்பட நான் பாடசாலைக்கு ஓடிவந்தேன் அன்றைய இரவை அங்கே கழித்தபோது கண்டபடி செல்கள் விழுந்தன. விடிந்ததும் வீட்டிற்குப் போனேன். அப்பகுதியில் ஒருவரையும் காணவில்லை, மயான அமைதி நிலவியது. பயமாக இருந்தது. ஆலயத்திற்குப் போனால் அங்குள்ளவர்களோடு தங்கலாம் என்ற எண்ணத்தில் அங்கு போனேன். அங்கே நால்வரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. ஆலயம் இடிந்து கிடந்தது. இடிபாடுகளுக்குள் மனிதச் சடலங்கள். இரத்தவெள்ளம். சதைத் துண்டங்கள். காயமடைந்தவர்களின் அவலக் குரல்கள். வேதனையின் துடிப்புக்கள், குற்றுயிர்களின் ஊசலாடல்கள் 'அக்கா தண்ணி' மரணத்தின் வாயிலில் நின்றுகொண்டு இருக்கும் ஜீவன்களின் பரிதாபமான கெஞ்சல்கள்.... கொலைக் களத்தில் பலிக் கடாக்கலான அந்த அப்பாவிகளின் கோரநிலைக் காட்சியினை மேலும் சொல்லத் திரானியற்று அவர் விம்மத் தொடங்கினார்.

இத்தனை அட்டூழியங்களையும் நேரில்கண்டவரும், அனுபவித்தவருமான வண பிதா ஜிம் பிறவுன் அடிகளார் நடந்தேறிய படுகொலைகளின் உண்மை நிலையினை உலகிற்கு அம்பலமாக்கி விடக்கூடிய ஒரேயொரு ஆவனமாக இருந்தமையால் இக் கொடூரங்கள் நிகழ்ந்து ஒரு கிழமைக்குள் அவர் மர்மமாக மறைக்கப்பட்டார். ஈ கூட நுழைய முடியாத அளவிற்கு அதியுச்ச பாதுகாப்பை இச் சம்பவத்தின் பின்னர் ஏற்படுத்தியிருக்கும் சிங்கத்தின் குகைக்குள் இந்த அருட் பணியாளர் காணமல் போனதன் சூத்திரம் உலகிற்கு இன்னும் துலங்கவில்லை என்றால், அது கைப் புண்ணுக்கு கண்ணாடி கேட்கும் சங்கதியே.

சிங்கள இனவாதிகளின் இனவொழிப்புச் செயற்பாடு காலத்திற்குக் காலம் என்ற நிலையிலிருந்து மருவி இப்போது நிமிடத்திற்கு நிமிடம் என்ற நிலைக்கு வந்துவிட்டது. இவ்வருடம் ஓகஸ்ற் மாதம் மட்டும் மூதூர் படுகொலை, அல்லைப்பிட்டிப் படுகொலை, தென்மராட்சிப் படுகொலை, செஞ்சோலைப் படுகொலை, எல்லாவற்றிற்கும் மேலாக நாளாந்தம் தவறாமல் சுட்டுக் கொல்லப்படுவோர் என படுகொலைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. ஆனால் உலகம் இதைப் பார்த்துக் கொண்டு ஏனோ வாய் மூடி மௌனம் காக்கின்றது?

மானிட நேயம் கொண்ட உலக சமுதாயமே! வாழ்வின்மீது தாகம் கொண்ட எம் உடன் பிறப்புக்கள் நாள்தோறும் மரணத்தின் வாயிலில் நின்று துடிப்பதையும், ஈற்றில் இந்த இதயங்களின் உயிர்த் துடிப்பு அடங்கிப் போவதையும் ஒருகணம் உன் கூர்மதியினால் உணர்ந்து பாரேன். ●



www.eelamview.com



# கிழக்கு யாருடைய கையில்?

கட்சி அடிப்படையில் அல்லாததும் கூட்டுக் கருத்துக்களை முன்வைக்க இயலாததுமான சில்லறைகளாக உள்வாங்கப்பட்டவர்களைக் கொண்டு அரசை மாற்றியமைத்ததன் மூலம் தனக்குச் சவால்விடக்கூடிய எந்த வலுவான சக்தியும் அதிகாரத்தில் இல்லாதபடி செய்திருக்கிறார் சிறிலங்கா சனாதிபதி. பாதுகாப்புப் பிரதியமைச்சுப் பதவியை இதுவரை யாருக்கும் வழங்காது, அவ்வமைச்சின் அதிகாரக் கட்டமைப்பைப் பாதுகாப்புச் செயலரான தனது தம்பி விரும்பியபடி வடிவமைக்க அவகாசம் வழங்கியிருக்கும் அவர், தன்னைப்போன்ற தென்னிலங்கையின் 'ருகுணு குமாரர்களையே' பெரும்பாலான அரச நிருவாகங்களின் உச்சங்களை நோக்கி நகர்த்துவதாகவும் அறியப்படுகிறது. கட்சியின் முக்கியஸ்தர்களையே மந்திரிப் பதவியிலிருந்து தூக்கியடித்ததன் மூலம், தனிநபர் வலிமையையும் பறைசாற்றியிருக்கிறார். புலிகளுடன் போர் நிகழ்த்தினாலும், போரை முடித்துவிட்டாலும் அல்லது ஒப்பந்தங்களிடயே நகர்ந்தாலும்கூட, எதிர்வரும் பதின்ம ஆண்டுகளில் தரைப்படைக்குச் சமனான அல்லது மேலான ஒரு பணிப்பங்கு கடற்படைக்கு உருவாகும் என்ற பரவலான படைத்துறை எண்ணப்பாட்டின் அடிப்படையிலேயே தனது இளைய மகனைக் கடற்படையில் இணைத்துள்ளார் என்ற கொழும்புக் கருத்தோடு நோக்குங்கால் அவரது மனதிலுள்ள நிகழ்ச்சி நிரலானது, இரண்டு தடைவைக்குமேல் நீட்டிக்க முடியாத பதவிக்காலத்தினுள் அடங்கிநிற்பதாகத் தெரியவில்லை. அந்தப் பெருநிரலின் ஒரு வரியாக, கிழக்கின் குடிப்பரம்பல் மற்றும் படைப்பரம்பல் வடிவத்தை மாற்றுவதன் மூலம் தன் அரசியல் தளத்தை வலுப்படுத்த அவர் முனைகிறார்.

வாகரை பற்றிய அவரின் ஜேம்ஸ் பொண்ட் பாணியிலான பரப்புரைக்குக் கிடைத்த வெற்றியானது, அண்மைக்கால ஊடக வரலாற்றின் ஒரு உச்சநிலைப் பிரயோகம். இனிமேல் மும்மணிகள் என்று ராஜபக்ச சகோதரர்களைத்தான் அழைக்க வேண்டியிருக்குமோ என்கிற அளவிற்குத் தென்னிலங்கையிலும் கதையாகவுள்ளது. குரூரமான இனவிரோதச் செயல்களில் ஈடுபடும் படையினருக்கு குற்றவிலக்களிப்பு வழங்கப்பட்ட படை நடவடிக்கைக்கு மௌன அங்கீகாரம் வழங்குமளவில் பன்னாட்டு மட்டத்திலும், அவரின் ஊடகப் பம்பரம் ஆடித்தான் இருக்கிறது.

வாகரைப் பெறுபேறுகள் பற்றிய கொழும்பின் ஊட்டலானது, பாராளுமன்ற உறுப்பினர்கள் சோரம்போவதற்கும், முதலீட்டு நிறுவனங்களைத் தற்காலிகமாகவாவது சாந்தப்படுத்துவதற்கும், சென்றவருடப் பின்னரைப் பகுதியில் தரைப்படைத் தளபதி சரத் பொன்சேகா பல வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு உபதேசித்ததாகச் சொல்லப்படும் 'படைச் செயற்பாட்டோடமைந்த அரசியல் தீர்வுத்திட்டத்தில்' நம்பிக்கை ஏற்படுவதற்கும் காலாயமைந்திருக்கிறது. அவை எல்லாவற்றையும் விட, 'ராஜபக்ச வம்சம்' ஒன்றிற்கான அத்திவாரமிடும் ஆசையைத் தூண்டத்தக்கதாக அவரதும் குடும்பத்தினரதும் செல்வாக்கு தென்னிலங்கைச் சாதாரணர்கள் மத்தியிலும் ஓங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. வாகரை வெற்றியில் கோத்தபாயவின் பங்குபற்றி சிறிலங்காவின் பாதுகாப்பு இணையத்தளத்தில் தனி ஆய்வுரை வெளிவந்ததமை, தெற்கின் சந்துபொந்துகளிலெல்லாம் பேருருப் படமாக ராஜகளையுடன் சனாதிபதி நிறுத்தப்பட்டமை எல்லாம் தொடர்புடையவையே. ஆனால், முப்பது வருடகால ஈழப்போரானது வாகரையை வசப்படுத்தியதோடு முடிவை நெருங்கத்தொடங்கிவிட்டது என்பதை நம்பவைப்பதற்காகச் செய்த பிரச்சாரத்தை தானே நம்பத் தலைப்படுகிறபோதுதான் அன்னாரின் ராஜகளை மாறி அசட்டுக்களை தெரிகிறது.

அம்பாறையிலும், வாகரையை உள்ளடக்கிய திருமலையிலும் உள்ள குடிமனைப் பகுதிகளில் இருந்து புலிகள் வெளியேற்றப்பட்டது. அங்குள்ள படைவலுச்சமநிலையின் அடிப்படையில்தான் என்பதில் ஐயமில்லை. கிழக்கில் முதற்தடைவையாகக் கவசப்படை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தவிர, வான்படை, பீரங்கிப்படை போன்றவற்றின் உச்ச ஆற்றலும், புலிகளைவிடப் பல பங்கு அதிகமான துருப்புக்களும், வேறெங்கும் திசைதிருப்பப்படாத நிலையில், ஒரு மரபுச் சமரில் இறங்கும்போது யாருடைய கை மேலோங்கமுடியும் என்பதைக் கணிப்பதற்குப் படையவிற்பன்னர்கள் தேவையில்லை.

அதேநேரம், உலகின் நாலாவது பெரிய ராணுவத்தோடு மோதி அனுபவப்பட்ட தளபதிகளால் வழிநடத்தப்பட்டும் புலிகளின் அணிகள், மோதவேண்டிய நேரத்தையும் விலகியொதுங்கவேண்டிய தருணத்தையும் அதன் இடைக்காலத்தில் இயங்கவேண்டிய முறையையும் அறியாது திணறுவார்கள் என்று நினைக்குமளவிற்கு சிறிலங்காப் படை அதிகாரிகள் கற்றுக்குட்டிகள் அல்லர். அதனால்தான், வாகரையைத் தொடர்ந்து உடனடியாவே மட்டக்களப்பு வாவியின் மேற்குப்புறத்தில் இருக்கும் ஏ5 சாலையை உள்ளடக்கிய விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைக் கைப்பற்றவேண்டும் என்ற ராஜபக்ச மும்மணிகளின் அரசியல் வேட்கைக்கு அவர்களால் சாதகமான பதிலை உடனடியாகத் தரமுடியாமலிருக்கிறது.

அவர்களின் கவலை அது மட்டுமே அல்ல.

கொழும்பில் உள்ள பலர் நம்பவைக்கப்பட்டிருப்பது போல புலிகள் கிழக்கின் ஒரு மூலையில் ஒடுங்கிப்போய் தாக்குதல் நடத்தத் திராணியற்றவர்களாக ஆகியிருக்கவில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். இப்போதுள்ளதை விட அதிக அரசபடைகள் கிழக்கிலே நிறுத்தப்பட்டிருந்த காலத்திற்கூட பாரிய தாக்குதல்களைப் புலிகள் செய்தேயிருக்கிறார்கள். அதோடு, கிழக்கிலே கருணாவோடு புலிகளின் தாக்குதல் திறனும் நீர்த்துப்போகவில்லை என்பதை வாகரைக்கான தொடர்சமரில் அரசபடைகள் நேரிலே கண்டார்கள். தவிர, ஆறு மாதத்திற்குமேல் நீடித்த மரபுப்போர்முறை என்பது கிழக்கில் புதியவிடயம். முன்பெல்லாம் புலிகளைப் பூண்டோடு ஒழிப்போம் என்னும் தென்னிலங்கைக் கூச்சல் கிழக்கில் மட்டும் ஒழிப்போம் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளதானது, ஓரளவேனும் யதார்த்தநிலை உணரப்பட்டதன் வெளிப்பாடே. வாகரையில் புலிகளின் மரபு அம்சங்கள் இப்போதைக்கு நீக்கப்பட்டாலும், மட்டக்களப்பு வாவியின் மேற்கேயுள்ள புலிகளின் வலுநிலைகள் சலனப்படாது நிற்கின்றன. அவர்கள் ஏ11 மற்றும் ஏ5 சாலைகளில் இருக்கும் தனிப்படுத்தப்பட்ட பல இலக்குகளில் ஒன்றின் மீது கெரில்லாத் தாக்குதல் நிகழ்த்துவார்களாக இருந்தால், அது படையினர் மீது அண்மைக்காலமாக எழுந்துநிற்கும் நம்பிக்கைக் கீற்றையும் மங்கப்பண்ணி, தென்னிலங்கை அரசியலிலும் பொருளாதாரத்திலும் எதிரொலிக்கும்.

தவிர, முதல் மூன்றுகட்டப் போர் காலத்தைப் போலல்லாது, புலிகளின் ஊடக நீட்சி இப்போது மிக அதிகம். முல்லைத்தீவில் ஆயிரக்கணக்கான சிப்பாய்களின் சடலங்களை ஏற்கமறுத்து இழப்பை மறைத்தது போன்ற உத்தியை இனி ஒருபோதும் சிறிலங்கா படைகள் கனவிலும் நினைக்க முடியாது. கடந்தவருடப் பிற்பகுதியில் முகமாலையில் புலிகள் கைப்பற்றிய சிப்பாய்ச் சடலங்களை படங்களுடனும் படைய இலக்கங்களுடனும் இணையத்தளங்களிலே கண்ட உறவினர்கள் மற்றும் ஊடகங்களின் அழுத்தமே படையினரின் இழப்பு இருபத்தி எட்டுத்தான் என்று சாதித்த படைத் ☞

**கிழக்கு என்பது புலிகளின் தாயகக் கோட்பாட்டின் உள்ளடக்கம் என்றபோதும் அதை உடனடி மரபுக் களமாகப் பேணவேண்டும் என்ற விதிப்பு, அரசபடைகளுக்கு இருப்பதைப்போல, புலிகளுக்குக் கிடையாது. வாகரையின் இழப்பு என்பது அரசபடைகள் முல்லைத்தீவை இழந்ததைப்போன்ற முற்றுமுடிவான இழப்பும் அல்ல. அரச படைகளின் ரிவிரச நடவடிக்கை தொடக்கம் புலிகளின் ஓயாத அலைகள் 3 வரையான காலத்தில், வடபோரரங்கிற் பங்கேற்பதற்காக, கிழக்கு அரங்கத்தில் இருந்து 44 படைமுகாம்களை மூடிக்கட்டிக்கொண்டு அரசபடைகள் வெளியேறின. புலிகளைப் போருக்குள் ஈர்த்தெடுத்து அழிக்கும் உத்தி என ரத்தவத்தவினால் வருணிக்கப்பட்ட ஜெயசிக்குருவில் உண்மையில் வடபோர்முனைக்கு ஈர்த்து எடுக்கப்பட்டது சிறிலங்கா அரசபடைகள்தான். தரைப்படையைவிட, கடற்படையும் வான்படையும் கூட அங்கே தரையில் போரிட அனுப்பப்பட்டன. அப்போதுகூட, தடுத்து நிற்பதற்கும் தளர்த்திவிடுவதற்கும் வெட்டியாடுவதற்கும் முட்டிமோதுவதற்குமான இடம் காலம் என்பவற்றைப் புலிகளே தீர்மானித்து மாங்குளம்வரை படையினரை அனுமதித்தார்கள்.**



# தேசத்தின் குரலுக்கு வீரவணக்கம்

**தலைமைச்செயலகம்,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்,**
**தமிழீழம்.**
**2006-12-14**

எமது சுதந்திர இயக்கத்தின் அரசியல் இராஜதந்திர நகர்வுகளில் எனக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்ட எமது தேசத்தின் ஒளிவிளக்கு இன்று அணைந்துவிட்டது. ஆலோசனை வேண்டி, ஆறுதல் தேடி ஓடுவதற்கு பாலாண்ணை இன்று என்னுடன் இல்லை. இவரது மறைவு எனக்கு மாத்திரமல்ல தமிழீழ தேசத்திற்கே இட்டுநிரப்பமுடியாத பேரிழப்பு.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே விரியும் காலமாக மனிதவாழ்வு நிலைக்கிறது. இந்த வாழ்வுக்காலம் எல்லா மனிதர்களுக்கும் ஒரேமாதிரியாக, ஒத்ததாக, ஒருசீராக அமைவதில்லை. காலச்சீரற்றதாக ஒருவருக்குக் கூடி, மற்றவருக்குக் குறுகி, இன்னொருவருக்கு அதிகம் நெடுத்து கூடிக்குறைந்து செல்கிறது. துரதிஸ்ட வசமாக, பாலாண்ணையினது வாழ்வு இடைநடுவில் நின்றுபோய்விட்டது. தீவிரம்பெற்றுள்ள எமது விடுதலைப்போருக்கு அவர் நிறையப் பணிகளை ஆற்ற வேண்டியிருக்கின்ற தருணத்தில் அவருக்கு மரணம் சம்பவித்திருக்கிறது. இதனை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்துகிறது. என் உள்ளத்தை உடைத்து, நெஞ்சத்தைப் பிளக்கிறது. கட்டுக்கடங்காத காட்டாறு போல சீறிப்பாயும் உணர்ச்சிப் பெருவெள்ளத்தை என்னால் வார்த்தைகளால் கொட்டமுடியாது. மனித மொழியில் இதற்கு இடமுமில்லை.

பழக ஆரம்பித்த நாள் முதலே எமக்கிடையே ஒரு இனம்புரியாத புரிந்துணர்வு ஏற்பட்டது. அந்தப் புரிந்துணர்வால் எழும் பற்றுறவால் பிணைந்துகொண்டு, எமது உறவு நல்லுறவாக வளர்ந்து நட்புறவாகப் பரிணமித்தது. சிந்தனையாலும் செயலாலும் ஒன்றுபட்ட மனிதர்களின் சங்கமமாக அந்த உறவு மலர்ந்தது. தினம்தினம் நாம் பகிர்ந்துகொண்ட வாழ்பனுபவத்தில் வலிமைபெற்று வளர்ந்தது. சாதாரண மனித உறவுகளிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. காலத்தால் கனிந்து, வரலாற்றால் வடிவம் பெற்ற ஒரு அலாதியான இலட்சிய உறவு அது.

பாலாண்ணையை நான் ஆழமாக நேசித்தேன். விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்றுசேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன். மோசமாகச் சுகவீனமுற்று தினம்தினம் சாவோடு போராடியபோதும், தாங்கமுடியாத உடல்உபாதைகளால் வருந்தியபோதும், தளர்ந்துபோகாத உறுதிப்பாடு அவரிடம் இருந்தது. அவரின் இந்த இலட்சிய உறுதி எனது நெஞ்சத்தைத் தொட்டுநின்றது. அவர் துன்பத்தால் துவண்ட போதெல்லாம் எனது ஆன்மாவும் கலங்கியழுதது.

எமது இயக்கத்தின் வளர்ச்சியிலும் அதன் இன்றைய விரிவாக்கத்திலும் பாலாண்ணைக்கு ஒரு நிரந்தரமான இடம் இருக்கிறது. ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, ஒரு தத்துவாசிரியராக எல்லாவற்றுக்கும் மேலாக எனது உற்ற நண்பனாக இருந்து எனக்கு ஊக்கமும் உத்வேகமும் அளித்தவர். ஆலோசனையும் ஆறுதலும் தந்தவர். எனது உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு, எனது பழுக்களையும் பங்கிட்டுக்கொண்டவர். எமது விடுதலை இயக்கம் தோற்றம்பெற்ற ஆரம்பகாலம் முதல் என்னோடு இருந்து, எல்லாச் சோதனைகளையும் வேதனை களையும் சவால்களையும் சங்கடங்களையும் தாங்கிக்கொண்டவர். எமது அரசியல் இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கு மூலாதாரமாக, முன்னால் நின்று செயற்பட்டவர்.

ஈழத்தமிழினம் பெருமைகொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் அளப்பெரும் சாதனைகள் புரிந்து, எமது தேசசுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய பாலாண்ணையின் மாபெரும் போராட்டப்பணிக்கு மதிப்பளித்து **''தேசத்தின் குரல்''** என்ற மாபெரும் கௌரவப்பட்டத்தை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். பாலாண்ணை உண்மையில் எம்மைவிட்டுப் போகவில்லை. அவர் எமது நினைவலைகளில் என்றும் நீங்காத நினைவுகளாக நிலைத்து நிற்பார்.

**''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''**

**வே. பிரபாகரன்,**
**தலைவர்,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

☞

தலைமையை எழுபத்தி எட்டு என்று மாற்றவைத்ததுடன் சிப்பாய்களின் உடல்களையும் ஏற்கவைத்தது. கிழக்கில் இன்றுள்ள நிலைமைக்கு, ஒரு பத்துப் படைச்சிப்பாய்களின் உடல்கள் புலிகளின் ஊடகங்களில் காட்டப்பட்டாலே பன்னாட்டு மட்டத்தில் கிழக்கு பற்றிய அரசதரப்புப் பிரச்சாரம் நையாண்டிக்குரியதாகிவிடும்.

தவிர, கிழக்குத்தொடர்பாக புலிகளின் நீண்டகால உபாயங்கள் பற்றிய சரியான கணிப்பீட்டிற்கு சிறிலங்கா படைத் தரப்பு வந்துவிட்டதா என்ற கேள்வியும் இங்கே தவிர்க்க முடியாதது. இந்த வருடத்தின் இரண்டாம் நாள், பௌத்தகுரு வின் ஆசிவேண்டிய தருணத்தில், கிழக்கில் புலிகளை பெப்ரவரிக்குள் 'அழித்தொழித்து விட்டு' வடக்கில் யூன் மாதமளவில் போர்தொடுப்பேன் என்ற வார்த்தையை படைத்தளபதி சரத் பொன்சேகா பயன்படுத் தியது சரியா என்ற கேள்வியை கொழும்பு ஆய்வாளர் சிலர் இப்போதே எழுப்பத் தொடங்கிவிட்டார்கள். அந்தக் கால அளவீடு அவரின் மதிப்பீடுகள் பற்றிய அல்லது அறிக்கைகள் பற்றிய நம்பகத்தைக் கேள்வி கேட்க வைத்திருக்கிறது. இவையொன்றும் புதிதல்ல. 1979இல் 'கடாமாட்டு' வீரதுங்காவும் பின்பு சனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனவும் பிறகு இந்தியத் தளபதி களும் பிற்பாடு தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் ரஞ்சன் விஜேரத்னவும் வெகு அண்மையில் ரத்வத்த ஐயாவும் சொன்னவைதான். புலிகள் இப்போது அம்பாறையில் அவ்வப்போது நடத்தும் தாக்குதல்கள் மற்றும் திருமலையில் இப்போதும் உலங்குவானூர்திகளைக் கொண்டு புலிகளின் அணிகளைத் தாக்கவேண்டியிருப்பது என்பவை புலிகள் அங்கும் ஏதோ ஒரு மட்டத்திலான செயற்தி றனுடன் இருப்பதற்கான நிரூபணமே. உத் திக்காக அந்தக் காலவரையறையைச் சொல்லியிருந்தால்கூட, அதற்குப் புலிகளும் எடுபட்டார்களா என்ற கேள்வியும் உண்டு.

கிழக்கு என்பது புலிகளின் தாயகக் கோட்பாட்டின் உள்ளடக்கம் என்றபோதும் அதை உடனடி மரபுக் களமாகப் பேண வேண்டும் என்ற விதிப்பு, அரசபடைகளுக்கு இருப்பதைப்போல, புலிகளுக்குக் கிடையாது. வாகரையின் இழப்பு என்பது அரசபடைகள் முல்லைத்தீவை இழந்ததைப்போன்ற முற்று முடிவான இழப்பும் அல்ல. அரச படை களின் ரிவிரச நடவடிக்கை தொடக்கம் புலிகளின் ஓயாத அலைகள் 3 வரையான காலத்தில், வடபோரரங்கிற் பங்கேற்பதற்காக, கிழக்கு அரங்கத்தில் இருந்து 44 படை முகாம்களை முடிக்கட்டிக்கொண்டு அரச படைகள் வெளியேறின. புலிகளைப் போருக்குள் ஈர்த்தெடுத்து அழிக்கும் உத்தி என ரத்தவத்தவினால் வருணிக்கப்பட்ட ஜெயசிக்குருவில் உண்மையில் வடபோர் முனைக்கு ஈர்த்து எடுக்கப்பட்டது சிறிலங்கா அரசபடைகள்தான். தரைப்படையைவிட, கடற்படையும் வான்படையும் கூட அங்கே தரையில் போரிட அனுப்பப்பட்டன. அப்போதுகூட, தடுத்து நிற்பதற்கும் தளர்த்தி விடுவதற்கும் வெட்டியாடுவதற்கும் முட்டி மோதுவதற்குமான இடம் காலம் என்ப வற்றைப் புலிகளே தீர்மானித்து மாங்குளம் வரை படையினரை அனுமதித்தார்கள். முடிவில் அரசபடைகள் கிழக்கில் அந்த 44 முகாம்களும் இருந்த இடங்களையும் இழந்து வடக்கில் வட்டியாக ஆனையிறவை யும் பறிகொடுக்க நேர்ந்தது. இதுபோன்ற உத்தியொன்றைப் புலிகள் மீண்டும் பயன் படுத்த இடமளிக்கக் கூடாது என்ற கவ லையும் அரசபடைத் தரப்பிற்கு இருக்கிறது.

இதைவிட, வாகரையில் நிரந்தர மாகத் தரித்துநிற்கும் நோக்கம் புலிகளுக்கு இருந்திருந்தால், அவர்கள் கிழக்கிலுள்ள வேறு அணிகளால் அல்லது வடக்கு முனையில், திசைதிருப்பும் வலிமையான முயற்சிகளை ஏன் தொடர்ச்சியாக மேற்கொள்ளவில்லை? வேறு அணி களின் துணையின்றியே வாகரையில் புலிகளால் மரபுமுறையில் 6 மாதங்கள் போரிட முடிந்ததென்றால் அதைவிடவும் பலமான நிலையில் வாவியின் மேற் கிலுள்ள புலிகளை, மக்கள் குடியிருப்புப் பகுதியிலிருந்து அகற்ற எவ்வளவு காலம் தேவைப்படும்? அவ்வாறு நிகழும் பட்சத் தில், வாகரையைப்போல அங்கும் படை நடவடிக்கைகள் முடியும்வரை புலிகள் அவகாசம் தருவார்களா? அல்லது, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கோடி காட்டியவாறு, புலிகளின் பெருமெடுப்பிலான தயார்படுத்தலுக்கு அந்தக் காலம் பயன்படுத்தப்படுமா? கிழக்கின் மக்கட் குடியிருப்புப் பகுதி அனைத்தையுமே படைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டாலும், அதன்பின் நடவடிக்கைத் துருப்புக்கள் வடபோரரங்கிற்காக விலக்கிக்கொள்ளப்படும் போது, கிழக்கைத் தொடர்ந்து தக்கவைப் பதற்கு அங்குள்ள ஒன்றரை டிவிசனும் சிறப்பு அதிரடிப்படையும் போதுமானவையா? இப்போதும் பல இடங்களில் ஆள் எண்ணிக்கைக்கு விடப்பட்டிருக்கும் ஊர் காவற்படையினர் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களுக்கு நின்றுபிடிப்பார்களா? போன்றவை அரசபடைத்தரப்பின் தவிர்க்க முடியாத கேள்விகள். ஆனால், அதே போலவே, ராஜபக்ச மும்மணிகளின் அரசியல் வாழ்விற்கும் படைத்துறை வெற்றிகள் தவிர்க்க முடியாதவை.

இந்தத் தீவின் நிகழ்ச்சிநிரலைக் கொழும்பிலிருந்து தனியொருவராகத் தயாரிக்க முனையும் ராஜபக்ச, அதைச்செய்யக்கூடிய இன்னுமொருவர் வன்னியிலும் இருக்கிறார் என்ற எதிர்க் கட்சித் தலைவரின் எதார்த்தப் பார்வையைப் புறந்தள்ளுவாரா? கிழக்கின்விதியை சனாதிபதி தீர்மானிப்பாரா? அல்லது கிழக்கு அவரின் விதியைத் தீர்மானிக்குமா? ஆகிய கேள்விக்கான பதில்கள் வருகிற மாதங்களில் கிடைக்கலாம்.

**சேனாதி**

# லெப். கேணல் பூட்டோ
# “நம்பர் வண்”



கரும்புலி
லெப்.கேணல் பூட்டோ/சங்கர்,
(கனகரட்ணம் ஸ்ரான்லி யூலியன்)
பாலைக்குழி, அடம்பன், மன்னமார்.

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 25.05.1974 | 11.08.2006 |




இந்திய இராணுவமும் ஒட்டுக்குழுக்களும் சேர்ந்து தேசபக்தர்களை வேட்டையாடிக்கொண்டிருந்த காலம். மன்னார் மாவட்டத்தின் பாலக்குழிப் பிரதேசத்தில் யூலியனின் தந்தை இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். பாடசாலைக்குள் புகுந்த இராணுவத்தினர் யூலியனைக் காட்டித்தரும்படி துப்பாக்கி முனையில் அச்சுறுத்துகின்றனர். அன்று பாடசாலை செல்லாத யூலியன் தப்பித்துக்கொள்கிறான். உடனடியாக முஸ்லிம் குடும்ப நண்பர் ஒருவரின் உதவியுடன் மறைமுகமாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகிறான். அங்கிருக்கும் நகைக் கடையொன்றில் தற்காலிகமாகப் பணிக்கமர்த்தப்படுகின்றான். முதல் நாள் கடைக்குச் செல்கிறான். அங்கிருக்கும் கதிரையொன்றில் அமர்ந்திருக்கின்றான். அங்கு வந்த முதலாளி ‘கடைக்கு வேலைக்கு வந்தனி எப்படிக் கதிரையில் அமர்ந்திருக்கலாம்? என ஏசுகின்றார். ‘நான் எனது ஆசிரியர்களுக்கு மட்டும்தான் எழுந்து மரியாதை கொடுக்கிறனான்’ என கூறியவன் எவருடைய உதவியுமின்றி மீண்டும் தாயிடம் வந்து சேருகின்றான். ‘அம்மா இப்படி அடிமையாகச் சிறுமைப்படுவதிலும் பார்க்க நான் இயக்கத்திற்குப் போகப்போறன்’ என அனுமதி கேட்கின்றான். அன்னை மொனமாக இருக்கின்றாள். அங்கிருந்த உறவினர்கள் அழுகின்றார்கள். நீங்கள் அழுதுகொண்டு இருக்கையில் நான் இயக்கத்திற்குப் போகமாட்டன். ஆனால் விரைவில் போயிருவன்’ என்றவன் ஒருநாள் இயக்கத்தில் இணைந்துவிட்டான். உயிராபத்துக்களை உதாசினம் செய்து, போராளிகளுக்கு அடைக்கலம் கொடுத்த மிகவும் ஆதரவான வீட்டிலிருந்து, இவன் இயக்கத்தில் இணைந்தது, முகாம் பொறுப்பாளரைச் சங்கடத்திற்கு உள்ளாக்கியது. ‘நீ வீட்ட திரும்பிப் போ’ என கூறுகின்றார். ‘இல்ல நான் அம்மாவிட்ட சொல்லிப் போட்டுத்தான் வந்தனான்’’. என பதிலளிக்கின்றான். இதனை உறுதிப்படுத்த பொறுப்பாளர் தாயைச் சந்திக்கின்றார். மகனின் கூற்றை உண்மையாக்க விரும்பியவள் ‘ஓம் என்னட்ட சொல்லிப்போட்டுத்தான் வெளிக்கிட்டவன்’ எனக் கூறுகின்றாள். முழுமையான போராளியாக மணலாற்றுக் காட்டினுள் இவனது போராட்ட வாழ்க்கை ‘பூட்டோ’ எனும் பெயருடன் தொடங்கியது.

காட்டு வாழ்க்கை, கடினப் பயிற்சிகள் கடந்து வேவுப்புலியாகப் பரிணமிக்கின்றான். காடுகளையும் எதிரிமுகாம்களையும், காவலரண்களையும் கால்களால் நடந்து அளந்து கணிக்கின்றான். ஒரு நாள் ஏழு பேர் கொண்ட வேவு அணியை வழிநடத்தியவாறு, வனப்பாதுகாப்பு வலயத்தின் சுற்றயல் பகுதியை கண்காணித்துக் கொண்டு வருகின்றான். ஒரு இடத்தில் சூழலுக்குப் பொருத்தமற்ற முறையில் புற்கள் மடிந்திருப்பதை அவதானிக்கின்றான். எதிரி தமது பகுதிக்குள் புகுந்துவிட்டதாக கூறுகின்றான். மற்றவர்கள் அதனை மறுதலிக்கின்றனர். இவனோ அப்பகுதியில் அண்மையில் தான் புதைத்து வைத்த மிதிவெடியொன்றைத் தோண்டி எடுக்கின்றான். எதிரி மீண்டும் அப்பாதையைக் கடப்பானாயின் எங்கு பாதம் வைப்பான் என்பதைக் கணிக்கின்றான். அவ்விடத்தில் மிதிவெடியை வைத்து உருமறைத்து விடுகின்றான். தொடர்ந்து நகர்கின்றார்கள். சிறிது நேரத்தில் வெடிச்சத்தம் ஒன்று கேட்கின்றது. ஏனையவர்கள் காட்டு விலங்கு ஏதும் மிதிவெடியில் சிக்கியிருக்கும் என கருத்துத் தெரிவிக்கின்றனர். அதனை மறுதலித்தவன் அவர்களையும் அழைத்துக்கொண்டு அவ்விடம் திரும்புகின்றான். அங்கு இரத்தம் சொட்டியபடியே இராணுவப் பாதணியுடன் துண்டிக்கப்பட்ட கால் ஒன்று கிடக்கின்றது. பின்னர் வந்த நம்பகமான தகவல் மூலத்திலிருந்து தெரியவந்தது,. இவர்களுடைய காட்டு முகாமைச் சுற்றிவளைத்து தாக்கியழிப்பதற்காகத் தங்களது வேவு தகவல்களை இறுதியாக உறுதிசெய்ய வந்த இராணுவ அதிகாரி ஒருவர்தான் மிதிவெடியில் சிக்கியது என்பது. இவனது சமயோசிதச் செயற்பாட்டால் பல போராளிகளின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டது. இவ்வாறான பல பதிவிலுள்ள, பதிவில் இல்லாத நிகழ்வுகளின் ஊடாக இவன் ஒரு இராணுவ விற்பன்னனாக வருவதற்கான அறிகுறிகள் தென்படத்தொடங்கின. மணலாறு மாவட்டத்தில் நடாத்தப்பட்ட பல்வேறு முகாம் தாக்குதல்கள், பதுங்கித் தாக்குதல்கள் என்பனவற்றிற்கு வேவு எடுத்தும், அணிகளை வழிநடத்தியும் போராட்டத்திற்கான தன் பங்களிப்பை மேம்படுத்திக்கொண்டான். இக்காலகட்டத்தில் ஒரு சண்டையில் தனது இடதுகைப் பெருவிரலையும் இழந்திருந்தான்.

இயல்பாகவே இவனிடம் இருந்த சித்திரம் வரையும் ஆற்றலால் இவன் வரைபடப் பகுதிக்குள் உள்ளீர்க்கப்பட்டான். வேவு தகவல்களை வரைபடங்களாக்கி துல்லியமான விபரங்களைக் கொடுத்து பிரதம தளபதிகளின் தாக்குதல் திட்டமிடல்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தான். இயற்கையாகவே இவனிடம் இனிமையாகப் பாடும் திறனும், கவிதை யார்க்கும் வல்லமையும் கைகூடியிருந்தது. வனமுகாம்களில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்குகொண்டு கலையாற்றல்களை வெளிப்படுத்தி போராளிகளை மகிழ்விக்கவும் செய்தான். இயக்கத்தில் கலையரசன் எனும் பெயரையும் பெற்றான். சமகாலத்தில் போராயுதத் தளபாடங்களையும், நவீன இராணுவ உபகரணங்களையும் தன்னுடன் பழக்கப்படுத்தினான். அவற்றின் உச்ச பயன்பாட்டைப் பெறும்வகையில் தன்னை தகவமைத்துக் கொண்டான். தொடர்ந்து பூநகரி கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம்களின் வேவுகளை எடுத்து அவற்றின் மீதான தாக்குதல்களை உறுதிப்படுத்தினான். இப்பொழுது இவன் பல அணிகளை வழிநடத்தும் அணித் தலைமைப் பொறுப்பை வகிக்கத் தொடங்கியிருந்தான்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை தொடர யாழ்நகரம் கைவிடப்பட, இவன் உள்நின்ற போராளிகளுடன் கலந்திருந்தான். இவனது போராவலைத் தீர்ப்பதற்கு நல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தது. ஒருமுறை நடவடிக்கையின் நிமிர்த்தம் பண்ணைக் கடலினூடு நீந்திக்கொண்டிருந்தான். அப்பொழுது அழற்சியை ஏற்படுத்தக்கூடிய, நச்சுக் கடற்தாவரம் ஒன்றினால் தாக்கப்பட்டிருந்தான். உடல் முழுவதும் தடித்து மூச்சு விடுவதையும் சிரமம் ஆக்கியது. ஒருவாறு சிரமப்பட்டு கரையொதுங்கியவன் ஒருவாரத்திற்கு மேலாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மீண்டும் களம் சென்றான்.

முல்லைத்தீவுச் சமர் தொடங்கி விட்டது. ‘பூட்டோ... பூட்டோ!’ என தொலைத் தொடர்பு சாதனத்தில் தளபதி பால்ராஜ் அழைப்பது கேட்கின்றது. ஈழத் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் திருப்புமுனைத் தாக்குதல் அது. நாங்கள் வென்றே ஆகவேண்டும் சர்வ தேசத்திற்கான தமிழீழத்தின் கடற்பாதை திறக்கப்பட்டே ஆக வேண்டும். முகாம் துடைத்தழிப்பை பூரணப்படுத்தப்பட வேண்டும். அதற்காக வேவில் வரைபடத்துறையில், தாக்குதல் அனுபவங்களில், நெருக்கடி நேரங்களில் சரியான முடிவெடுக்கும் வல்லமையைப் பலமுறை நிரூபித்திருந்த பூட்டோ களநிலை அவதானிப்பாளராகவும், டாங்கிக்கான ஒருங்கிணைப்பாளராகவும் களத்தினுள் இறக்கப்பட்டிருந்தான். இவனது செயற்பாட்டால் பகைமுகாம் வீழ்த்தும் முயற்சி துரிதப்படுத்தப்பட்டது. பெரும்பாலான முகாம் பகுதிகள் வீழ்ந்துவிட்டன. ஒரு கட்டடத்தினுள் பல இராணுவத்தினர் ஒளிந்திருந்து தாக்குதலைத் தொடுத்துக்கொண்டிருந்தனர். அவர்களைச் செயல் முடக்கம் செய்யவேண்டும். பூட்டோ டாங்கியைத் தாக்குதலுக்கு ஆயத்தம் செய்து அதன் மூலம் சில சூடுகளை வழங்க ஆணையிட்டான். பகைவன் பதுங்கியிருந்த கட்டடம் அப்படியே தகர்ந்து இறங்கியது. பெரும்பாலான இராணுவத்தினர் கொல்லப்பட்டுவிட்டனர். தொடர்ந்து தாக்குதலை நடாத்தி வெற்றியை உறுதிப்படுத்தும்படி களமுனைத் தளபதி கட்டளையிட்டார். அவ்வாறு செய்ய முற்படுகையில் அவனது உள்ளுணர்வு அவனை எச்சரித்தது. மீண்டும் சூழலை அளவெடுக்கின்றான். மின்னல் என பொறி தட்டியது. டாங்கிக்குப் பக்கவாட்டாக இருக்கும் மண்ணரணில் இடைவெளி தென்பட்டது. எக்காரணம் கொண்டும் டாங்கி இழக்கப்படமுடியாத இயக்கத்தின் இராணுவச் சொத்து. டாங்கியை வேகமாகப் பின்னகர்த்தி பாதுகாப்பிடம் செல்ல உத்தரவிட்டான். டாங்கி சடுதியாகப் பின்னகரவும் குறித்த மண்ணரன் இடைவெளியூடு ஆர்பிஜி கணை ஒன்று எகிறி வந்து இலக்குத் தவறித் தாண்டிச் செல்லவும் சரியாக இருந்தது. கணநேர முடிவில் இயக்கத்தின் இராணுவப் பலங்களில் ஒன்றைப் பாதுகாத்து தொடர்ந்த பல வெற்றிகளுக்கு அடிப்படைக் காரணமாகின்றான்.

ஓயாத அலை 1 வெற்றியில் தமிழீழம் திளைத்திருந்தது. தமிழர்கள் தலைநிமிர்ந்து நடக்கத் தொடங்கினர். சிங்களம் தோல்விக்குச் சப்பைக்கட்டுக் கட்டிக்கொண்டிருந்தது. அவ்வேளை முல்லைத்தீவு முகாமில் எடுக்கப்பட்ட பொருட்களின் தவறான பிரயோகம் சம்பந்தமாக பூட்டோ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டான். அவனை அறிந்திருந்த அனைவருக்குமே விளங்கியிருந்தது. விசாரணை முடிவு அவனைக் குற்றமற்றவன் என நிரூபிக்கும் என. ஆனால் அதுவல்ல இங்கு முக்கியம், அர்பணிப்பும் செயற்திறனும் உள்ள அப்போராளிக்கு இச்செயல் மனவுடைவை ஏற்படுத்தலாம். ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாகவே சம்பவங்கள் நடந்தேறின. விசாரணை முடிவு அவனைக் குற்றமற்றவன் என்றது. ‘தொடர்ந்து என்னசெய்யப் போகிறீர்கள்? விரும்பினால் தண்டனை இல்லாமல் வீட்ட போகலாம்’ என பொறுப்பாளர் தெரிவித்தார். மெலிதாகச் சிரித்தான். ‘நான் தொடர்ந்து இயக்கத்தில் இருக்கிறன்’ என கூறினான். அப்பொழுது பொறுப்பாளர் அப்பச் சரி வரிப்புலி சீருடையைப் போடுங்கோ அண்ணை உங்களைச் சந்திக்க வரட்டாம்.’ ‘நான் தவறு செய்யமாட்டன் என்பதைத் தலைவர் நம்பினார். இதுபோதும் சாகும்வரை இயக்கத்தில் இருந்து செயற்படுவதற்கு’ என தன்னுள் எண்ணியவன் தலைவரைச் சந்தித்தபின் தொடர்ந்து களப்பணியாற்றுகின்றான். பல மாதங்களுக்கு முன்னர் கரும்புலி அணியில் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்துக் கடிதம் அனுப்பியிருந்தான். அதற்கான அனுமதி கிடைத்திருந்தது. ஆபத்துக்களை கடந்து செய்யப்படும் தனது கடின உழைப்பில் மனத்திருப்தி கிடைக்காதவன் கரும்புலியாகச் செயற்படுவதில் அதனை அடையலாம் என நம்பினான். தொடர்ந்து கரும்புலிகளுக்கான உடல் உள உறுதிகளை உறுதிப்படுத்தும், தாங்குதிறனைப் பரிட்சிக்கும் பயிற்சிகளைப் பெற்றுத் தன்னைக் கரும்புலி அணித்தலைவர்களுள் ஒருவனாக்கிக்கொள்கிறான்.

இப்பொழுது கரும்புலியாகவும், வேவு வீரனாகவும் தனது அனுபவங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுகின்றான். வரையறைக்குட்பட்ட முறையில் முடிவெடுக்கும் அதிகாரத்துடன் எதிரி முகாம்களினுள் ஊடுருவி இலக்குத்தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். முல்லைத்தீவு வெற்றியைப்போல், பூரண வெற்றியைத் தரக்கூடிய புறச்சூழலுடன் அமைந்திருப்பது பூநகரி இராணுவத்தளம். ஏற்கனவே அதனுடன் இவனுக்கிருந்த பரீட்சயம் காரணமாக அதனை வேவு எடுக்கப் புறப்படுகின்றான். அனுபவம் வாய்ந்த வேவுப்புலிக்கு இராணுவமுகாமொன்றின் காவலரணுக்கு அண்மையாகச் சென்று அதனுள் எட்டிப்பார்ப்பதென்பது திகில் நிறைந்த விருப்பிற்குரிய செயற்பாடு ஆகும். தனது பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஒரு காவலரணுக்கு உள்ளே எட்டிப் பார்க்கின்றான். இராணுவ நடமாட்டத்தைக் காணவில்லை. அடுத்த காலரணினுள்ளும் சென்று பார்க்கின்றான். அதுவும் அவ்வாறே காணப்படுகின்றது. சிறிது நேரத்திற்கு முன்னர்வரை இராணுவத்தினர் இருந்ததற்கான தடயங்கள் காணப்பட்டன. இவனுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டது. மெல்ல முகாமின் உட்பகுதிக்குள் செல்கின்றான். அம்முகாமின் வெதுப்பகத்தில் நெருப்புத்தணல் காணப்படுகின்றது. ‘பாண்களும்’ அவ்வாறே கிடக்கின்றன. ஆள் நடமாட்டம் தான் இல்லை. பூரணமாக விளங்கிவிட்டது. அங்கிருந்தவர்களுக்கான முன்னறிவிப்பு இன்றியே அம்முகாம் பின்வாங்கப்பட்டு விட்டது என்பது. இரவோடு இரவாக பலவாயிரம் இராணுவம், கடற்படையினர் இருந்த முகாம் வெறுமையாகிவிட்டது. இது எங்களுக்குத் தெரியாமல் இருந்து விட்டது? என தன்னுள் எண்ணியவன் தொடர்பெடுத்து தனது முகாம் பொறுப்பாளருக்கு நிலைமையை அறிவிக்கின்றான். மேலும் உறுதிப்படுத்தும்படி அவர் கேட்கதான் உறுதிப்படுத்தியவற்றைத் தெரிவித்தான். முகாம் பின்வாங்கும் முடிவெடுத்த முலோபாய முடிவுகள் எடுக்கும் எதிரித் தளபதிக்கு பாராட்டுக்களை தெரிவித்தபடி வெளிவருகின்றான்.

‘ஜெயசிக்குறு’ இராணுவ நடவடிக்கை மூர்க்கமுடன் தொடர்கின்றது. அதனைத் தடம்புரளச் செய்யும் தந்திரோபாய நடவடிக்கையாகவும் போராட்டத்தின் அடுத்த கட்டப் பாய்ச்சலாகவும் கிளிநொச்சி இராணுவ முகாம் வீழ்த்தப்பட வேண்டும். இந்நடவடிக்கையின் வெற்றியை உறுதிப்படுத்தவும்,

⇨



www.eelamview.com

## தூயவன்

⇨ வேகப்படுத்தவும் என கரும்புலிகள் போரணியொன்று ஆனையிறவு இராணுவத்தளத்தினுள் ஊடுருவியது. இவர்களின் இலக்காக ஆனையிறவு தளத்தினுள் குழப்பத்தினை ஏற்படுத்துவதன் மூலம் கிளிநொச்சி இராணுவத்தினருக்கான விநியோகத்தைத் தடுப்பது, கட்டளைகளைக் குழப்புவது என்பன அமைந்திருந்தது. கொமாண்டோ பாணியிலான உட்தாக்குதல் ஆரம்பித்துவிட்டது. பூட்டோவினால் எதிரி முகாமின் மையத்திலிருந்த தொலைத்தொடர்புப் பகுதி செயலிழக்கச் செய்யப்பட்டது. இவனது அணித்தலைவர்கள் வீரச்சாவடைய இவனும் இடது கையில் காயப்பட்டு என்பு முறிவிற்குள்ளாகினான். இதனால் சார்ச்சர் பட்டியை இழுத்துக் கொழுவித் தன்னைத் தானே தகர்த்து அழிக்கும் முயற்சி சாத்தியமற்றுப் போனது. எனவே தப்பிக்கும் முடிவெடுக்கின்றான். உள்ளே காயமடைந்திருந்த ஏனைய வீரர்களையும் வெளிக்கொண்டுவர இவனது தலைமைத்துவம் கை கொடுக்கின்றது. கிளிநொச்சியைக் கைப்பற்றும் அத்தாக்குதல் அப்போது வெற்றியடையாமல் போனது. எனினும் பெரும்பாலான கரும்புலிகள் வெற்றிகரமாக தமது இலக்கை நிறைவுசெய்து தளம் திரும்பியிருந்தனர்.

கை என்பு முறிவுக்காயம் மாறுவதற்காக சில காலம் மருத்துவமனையிலும் முகாமிலும் ஓய்வெடுத்தான். அக்காலப் பகுதியில் தன்னுடன் பணியாற்றி வீரச்சாவடைந்த கரும்புலிகள் பற்றி கவிதைகளையும் இசைப் பாடல்களையும் எழுதி வெளியிட்டிருந்தான். புலிகளின் குரல் வானொலியில் பல கவியரங்குகளில் இவன் குரல் ஒலித்திருந்தது. மீண்டும் பயிற்சிகள் எடுத்து அடுத்த தாக்குதலுக்கு தயாராகினான். மீண்டுமொரு முறை கிளிநொச்சி இராணுவத்தளம் தாக்கியழிக்கப்படும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு ஆதரவாக இம்முறையும் ஆனையிறவினுள் ஊடுருவியிருந்த கரும்புலிகள் அணியில் பூட்டோ காணப்பட்டான். அப்பொழுது பூட்டோவிற்கு பாம்பு கடித்து விட்டது. நச்சு இரத்தத்தில் கலக்க மரணம் இவனை நோக்கிவந்தது. எனினும் பகை முகாமினுள் பற்றையொன்றினுள் வைத்து விசமுறிப்பு மருந்து (ASV) ஏற்றப்பட்டது. மீண்டுமொரு முறை சாவிலிருந்து தப்பித்துக் கொள்ள தமிழீழம் ஒரு பெறுமதியான கரும்புலியை மீளப்பெற்றுக்கொண்டது. அத்திட்டம் வெற்றிபெற கிளிநொச்சி நகரம் விடுவிக்கப்பட, ஓ.அ.II வெற்றி உறுதிப்படுத்தப்படுகின்றது.

மீண்டும் கடின தொடர்பயிற்சிகளை மேற்கொள்கின்றான். அக்காலத்தில் அவசியம் தேவைப்பட்ட ஒரு வெற்றியைப் பெறுவதற்காக தலைவரின் ஆசிபெற்று நகரும் கரும்புலியணியில், இலக்கின் மீதான தாக்குதல் தொடுக்கும் பொறுப்பை ஏற்று இணைந்துகொள்கின்றான். இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அதிஉயர் பாதுகாப்புடன் பேணப்படும் மணவாளன்பட்டை எனும் இடத்தில் தரையிறங்கும் உலங்குவானூர்தியைத் தாக்கி அழிக்க வேண்டும். பல்வேறு சிரமங்களைத் தாண்டி குறித்த இடம்சென்று பகைவர்களுக்குள் ஓடிச்சென்று அவர்களுக்கு மத்தியில் நின்று அவர்களின் கண் முன்னால் தரையிறங்க முற்பட்ட உலங்கு வானூர்தியை வானில் வைத்தே 'லோ' உந்துகணையால் தாக்கியழித்து பயத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்து நிற்கும் எதிரிகளின் மத்தியில் இவனும் ஏனைய வீரர்களும் தப்பிவந்த செயலானது கரும்புலித் தாக்குதல் வரலாற்றில் புதிய அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டது.

இடைக்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை வேவு எடுக்கப் பணிக்கப்பட்டான். அங்கு மக்களோடு மக்களாகவும் கரந்துறைந்திருக்கும் 'கெரில்லா' வீரனாகவும் செயற்பட்டு பல பெறுமதியான வேவு தகவல்களைச் சேகரித்திருந்தான். களங்களினுள் செல்லும்போது முன்னும் களம் விட்டகலும்போது இறுதியாகவும் வெளிவருவது இவனது இயல்பான பண்பு. இவன் தலைமையில் சேகரிக்கப்பட்ட தகவல்களுடன் வன்னித் தளம் திரும்புமாறு பணிக்கப்பட்டான். இவர்களுக்கென ஒரு சாதாரண மீன்பிடி படகு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதில் இவனும் அறிவுக்குமரனும் ஏற முற்படுகையில் சற்று நிதானித்தவன் அத்திட்டத்தைக் கைவிடுகின்றான். இவரும் ஒன்றாக போய் ஏதாவது நடந்தால் இவ்வளவு நாளும் கடினப்பட்டு சேகரித்த தகவல்கள் செல்லாக்காசு ஆகிவிடும். ஆதலால் அறிவுக்குமரனை முதலில் போகச்சொல்கின்றான். படகில் ஏறியவனிடம் இரண்டு கைக்குண்டுகளைக் கொடுத்துவிடுகிறான். அந்த துர்ப்பாக்கிய நிகழ்வு நடந்தே விடுகின்றது. எதிரிப் படகுகள் அறிவுக்குமரனின் படகை வழிமறித்தன பகைவன் சோதனையிட முயற்சிக்கையில் அறிவுக்குமரன் குண்டுகளை வெடிக்கவைத்து தன்னையும் படகையும் அழித்துக்கொண்டான். பூட்டோ எடுத்த முடிவால் வேவுத்தகவல்கள் பத்திரமாக வன்னித்தளம் வந்து சேர்ந்தது. அவர்களின் கோட்பாட்டின்படி பூட்டோவின் தீர்மானமானது முற்றிலும் சரியானது எனினும் உணர்வு ரீதியாக பூட்டோவை இது பாதிக்கவே செய்தது. அறிவுக்குமரனுக்குப் பதிலாகத் தான் வந்திருக்கலாமோ என அடிக்கடி கூறிக்கொள்வான்.

'கரும்புலிகளின்' வளர்ச்சிப் போக்கில் இவனது பங்களிப்பின் காரணமாக கரும்புலிகள் சம்பந்தமான விதிமுறைகளை எழுதுவதிலும் அதனைப் பரீட்சிப்பதிலும் இயக்கம் இவனை ஈடுபடுத்தலானது. இவன் தனது நடைமுறைச் செயற்பாடுகளினூடாக கோட்பாடுகளை உருவாக்கினான். கரும்புலிகளுக்கான சத்தியப் பிரமாணம், பயிற்சிகள், ஒத்திகைகள், விதிமுறைகள் அடங்கிய மரபு சார் யாப்பை உருவாக்கப் பெரும் பங்களிப்பைச் செய்தான். இவனது தொடர் அனுபவமும் செயற்பாடும் காரணமாக கரும்புலிகளுக்கான இலக்கங்கள் ஒதுக்கப்படும்போது இவனுக்கு க.1 ஒதுக்கப்பட்டது. அன்று முதல் இவன் 'நம்பர் வண்' எனும் சங்கேத பாசையில் அழைக்கப்படலானான்.

**இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அதிஉயர் பாதுகாப்புடன் பேணப்படும் மாணவளான்பட்டை எனும் இடத்தில் தரையிறங்கும் உலங்குவானூர்தியைத் தாக்கி அழிக்கவேண்டும். பல்வேறு சிரமங்களைத் தாண்டி குறித்த இடம்சென்று பகைவர்களுக்குள் ஓடிச்சென்று அவர்களுக்கு மத்தியில் நின்று அவர்களின் கண் முன்னால் தரையிறங்க முற்பட்ட உலங்கு வானூர்தியை வானில் வைத்தே 'லோ' உந்துகணையால் தாக்கியழித்து பயத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்த நிற்கும் எதிரிகளின் மத்தியில் இவனும் ஏனைய வீரர்களும் தப்பிவந்த செயலானது கரும்புலித் தாக்குதல் வரலாற்றில் புதிய அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டது.**

பல்வேறு தரத்திலான போராளிகளுடனும் வயது வேறுபாடுடைய பொதுமக்களுடனும் இவன் பழகும் முறை வித்தியாசமானது. அந்தந்த வயதுக்காரர்களுடன் அவர்களின் குணாம்சங்களுடன் பழகினான். தனது அதிக ஓய்வு நேரங்களை சிறு குழந்தைகளுடனேயே செலவழித்தான். அவர்களுக்குச் சித்திரம் வரையப் பழக்குவதிலிருந்து பரீட்சைகளில் சித்தியடைய என்ன செய்யவேண்டும் என்பது வரை நடைமுறைச் சாத்தியமான வகையில் சொல்லிக்கொடுப்பான். எந்த நேரமும் இந்த நாட்டிற்காக வெடிக்கக் கூடிய கரும்புலி ஒருவனே தங்களுடன் பழகுகின்றான் என்பது அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது. எனினும் அதனை இவன் ஒருபோதும் ஒத்துணர்வைப் பெறுவதற்காகப் பயன்படுத்தியதே இல்லை.

ஓயாத அலைகள் IV வெற்றி பெறுவது அசாத்தியமானது. ஒரு வேவுப்புலி வீரனோ ஒரு கரும்புலி வீரனோ பகை தொடர் காவலரண்களைக் கடந்து உள்நுழைவது முடியாமல் போனது. உள் நிலைமைகளை அவதானித்து உட்புறமாகத் தாக்குதல் தொடுத்தால் மட்டுமே எதிரி குழப்பமடைவான். பலரால் இயலாமல் போகையில் மீண்டும் பூட்டோ தெரிவானான். கரும்புலிகளால் ஒரு முன்முயற்சி இயலாமல் போனது எனும் வார்த்தையை கேட்கவே அவன் விரும்பவில்லை. பொதி செய்யப்பட்ட சிறு ஆயுதங்களுடனும், உணவுப் பொருட்களுடனும் கடலினுள் இறங்கினான். கரையோரமாக நீண்ட தூரம் நீந்திச்சென்றான். கடற்கரை பூராகவும் இராணுவமும், கடலில் கடற்படையும் அதியுசார் நிலையில் நின்றது. கடலினுள் பகைப் படகுகள் ரோந்து செய்த வண்ணம் இருந்தன. கரையேறுவதோ கடலில் ஆழம் செல்வதோ சாத்தியமற்றதானது. மீண்டும் தளம் திரும்புவதை அவன் கற்பனைகூடச் செய்யவில்லை. செய் அல்லது செத்துமடி என்பதுவே இவனது தாரக மந்திரமானது. சாதகமான சூழலுக்காகக் கடலில் மிதந்தபடியே காத்திருக்கலானான்.

பாரங்களைக் குறைப்பதற்காக உணவுப் பொருட்களையும் ஆயுதங்களையும் கழட்டிவிடலானான். தொலைத்தொடர்பு சாதனமும் 'G.P.S'ம் குப்பியும் மட்டுமே அவனிடம் மிஞ்சியிருந்தது. இரண்டு நாட்களாக கடல் நீரில் மிதக்கலானான். பசியும், தாகமும், கடல் நீரின் உப்புச் செறிவும் அவனைச் சித்திரவதை செய்தது. தண்ணீரில் மிதந்தபடி தண்ணீர் இன்றித் தாகத்தால் தவித்தான். அவனையும் மீறி வெளிவந்த கண்ணீரைத் தண்ணீராகச் சுவைத்தான். தாயையும் தலைவனையும் நினைத்து நினைத்து தாங்குதிறனை வளர்த்து, யுகங்களாகும் கணங்களைக் கழித்தான். பூட்டோ தடயமின்றி வீரச்சாவடைந்து விட்டானோ எனப் பெரும்பாலானோர் கருதத் தொடங்கினர். ஒருவாறு எதிரி முகாமிற்குள் புகுந்துகொண்டான். புற்களில் நனைந்திருந்த பனி நீரை நாக்கால் நக்கி நாக்கிற்கு தண்ணீர் காட்டிக்கொண்டான். உட் சென்றவன் தொடர்பெடுத்து தான் உயிருடன் இருப்பதை உறுதிப்படுத்தினான். அவன் கொடுத்த ஆள்கூற்றுத் தளங்கள் மீது எங்கள் ஆட்லறிகள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின. பத்திற்கு மேற்பட்ட ஆட்லறிகளும் பல பல்குழல் பீரங்கிகளும், ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான எறிகணைக் களஞ்சியங்களும் அழித்தொழிக்கப்பட்டன. உணவின்றி, ஆயுதமின்றி, பூஞ்சணம்பிடித்த பூசனிக்காயைத் துண்டுதுண்டாகச் சாப்பிட்டவாறு, உயிரையும் இயங்கு சக்தியையும் தக்க வைத்தவாறு பலநாள் பணி தொடர்ந்தான். தனியான இவன் பகைத் தளத்தினுள் கரும்புயலாகச் சுழன்றான். பெரும் படையணி புகுந்ததாக செயலாற்றி நாசம் ஏற்படுத்தினான். தொலைத் தொடர்பை இடை மறித்ததில் பூட்டோ தனியாகத்தான் செயற்படுகின்றான்



என்பதை பகைவன் அறிந்துகொண்டான். இவனைப் பிடிப்பதற்கு பலநூறு இராணுவத்தினரையும் பல உந்துருளி அணிகளையும் களத்தில் இறக்கி களைத்துப் போனான் எதிரி. இறுதியாக இவனை மீட்டுவர இன்னொரு கரும்புலியணி உள்நுழைக்கப்பட்டது. அப்பிரதேசம் இவனுக்குத் தண்ணிபட்ட பாடாக இருந்ததால் அவர்களையும் அழைத்துக்கொண்டு இருபத்தியாறாம் நாள் இவன் வெளியில் வந்தான். மெலிந்து, நோய்வாய்ப்பட்டு சிறிதளவு திரவ ஊடகங்களைக் கூட உட்கொள்ள முடியாத அளவிற்கு உதடுகளும் நாக்குகளும் வெடித்து, எலும்பும் தோலுமாக அவன் வெளிவந்த காட்சி காண்பவர் கண்களைக் கசிய வைத்து. தொடர்ந்து நியூமோனியாக் காய்ச்சலுக்கு உள்ளானான். சிலவாரங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மீண்டவன் மீண்டும் பணிக்கு ஆயத்தமாகினான்.

அக்காலப் பகுதியில் இவன் முள்ளியவளைப் பகுதியில் தங்கியிருப்பதை அறிந்து இவனது தாய் மகனைச் சந்திப்பதற்காக மன்னாரில் இருந்து பேருந்தில் வந்திறங்கினார். அங்கு தென்பட்ட பெண் போராளிகளிடம் 'பூட்டோ தங்கியிருக்கும் மருத்துவமுகாம் எது'வென கேட்க'யாரு'"கரும்புலி பூட்டோவா!" என அவர்கள் கேட்டு முகாமிற்கு வழிகாட்டிவிட்டனர். தாயும் மகனும் சந்தித்த அந்தக் கணங்கள் அவர்களுக்கே உரித்தானவை. பலவருடங்களாக மகன் கரும்புலி என்பது தாயிற்குத் தெரியும். தாய்க்குத் தெரியும் என்பது மகனிற்கும் தெரியும். ஆயினும் இருவரும் ஒருபோதும் அதுபற்றிக் கதைத்தது இல்லை. மகன் தான்பட்ட கடினங்களைக் கவிதைகளாக எழுதியிருந்தான். அவற்றை வாசித்த அன்னையின் கண்கள் நீர் சொரிந்ததை அருகிருந்தவர்கள் பார்த்தார்கள்.

அடுத்த பணிக்காக இவன் தயாராகிக் கொண்டிருக்கையில் தலைவரிடம் இருந்து தகவல் வருகின்றது. உலங்குவானூர்தி தாக்குதல் சம்பவத்தைப் படமாக எடுக்கும்படி பணித்திருப்பதாகவும் அதில் அவன் செய்த பாத்திரத்தை இவனையே நடிக்கும்படியும். விடுதலைப்புலிகள் சொல்லுக்கு முந்திச் செயலை வைத்திருப்பவர்கள். செய்தவற்றையும் சொல்லாமல் விடுபவர்கள். இக்குணாம்சத்தினால் வரலாறு திரிந்துவிடக்கூடாது என்பதற்காக தாக்குதல் செய்தவனையே அப்பாத்திரமாக நடிக்கச்சொன்னார்கள். வன்னிமண் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டிருந்த காலம். திரைப்படம் எடுப்பதற்கான போதிய வளங்கள் இல்லை. ஆயுத தளபாடங்களையும், துணைப் பாத்திரங்களுக்குத் தேவையான ஆளணிகளையும் இவனே ஒழுங்குபடுத்தி படப்பிடிப்பை விரைவாக்கினான். படப்பிடிப்பின் நிமித்தம் பல்வேறு தரப்பினர்களுடனும் பழகவேண்டி ஏற்பட்டது. படப்பிடிப்பு நிறைவேறும் நிலையில் மீண்டுமொரு சிறு தவறு ஏற்பட்டது. உள்ளூர் முகவர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பூட்டோ விளக்கம் கோரலுக்கு உள்ளாக்கப்பட்டான். பலர் எதிர்பார்த்ததற்கு மாறாக தேச நன்மைக்காக உருவாக்கப்பட்ட பொறிமுறைக்கு ஒத்துழைப்பதையும் தனது கடமைகளில் ஒன்றென வெளிப்படுத்தினான். இவன் நடித்த திரைப்படம் 'புயல் புகுந்த பூக்கள்' என வரலாற்றுப் பதிவானது. இக்காலப் பகுதியில் வெளிச்சம் பவள இதழில் இவனது உள் நடவடிக்கைகள் பற்றிய ஒரு சம்பவத்தை புயலவன் எனும் பெயரில் எழுதியிருந்தான்.

தொடர்ந்து தேசத்திற்கான இவன் பணி தியாகத்தின் உச்சம் நோக்கி வேக மெடுத்தது. மறைமுகக் கரும்புலியாகச் செயற்படத் தொடங்கினான். அரசியல் தெளிவும், இலட்சியப் பற்றும், செயல்திறனும், நிதானமும் உள்ள போராளியாக இவன் ஒளிவீசினான். இவனது பன்முகத்திறமை மறைமுகக் கரும் புலிகளை பலமடங்காகப் பலம்பெறச் செய்தது. இவனது சிலவருடச் செயற்பாடுகள் வெளித்தெரிய முடியாதவையாகின. ஆனால் தமிழினம் அதனை அனுபவித்துக்கொண்டிருக்கின்றது. சுதந்திர தமிழீழத்தின் பலமான அத்திவாரத்தினுள் இவனது உழைப்பு கலந்திருக்கின்றது.

மாவிலாறைச் சாட்டாக வைத்து எதிரி யுத்தத்தைத் தொடங்கினான். முகமாலையைத் தாண்டி ஆனையிறவு நோக்கி எதிரி முன்னேறத் திட்டமிட்டிருக்கிறான். சம்பூர் மீது பெரும் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றான். இராணுவத்தை திசைதிருப்பவும் குழப்பவும் அவசரமாக நடவடிக்கையில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பலமுறை தலைவனுக்கு தடைநீக்கியாகச் செயற்பட்ட பூட்டோ இம்முறையும் முதல் தெரிவானன். தலைவருடனும், தளபதிகளுடனும் தொடர் சந்திப்புக்களை மேற்கொண்டான். ஓகஸ்ட் ஆரம்ப நாட்களில் ஒரு நாள் இரவு இரண்டு மணியளவில் தலைவரிடம் இறுதி விடை பெற்றுக்கொண்டான். மறைமுகக் கரும்புலி மீண்டும் தரைக் கரும்புலியாக யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தான். பாரிய இராணுவத் திருப்புமுனைச் சாதனைகள் எதிர்பார்க்கப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் சில நாட்களில் செய்திவந்தது. 'நம்பர் வண்' தொடர்பு இல்லை என. இம்முறையும் தப்பிவருவான் என அவனைத் தெரிந்த அனைவரும் நம்பியிருந்தனர். ஆனால் பூட்டோ வீரச்சாவு உறுதியான செய்தியுடன் 2006ஆம் ஆண்டு மாவீரர் தினம் கொண்டாடப்பட்டது. ஒரு வேவுப் புலி நிபுணனை, வரைபடக் கலைஞனை, ஒரு கரும்புலிக் கவிஞனை, பாடலாசிரியனை, எழுத்தாளனை, நடிகனை, உச்சவினைத்திறனுடைய அப்பழுக்கற்ற செயல்வீரனை, போராளிகளுக்கான ஒரு "உதாரண புருசனை" பட்டறிவால் உருவான போரியல் ஞானியை, எல்லாவற்றுக்கும் மேலாக தேசத்தையும், தலைவனையும் நேசித்த ஒரு "நம்பர் வண்"ஐ தமிழீழம் பௌதீக ரீதியாக இழந்துவிட்டது. எனினும் தலைமுறைகள் கடந்து கடத்தப்படும் அவனது செயல் வீச்சுக்களின் விளைவாக சுதந்திர தமிழீழம் விடுதலை பெற்று, வளம்பெற்று தலைநிமிர்ந்து எங்கள் பெயர் சொல்லி வாழும்.

குறிப்பு :- இவனது செயற்பாடுகளில் சிலவற்றை மட்டும் இப்பகுதி கோடிகாட்டுகின்றது. காலம் கைகொடுக்கையில் இவன் வீரகாவியமாக விரிவான். ●




www.eelamview.com



# பலத்தோடு இருந்தால் மதிப்பார்கள்
# நிலத்தோடு கிடந்தால் மிதிப்பார்கள்

சுற்றிச் சுழன்றேறி வருகின்றன
நரமாமிச உண்ணிகள்.
சம்பூரைத் தின்று சமித்து,
வாகரையை வளைத்து முடித்து,
குடாநாட்டின் குரல்வளையை நெரித்தபடி
முகமாலையின் முன்னரணேற முயல்கின்றன
உண்ணிகள்.
வன்னிதான் உண்ணிகளின் 'நம்பர்வண்' இலக்கு
பாதைகளை அடைத்துப் பட்டினி போடுவதால்
விடுதலை இதயங்களின் துடிப்பை நிறுத்தலாமென
உண்ணிகளை ஏவுவோர் உறுதியாக நம்புகின்றனர்.
கொட்டிக் குவிக்கும் ஆயுதங்களை மட்டுமல்ல
பட்டினியையும் சேர்த்தே பயன்படுத்தப்போகின்றனர்.
விடுதலையின் விகர்சிப்பை விழுத்துவதற்கு
பட்டினியையும் பயன்படுத்திய சிலர்
முன்னர் வெற்றியும் கண்டுள்ளனர்.
இதைக் கவனத்திலெடுக்காது கண்துயில்வோமெனில்
கையேந்தியபடி கரையொதுங்கவும் நேரலாம்.
ஒரு கையிற் துப்பாக்கியும்
மறு கையில் மண்வெட்டியையும்
வியட்னாமியர் ஏந்தியது விளையாட்டுக்கல்ல.
குண்டுவீச்சுக்குக் கீழும்
வியட்னாமில் குலைதள்ளின வாழைகள்
ஒருபோதும் வேலைநிறுத்தம் செய்யவில்லை வயல்கள்.
போருக்கு உழைத்த பொழுதுகள்போக
ஊணுக்கும் உழைத்தனர் அவர்கள்
இன்று விடுதலை வயலை உழுகின்றனர் செருக்கோடு.
வீழமாட்டோமெனும் நம்பிக்கை மட்டுமல்ல
ஆழமான அடித்தளமும் வேண்டும் விடுதலைக்கு.
தன்னைத்தானே தாங்கும் வலுவுள்ளவனே
எந்தப் புயலிலும் இடிந்துவிழமாட்டான்.
உடனே உழுது பயிரிடத்தொடங்கு,
உன்னால் முடிந்த உரமெறிந்துகொள்,
அறுவடை செய்,
அவதானமாகப் பேண்,
கத்தரியை வற்றலாக்கு,
கிழங்கை ஒடியலாக்கு,
கீரிமீனைக் கருவாடாக்கு,
கேக்கை நிறுத்து,
பேக்கரியில் பாண்மட்டும் போடு,
வீட்டுக்குப் பத்து மரவள்ளி நடு,
வேலியில் முல்லையும், முசுட்டையும் படரவிடு,
நெல்லை அட்டாளையில் அடுக்கு,
அன்றாடத் தேவைக்கு மட்டும் அரிசியாக்கு,
நாளை வந்தவனிடம் கையேந்துவதிலும் பார்க்க
இது இழிவானதல்ல.
வியாசனுக்கு மேற்கூரை விழுந்துவிட்டதென்று
என்னை விசித்திரமாகப் பாராதே.
பெரும்போர் மூளும் தருணத்தில்
பிள்ளைகள் கஞ்சியாவது குடிக்கவேண்டாமா?
போரைத் தாங்கும் புலிகளிடமே
இந்தப் பாரத்தையும் சுமத்திவிடாதே
எழுந்துபோ ஏதேனும் செய்.
வீட்டுக்கொருவரை விடுதலைச்சேனை கேட்பது
சும்மா விளையாடுவதற்கல்ல.
அள்ளிச் சென்று சாவுக்குக் கொடுக்கவுமல்ல.
இப்போது பெறும் பலத்திற்தான்
எதிர்காலமே இருக்கிறது.
உலகம் ஓடிவரும்
உனக்கு ஒத்தாசை செய்யுமென நம்பாதே
அவர்கள் பலத்தோடிருந்தால் மதிப்பார்கள்
நிலத்தோடு கிடந்தால் மிதிப்பார்கள்
இதுதான் உலகத்தின் புதிய ஒழுங்காற்றுகை.
ஒன்றை மட்டும் நெஞ்சில் எழுதிவை
வென்றால் நாங்கள் அரியணையிலிருப்போம்
தோற்றால் தொல்பொருளகத்திற் கிடப்போம்
மூசியெழுவதைத் தவிர வேறுவழியில்லை இப்போது.
கேட்டு யாசிப்பதல்ல விடுதலைக்கான பலம்
அது ஈழத்தமிழர் எல்லோரினதும் காலக்கடமை.
தினசரி தமிழர் வீடுகளிற் சாவு,
நாளாந்தம் காணவில்லையேயெனும் கதறல்,
பெண்களைப் பூச்சிகளாக நசுக்கும் பெருந்துயர்,
திசையளந்து வருகிறது திக்கற்றோர்குரல்
நீ மட்டும் தப்பியோட எத்தனிப்பது குற்றமில்லையா?
ஒற்றை வரலாறு கூட அற்றவராக இருந்தோம்
இந்நாள் வரையும்.
இனியும் வேண்டாம் இந்த இழிவு
இனியும் வேண்டாம் இந்த அழிவு.
ஒன்றில் புலியாக எழு
அன்றேல் சருகாக விழு
சோற்றுப் பிண்டமாகச் சும்மா தெருவிற் திரியாதே.
இந்த மண்ணிற் பிறந்ததற்காகவே
மரங்கள் காயப்படுகின்றன,
மாடுகள் மரணிக்கின்றன,
தெருக்கள் சிதைக்கப்படுகின்றன
மண்ணுக்குரிய மனிதன் மட்டும்
மறைந்து திரிகின்றான்.
போதும் போர்வையை மடித்துவை
விழிதிறந்து வெளியேவா.
உண்ணிகளுடன் சேர்ந்து பெருகுகின்றன
ஒட்டுண்ணிகள்.
பெற்றதாயையே ஏறிமிதிக்கின்றன பேய்கள்
எல்லாக் கூத்துக்களுக்கும் இந்தமண் அரங்காகிவிட்டது.
இன்றைய பொழுதை எடுக்காமலும்
நாளைய பொழுதைப் பிடிக்காமலும்
சனிபகவானுக்கு எள்ளெண்ணை எரிப்பதற்கு
இது திருநள்ளாறு அல்ல
தமிழீழம்.
இங்கே பிறந்ததுக்கும்
இருந்ததுக்கும்
நாளை இறப்பதற்கும் கூட ஒரு வரலாறு வேண்டும்.
எமது விடுதலை என்பது எமக்கானதல்ல
அது அடுத்த தலைமுறைக்கானது.
கையிலுள்ள 'காட்ஸ்'சை வைத்து
'கம்மாரிஸ்' அடிப்போம்
நாளை நமதென்ற நம்பிக்கையில்.
ஆழக்கடலுக்கு அப்பாற்தான் அக்கரை கிடக்கிறது
நீந்தப் புறப்பட்டால் நீ கரையடைவாய்
இல்லையே இக்கரையிற் கிடந்தே
இல்லாமற் போவாய்.
பேசிப்பேசி பயனற்றதாகிக்
கழிந்துபோனது காலம்.
ஊதி ஊதி நெருப்புலை மூட்டியபடி
உள்ளான் எம்தலைவன்.
வருவாயெனும் நம்பிக்கையிற் காத்திருக்கிறது
வாசலின் வல்லமை
என்ன செய்யும் உத்தேசம் உனக்கு?
தீயாயெழுந்து திரிவோமெனிலோ
திசைகள் கைகட்டும் – அட
தெருநாயெனவே திரிவோமெனிலோ
எறும்பும் தலைகுட்டும்
சாவே வரினும் தளராதிருந்தால்
வாழ்வாய் அதுமாறும் – எம்
தாயகம் மீட்கும் போரிடை வீழ்ந்தால்
தலைமுறை எமையேந்தும்.

உலைக்களம்



**வியாசன்**